களம் 7

ISBN: 1328-1623

# கலப்பை

ஏர் 4



Kalappai 28 டிசம்பர் 2001 Aus. $2.50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SAI DRIVING SCHOOL

**Experience Instructor &**

## SAI SCHOOL TRANSPORT SERVICE

**Experienced Driver**

Your children are home on time after school

**to & from**

**Homebush public school, Homebush boys school & Strathfield girls high school**

**The transport services are from the following areas: Auburn, Lidcombe, Flemington, Homebush, Strathfield and other nearest areas**

Contact: ANANDARAJAN(Raj)

**Phone: 9763 7515 / 9763 1620 Mobile: 0411 091 013**

# AMUTHA SURABHI FOOD BAR

(In a new Location)

FOR ALL KINDS OF SOUTH INDIAN & SRI LANKAN FOOD & SNACKS

DINE IN, TAKE AWAY OR HOME DELIVERY

(Addl. Charges apply)

CATERING AVAILABLE FOR SPECIAL EVENTS

**Tel: (02) 9748 1841, 9737 9884 (H)**

164 Parramatta Road, Auburn N.S.W. 2144



களம் 7 ஏர் 4

**KALAPPAI**

மனித மனத்தை உழுகின்ற
"கலப்பை"
உலகத் தமிழர்தம் உணர்வை
உயர்த்தி நிற்கும்
'கலப்பை',
சிட்னி பல்கலைக்கழகத்
தமிழ்ச் சங்கத்தின்
காலாண்டுச் சஞ்சிகை

தனிப்பிரதி :- Aus. $2.50
**ஆண்டுச்சந்தா**
உள்நாடு :- Aus. $10.00
வெளிநாடு :- Aus. $20.00

பிரசுரிக்கப்படாத படைப்புகளைத் திரும்பப் பெற இயலாது.

ஆசிரியர் குழுவுடன் தொடர்பு கொள்ள.....
*Tele:* (02) 9896 6266

**"KALAPPAI"**
Sydney University Tamil Society
P.O. Box 40, Wentworth Bldg.,
University of Sydney, NSW 2006
AUSTRALIA
*Email:*
**kalappai@yahoo.com**
Internet Web Site:
**www.tamilaustralian.com/sydney/suts/**


# உள்ளே.....


மைல்க் கல்.....2
தகுமோ இது தகுமோ.....4
ஈழத்தில் இசை வளர்த்தோர் .....6
அந்தக்காலத்து யாழ்ப்பாணம் .....7
Unifund கலைக்கதம்பம் 2001.....11
சிட்னி பல்கலைக்கழக தமிழ்ச் .....14
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள்.....18
பரிசுப் பட்டியல் 2001.....19
மகனுக்குச் செய்தது சரியா? .....22
தங்கைக்காக.....26
உதயசூரியன்-வெளிச்சவீடு - ஒரு தேர்தல்.....32
இசைக் கலை .....36
முரண்பாடுகள்.....38
பேர் பெற்ற இலக்கிய விவாதம்.....39
பாலியல் கல்வி.....45
காக்கைச் சிறகினிலே நந்தலாலா .....46
இலங்கை வேந்தன் எதிர் அஸ்தனா.....56
சமகால சதுரங்கம் .....62



**Proudly sponsored by University of Sydney UNION**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைல்க் கல்

தன் சொந்த நாட்டைப் பற்றியும் தன் தாய்நாட்டின் கலாசாரம் பற்றியும் ஒரு சராசரி குடிமகன் தெரிந்து வைத்திருக்க வேண்டியது கடமை மட்டுமல்ல பெருமை கூடத்தான். எமது தாய்நாட்டைப் பற்றியும், மொழியைப் பற்றியும் தெரியாமல் வளர்ந்துவரும், தெரிந்துகொள்ள ஆசைப்படும் இளைஞர்களும், குழந்தைகளும் அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழ் சமுதாயத்தில் வாழ்ந்து வருகின்றார்கள். தமது மொழி, காலசாரம் என்பவற்றைப் பற்றிய ஆர்வமும், அதை அறிந்துகொள்ளவேண்டும் என்ற துடிப்பும் அவர்களிடையே பரவிக்காணப்படுகின்றது.

A man should know something of his country too, before he goes abroad

-Laurence Sterne-

இங்கிருக்கின்ற பல்கலைக்கழகங்களில் கல்விகற்கும் மாணவர்கள் தங்கள் மொழியின் பெயரால் அந்தந்தப் பல்கலைக்கழகங்களில் தமிழ்ச்சங்கங்கள் அமைத்து பல்வேறுபட்ட சேவைகளைச் செய்து வருகின்றார்கள். தமிழ்மொழியைப் பேணிக்காக்க வேண்டும், தாய்நாட்டைக் கட்டியெழுப்பவேண்டும் என்ற ஒரே உணர்வு எல்லாரிடமும் பொதுவாக மேலோங்கியிருக்கின்றது.

இவ்வேளையில் சிட்னிப்பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் தனது பத்தாவது வருட பூர்த்தியைக் கொண்டாடிய களிப்பில் ஆழ்ந்து நிற்கின்றது. கலப்பை சஞ்சிகையும் தனது 7வருடத்தைப் பூர்த்தி செய்யும் ஆர்வத்துடன் காத்திருக்கின்றது. இந்தத் தமிழ்ச்சங்கத்தின் பத்துவருட வெற்றிக்குக் காரணம் யார் என்ற கேள்வியைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டிய தேவை உள்ளது. எவ்வாறு இவர்கள் இத்தனை வருடம் இதைச் சாதித்தார்கள் என்ற கேள்விக்கும் பதில் சொல்ல வேண்டிய கடமை எமக்கு இருக்கிறதல்லவா?







யார் இந்த வெற்றிக்கு மூலகாரணம் என்ற கேள்வியைத் தவிர்த்து, எது இந்த வெற்றிக்கு அடிகோலியது என்ற கேள்வியை வினவுவது சாலப் பொருத்தம். ஆம் இந்த வெற்றிக்கு மூலகாரணம் என்ன.
விடாமுயற்சியா? கடின உழைப்பா? சேவைமனப்பான்மையா?

இதற்கு விடை ஒன்றுதான். மாணவர்களிடையே இருந்து வருகின்ற ஒற்றுமையும், உடன்பாட்டு மனப்பான்மையுந்தான். கடந்த பத்துவருடங்களாக ஆரம்பித்தபோது எப்படி இருந்ததோ அதே உறவுகளுடன் இன்றும் மாணவர்களின் பங்களிப்பும், ஒத்துழைப்பும் இருந்து வருகின்றது. இது தனியாக சிட்னிப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கத்தினை மட்டும் அல்ல, சிட்னியில் வாழ்கின்ற பல்கலைக்கழக தமிழ் மாணவர்களையும், இதர தமிழ் இளைஞர்களையும் குறிப்பிட்டுக் கூறலாம்.

ஒரு தமிழ்ச்சங்க விழாவில் அந்தப் பல்கலைக்கழக மாணவர்கள்தான் பங்குபற்றவேண்டும் என்ற நிலை இருப்பதாக இல்லை. மற்றைய பல்கலைக்கழக மாணவர்கள் சிட்னிப்பல்கலைக் கழகத் தமிழ்ச்சங்க நிகழ்வுகளில் ஆண்டுதொரும் பங்குபற்றிச் சிறப்பிப்பது இதற்குச் சான்று. இந்த மாணவர்களின் மத்தியில் இருக்கின்ற இந்த உறவுகள், நட்புகள் தொடருமாயின் அவுஸ்திரேலியாவில் தமிழ்க்கல்வியும், கலாச்சாரமும் வளர்ந்து கொண்டேயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

நெஞ்சில் உரமும், நிமிர்ந்த நடையுமாய் இந்த இளைஞர்கள் தொடர்ந்து செல்வது மகிழ்ச்சியூட்டுவதாக இருக்கின்றது. இனிவரும் சந்ததியினரும் இதை நிச்சயம் முன்னெடுத்துச் செல்வார்கள் என்பதில் ஐயமில்லை. இளைஞர்களே உங்கள் முயற்சி வெற்றியளிக்கும். நன்னோக்குச் சிந்தனைகள், நன்னோக்க ஆக்கங்கள் எமது சமுதாயத்தைக் கட்டியெழுப்பும்.

If you are standing straight, don't worry if your shadow is crooked

*- Chinese proverb.*

நல்லமுயற்சிகள். நல்ல சிந்தனைகள். நல்ல சமுதாயத்தைக் கட்டியெழுப்பும். இளைஞர்கள் இன்னும் சாதிப்பார்கள்.

ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# தகுமோ இது தகுமோ

வராதோ என்று வந்துதித்த கனவுகள்
வந்தும் வெறுமையாக ஆனதோ?
தராதோ என்று தந்திட்ட இன்பங்கள்
தங்கியும் தாளாமற் போனதோ?
படியாதோ என்று பார்த்த பார்வைகள்
பாதியிலே மாறுவதும் சதியோ?
விடியாதோ என்று விடுத்த வினாக்கள்
விடையிலாக் கேள்வியாவதும் விதியோ?
போகாதே என்ற பொன்னான உறவுகள்
பொய்யாயும் போவதும் சரியோ?
மாறாதே என்ற மறுவற்ற நினைவுகள்
மங்கியும் மண்ணாவதும் முறையோ?
அலராதோ என்ற ஆனந்த நினைவுகள்
அரும்பிலே ஒடிவதும் நிறைவோ?
கனியாதோ என்று கலந்த உணர்வுகள்
கானலாயும் கரைவதும் தகுமோ?

மனோ ஜெகேந்திரன்






# THURAI RAJAH LAWYERS

## THE CHAMBERS

LEVEL 11, 370 PITT STREET, SYDNEY NSW 2000

APPOINTMENTS CALL: (02) 9267 8810

- Administrative Law
- Business Agreements
- Banking / Finance
- Bankruptcy
- Commercial Leases
- Criminal Matters
- Corporation Law
- Debts / Insolvency
- Environment Law
- Family Law
- General Legal Advice
- Immigration Problems
- Public Liability Claims
- Personal Injuries & Damage Claims
- Power of Attorney
- Real Estate Sales & Purchases
- Small Business Advice
- Traffic Offences
- Trade Practices Law
- Will Probates & Estate Claims
- Workers Compensation

**CONVEYANCING**

When it comes to buying or selling a property do not make a move without a solicitor. Conveyancing is much more than paper work!

**LITIGATION**

We advise we negotiate we prepare and arrange court proceedings for all areas of litigation.

**IMMIGRATION**

We accept instructions and offer complete migration service

APPOINTMENTS CALL: (02) 9634 1170
70 COUNTY DRIVE, CHERRYBROOK NSW 2126

THAMBIPILLAI THAMBITHURAI THURAIRAJAH LLB GRA LEG PRA • SOLICITOR OF THE HIGH COURT OF AUSTRALIA • SOLICITOR OF THE SUPREME COURT OF NEW SOUTH WALES • ATTORNEY AT LAW OF THE SUPREME COURT OF SRI LANKA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில் இசை வளர்த்தோர் — கட்டுரை – 6

# பண்ணிசைக் கலைஞர் வேல்சாமி

*காலஞ்சென்ற கே எஸ் பாலசுப்பிரமணிய ஐயர் அவர்களால் 70ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் எழுதப்பட்டது.*



பொதுவாக இசை எல்லோரையும் மயக்கும் தன்மையுடையது. வெறும் இசையைவிட, சொற்களோடு ஒன்றிவரும் இசை விசேஷமானது. நாம் கருத்து விளங்கி அனுபவிக்கக்கூடிய முறையில் அச்சொற்கள் அமையுமாயின் அதன் சிறப்பை விவரிக்கவேண்டியதில்லை. தமிழ் மக்களாகிய எமக்கு அரிய பொக்கிஷமாகக் கிடைத்துள்ளவை திருமுறைப் பாடல்களே. அருட்பாடல்களாகிய இப்பாடல்களை இசையுடன் சேர்த்து பக்தியுடன் பாடினால் பாடுபவருக்கும் கேட்பவருக்கும் இன்பத்தைக் கொடுக்கும்.

ஈழத்தில் திருமுறைப் பாடல்களைப் பக்தியுடன் கேட்போர் இன்புறும் வகையில் பாடுபவரின் எண்ணிக்கை குறைவு. இதற்குக் காரணம், தமிழ்நாட்டில் இருப்பதுபோல் இங்கு ஆதீனங்களோ தேவாரப் பாடசாலைகளோ சிறந்த ஓதுவார்களோ இல்லாததே. பெரும்பாலும், நம் நாட்டில் பாடுபவர்கள், இந்தியாவிலிருந்து இங்கு வரும் ஓதுவார்களின் பண் ஓதுதலைக் கேட்டும் அவர்களிடம் பாடங்கேட்டும் பண்ணிசை பாடிவருகிறார்கள். ஒரு சிலர் இந்தியா சென்று தக்க ஆசிரியரிடம் முறைப்படி கற்று, அதன்படி திருமுறைகளைப் பாடிவருகின்றனர்.

பக்திப்பாடற் பிரியர்களையும் வானொலி நேயர்களையும் பல ஆண்டுகளாகத் தமது இன்னிசையால் மயங்க வைத்தவர்களில் ஒருவர் அளவெட்டியைச் சேர்ந்த திரு அ. **வேல்சாமி** அவர்கள். சிறுவயதுமுதல் இசையில் ஆர்வங்கொண்டு, இசைக்கச்சேரிகள் நடைபெறும் இடங்களுக்கெல்லாம் சென்று, தமது இசை ஞானத்தைப் பெருக்கிக்கொண்டார்.

பள்ளிக்கூடப் படிப்பு, சர்வகலாசாலைப் படிப்பு ஆகியவை முற்றுப்பெற்ற பின்னரும் மின்சாரப் பொறியியலாளர் பதவி வகிக்கும்போதும் இவர் திருமுறைப்பாடல்களையும் இசையையும் மறந்திருக்க வில்லை. இயற்கையிலே தெய்வபக்தியும் நல்ல பண்பும் இவரிடம் காணப்பட்டன. கொழும்பில் கடமையாற்றும்போது நல்ல ஆசான்களிடம் முறைப்படி பயின்று இசையறிவை வளர்த்துக் கொண்டார். இசையிலிருந்த ஆர்வமிகுதியால், தம் ஓய்வு நேரம் முழுவதையும் இசை பயில்வதிலும் சாதகம் பண்ணுவதிலும் கழித்தார். இறைவன் அருளிய குரலும் இவரது

**17ம் பக்கம் பார்க்க**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அந்தக்காலத்து யாழ்ப்பாணம்

~ முதியோன் ~

புலம்பெயர்ந்த வேளையிலும், தாயக நினைவுகளை சுமந்து கொண்டிருக்கும் நாம், பல பழக்கவழக்கங்களை, பண்டைய நடைமுறைகளை, நிகழ்வுகளை மறந்துவிடுகின்றோம். ஆனால் அவற்றை மீட்டுப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கும்போது ஆனந்தமடைகின்றோம். அல்லது உணர்ச்சிவசப்பட்டு விடுகின்றோம். ஏனென்றால் அவை நாம் வாழ்ந்த வாழ்க்கை, நாம் வளர்ந்த தேசம். அந்த அனுபவத்தில் என் மனதில் எழுகின்ற பல விடயங்களையும் கலப்பையினூடாக உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகின்றேன். இங்கு வாழ்ந்து வரும் பலருக்கு இந்தப் பழைய விடயங்கள் புதுமையாகக்கூட இருக்கலாம். சிலருக்கு தெரிந்த விடயமானாலும், மீண்டும் அவற்றை வாசித்தறியும்போது அந்தநாள் ஞாபகம் நெஞ்சில் வந்துவிடும்.

## *ஐரோப்பியர் ஆட்சியில் :*

இலங்கையில் ஆங்கிலேயரின் ஆட்சி வந்த பிறகு பெருமளவில் இலங்கையருக்கும் அரசாங்க உத்தியோகங்கள் (White-collar Jobs) கிடைத்தன. தலைமைப்பதவிகளை ஆங்கிலேயரே வைத்துக்கொண்டு, மற்றும் அவர்களின் அதிகாரத்தின் கீழுள்ள சிறிய, நடுத்தர உத்தியோகங்களை, பரீட்சைகளிற் சித்திபெற்ற இலங்கையர்களுக்குக் கொடுத்தார்கள். சனத்தொகைவாரியாகப் பார்க்கும் போது, சிங்களவர்களிலும் பார்க்கத் தமிழர்களே கவனமாகப் படித்து, பரீட்சைகளிற் சித்திபெற்று அப்பதவிகளில் பெரும்பகுதியைத் தட்டிக் கொண்டார்கள்.

இலங்கைக்கு ஐரோப்பியர் வரமுன்னர், முக்கியமாக தமிழ்ப் பகுதிகளில், விவசாயமும் கைத்தொழிலுமே மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு வருவாய் தருவனவாக அமைந்திருந்தன. மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் – அதாவது, நெல்லு, குரக்கன், தினை, வரகு, சோளம், எள்ளு முதலிய தானியங்களும், பயறு, உழுந்து, கடலை வகைகளும், உருளைக்கிழங்கு, மரவள்ளி, இராசவள்ளி, கருணை முதலிய கிழங்குவகைகளும், காய்கறி வகைகளும், முளைக்கீரை, அறக்கீரை, பொன்னாங்கண்ணி, வல்லாரை, சாறணைக்கீரை, முருங்கையிலை, கோவா, பசளி, பயிரி, உமிரி, தொயிலி முதலிய கீரைவகைகள், கரும்பு, வெங்காயம், இஞ்சி முதலானவை, உளுந்து வடகம், வேப்பம்பூ வடகம், வெங்காய வடகம் இவைகளும், தென்னை, பனைமரங்களிலிருந்து கிடைக்கக் கூடிய பொருட்களான இளநீர், தேங்காய், நுங்கு, பனம்பழம், பனாட்டு, பனங்கிழங்கு, ஒடியல், கள்ளு, கருப்பநீர் முதலிய உணவுப்பொருட்களும் – மற்றும் மாட்டுக்கு உணவாகவும் கூரைவேய, வேலி அடைக்க உதவும் பனை, தென்னை ஓலைகளும், வீடு கட்ட உதவும் மரங்கள், வளை, தீராந்தி, சிலாகை முதலான *கற்பகதரு* எனப்படும் பனையிலிருந்து பெறப்பட்ட பலவித பொருட்களும் – யாவும் உற்பத்தியாக்கப்பட்டன. நீண்ட கடற்பரப்பில் பலவகையான மீன்கள் விளைந்தன. அவற்றை அன்றாடம் பிடித்துவந்து சந்தையில் விற்பார்கள். இலங்கை ஐரோப்பியரின் கைக்கு மாறியதும், அரசாங்க உத்தியோகமும், வெள்ளைக்காரரின் வியாபார நிறுவனங்களில் வேலைவாய்ப்பும்

ஊர்ப்பிறந்தவர்களை ஈர்த்தெடுத்தன. கமத்தொழில் குன்றியது: கைப்பணிப்பொருட்கள் சோபையிழந்தன. வெளி நாடுகளிலிருந்து இறக்குமதிகள் அதிகரித்தன. சொகுசுப்பொருட்களும், மேல்நாடுகளில் உற்பத்தியான பலவிதமான பாவனைப்பொருட்களும், நங்கையரை நாகரீகம் என்னும் பிரமைக்குள்ளாக்கி அதன் விளைவால் ஏற்பட்ட மேலதிகச் செலவுகளும் நாட்டிலுள்ளவர்களின் வாழ்க்கையை மாற்றியமைத்துவிட்டன. வாழ்க்கையின் நோக்கத்தையும் அதன் நெறிமுறைகளையும் மனிதர் மறந்தும் மாற்றியும் விட்டனர்!

## *பிரயாணம்:*

இலங்கையில் கனகாலந்தொட்டு, நடந்துபோவதை அடுத்து, போக்குவரத்துச்சாதனமாக துவிச்சக்கர வண்டி (Cycle சைக்கிள்) தான் அநேகமாக எல்லா வீடுகளிலும் காணப்படும். சைக்கிள் ஆட்களை ஏற்றிக் கொண்டு போகமட்டுமல்ல, சாமான்கள் ஏற்றிச் செல்லவும் பாவிக்கப்படுகின்றது. அதற்கு வசதியாக அநேகமாக எல்லாச் சைக்கிள்களிலும் விசேஷமாக இரும்பாற்செய்த சுமைகாவி (carrier) பொருத்தப்பட்டிருக்கும். அரசாங்கம் ஒரு சைக்கிளில் ஒருவர்தான் பயணஞ் செய்யலாம் என்று சட்டம் போட்டிருந்தாலும் சைக்கிளில் தனிய ஒருவர் போவதைக் காண்பது அருமை. அநேகமாக (ஒருவரைச் சுமைகாவியிலும் ஒருவரைக் குறுக்குச்சட்டத்திலும் ஏற்றிக்கொண்டு) மூவர் போவதுதான் பொதுவழக்கம். தேவையேற்படின் சின்னப்பயலை (handle) கைபிடியில் ஏற்றிக்கொண்டு 4 பேர் போவதுமுண்டு. நானும் படிக்கிற காலத்தில் திருநெல்வேலியிலிருந்து கீரிமலைக்கு (12 மைல்) பல முறைகள் போய்க் கேணியில் குளித்துவிட்டு வந்திருக்கிறேன்– அதுவும் ஆறு, ஏழு பேர் சேர்ந்து 3 சைக்கிளில் போவோம். அந்த வயதில் கஷ்டம் தெரியாதுதானே!

அண்மைக்காலம்வரை சைக்கிள் பிரயாணத்துக்கு அடுத்தாற்போல மாட்டு வண்டிகளைத்தான் பிரயாணத்துக்குப் பாவிப்பார்கள். இரட்டைமாட்டு வண்டி, ஒற்றை(மாட்டு)த் திருக்கல் எல்லாக்கிராமங்களிலும் இருக்கும். நடையில் போகமுடியாத தூரப்பிரயாணங்களுக்கு குடும்பம் அல்லது பெண்கள் அடங்கிய குழுக்கள் வண்டியிலேதான் பிரயாணஞ் செய்வார்கள். 15, 20 மைல்கள் பிரயாணஞ் செய்யும்போது மேலதிகமாக ஒரு மாட்டை வண்டியில் கட்டிக் கூட்டிப்போவார்கள், மாறி வண்டியிற் பூட்டுவதற்காக. அவ்வண்டிகளில் மாடுகளுக்கென இரவுத்தீன் – வைக்கோல், புல்லு, – கொண்டு போவார்கள். தூரப்பயணங்களின்போது, நித்திரை கொள்ளாத நேரங்களில், சிறுவர்கள் அல்லது வயோதிபர்கள் பாடி மற்றவர்களின் களைப்பை மாற்றுவார்கள்.

பணவசதி படைத்தவர்கள் குதிரைவண்டி சொந்தமாக வைத்திருப்பர், அல்லது வாடகைக்கு அமர்த்திக்கொண்டு பயணஞ் செய்வார்கள். தெருவில் கார்களைக் காண்பது அருமை. ஒவ்வொரு கிராமத்திலும் 2 அல்லது 3 கார்களை மட்டுமே காணலாம். அநேகமாக அவை வாடகைக் கார்களாகத்தானிருக்கும். ஆஸ்பத்திரிக்கு வருத்தக்காரரைக் கொண்டுபோக, அல்லது மிகவும் அவசரமாகப் போகவேண்டிய தேவைகளுக்குத்தான் காரை வாடகைக்குப் பிடிப்பார்கள். தாம் சொந்தமாகக் கார் வைத்திருக்காத பணக்காரர் அடிக்கடி வாடகைக் காரிலேயே பிரயாணங்களை மேற்கொள்ளுவார்கள்.

அக்காலத்தில் இப்போது உள்ளதுபோலல்லாமல் Engineஐ start பண்ணுவதற்கு மூன்றாக வளைத்த (double bend) தடித்த (crank) இரும்புக் கம்பியை காரின் முன்பக்கம் bonnet இன் அடியிலுள்ள துவாரத்தினூடாகச் செலுத்தி engineக்குள் பொருத்தி, வலப்பக்கமாகச் சுழற்றினால் engine fan சுற்றி start ஆகும். இதை மிகவும் கவனமாகச் செய்ய வேணும். சிலவேளை திருப்பியடித்து, கையை அல்லது முழங்கையைப் பதம்பார்த்து விடவும்கூடும். start ஆகியதும் ஓட்டுநர் 'கியரை' மாட்டி, 'கிளச்சை' அமத்திக் காரை ஓட்டிக் கொண்டு போவார். இப்போது உள்ள கார்களுக்கு 'கியரும்' கிடையாது, ஓட்டுநர் இருந்த இருப்பில் ஒரு Starter Push Button ஐ அமத்தினால் கார் start ஆகும். அதைவிட, முன்பு கார் engineக்கு அடிக்கடி, 25, 30 மைல்களுக்கு ஒருக்கால், தண்ணீர் tankஇல் தண்ணீர் நிரப்பவேணும். அல்லாவிடில், தண்ணீர் முடிந்ததும் கார் ஓடாமல் நின்றுவிடும். அக்காலத்துக் கார்களின் உருவம் ஒரு நீள்சதுரப் பெட்டி போன்றது. நாலு சில்லும் பெட்டிக்கு வெளியேதான் அமைந்திருக்கும். ஒவ்வொரு பக்கத்திலும் இரு சில்லுகளையும் மூடியிருக்கும் (mud guard) சேறுதாங்கி இடையில் தொடுத்தபடியே இருக்கும். அது பலமானது. ஆட்கள் அதிகம், காருக்குள் இடமில்லையென்றால் வெளியே, இந்தச் சேறுதாங்கித் தொடுப்பின்மேல் நின்று பிரயாணஞ் செய்வார்கள். தற்காலத்தில் காணும் காரைத்திருப்பும்பொழுது காட்டும் (signal light) திசைகாட்டி வெளிச்சம் அப்போதைய கார்களுக்கு இல்லை. காரைத் திருப்பமுன் ஓட்டுநர் தனது வலது கையை வெளியே நீட்டி, கார் திரும்பப் போவதாக சைகை காட்டித் தான் அதன்பிறகு காரைத் திருப்புவார். இப்படிக் கையை வெளியே நீட்டிச் சைகை காட்டும்பொழுது எதிரே வரும் வாகனமோ அல்லது ஏதும் மரமோ அடித்துக் கை முறிந்த சந்தர்ப்பங்களுமுண்டு. இதன்பிறகு சிலகாலம் (driver) ஓட்டுநருக்கு வலப்பக்க Frame இலும் அதேபோல் இடது பக்கத்திலுள்ள பிறேமிலும் (புகையிரத signal போல) ஒரு சிவப்பு வெளிச்சம்போட்ட *கைகாட்டி* பொருத்தியிருக்கும். இதன் நீளம் 10, 12 அங்குலமிருக்கும். ட்ரைவர் எந்தப் பக்கம் காரைத் திருப்புகிறாரோ அந்தப் பக்கத்து லீவரை முடுக்கிவிடுவார். உடனே அந்தப் பக்கத்துக் கைகாட்டி கிளம்பும். கார் திரும்பினபிறகு அதைக் கீழே விழுத்துவார்.

அந்தக் காலத்தில் நீண்ட பிரயாணங்களை மேற்கொள்பவர்கள் – உதாரணமாக, யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமம் போவதாயிருந்தால் – ஒரு குழுவாக 6, 8, அல்லது 10 ஆண்கள் சேருவார்கள். சேர்ந்ததும், ஒவ்வொருவரும் தனது கடைசி உயிலை எழுதி வீட்டில் வைத்துவிட்டு, உற்றார் உறவினர், நண்பர்கள் எல்லாரையும் கூட்டி, தாம் விட்டுப்பிரிந்து போவதால் கண்ணீரும் கம்பலையுமாக, அவர்களிடமிருந்து கடைசிப் பிரியாவிடை பெற்றுக்கொண்டு, பயணம் போவார்கள். பொதிசோறும் கட்டிக்கொண்டு போவார்கள். போகும் வழியில் முருகண்டி, வற்றாப்பளை, மாமாங்கம், முதலிய பல ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டும் அங்கங்கு இரண்டொரு நாட்கள் தங்கியிருந்தும் செல்வார்கள். அவர்கள் போகும் வழி அடர்ந்த காட்டுப்பாதையாக இருக்கும். வற்றாப்பளையில் பலாப்பழக் காலமென்றால் வயிறாரச் சாப்பிட்டுப் பயணத்தைத் தொடர்வார்கள். மிருகங்களிடமிருந்து தப்பி, பாலைப்பழம், கிழங்குவகை முதலியன சாப்பிட்டும், ஏதோவிதமாகப் பசி, தாகத்தைத் தணித்தும், கதிர்காமத்துக்குப் போய்ச் சேருவார்கள். அங்கு முருகனைத் தரிசித்துவிட்டு, அதே பாதையால் அதிர்ஷ்டசாலிகள் (மட்டும்) உயிருடன் திரும்புவார்கள்! யாத்திரீகர் வீடு வந்து சேரப் பல மாதங்கள் பிடிக்கும்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வந்தால் எல்லோருக்கும் சந்தோஷம், அல்லாவிடில் --? வந்து சேர்பவர்களை வரவேற்பவர்கள் (அநேகமாகப் பெண்கள்) அவர்களை அழுகையுடன் வரவேற்கவேண்டிய சந்தர்ப்பங்களும் இருக்கக்கூடும். அதாவது, யாத்திரீகர் ஊர்விட்டுப் போனபிறகு யாராவது உறவினர்கள் இறந்திருக்கக்கூடும். அந்தத் துக்கச்செய்தியைச் சொல்லி ஒப்பாரிவைத்து அழுதுதான் பெண்கள் யாத்திரீகர்களை வரவேற்பார்கள். நான் சொல்லும் அந்தக்காலம் புகையிரதம் இலங்கைக்கு வந்திராத காலம்.

***மினுக்கல் :*** முற்காலத்தில் இப்போது உள்ளதுபோல் உடல் மினுக்குவதற்குரிய அழகுசாதனங்கள் மிகவும் குறைவு. காலையில் எழுந்ததும் குழந்தைகளுட்பட ஒவ்வொருவரும் தாவாரத்தில் தொங்கும் கரிக்குடுவையிலிருந்து கொஞ்சம் கரியைக் கையில் கொட்டிக்கொண்டு கிணற்றடிக்குப் போய் அங்கு நின்று பற்களை மினுக்கிவிட்டு, முகம் கை கால் கழுவிவிட்டுத் திரும்புவார்கள். அவர்கள் பாவிப்பது உமிக்கரியாக இருக்கலாம், அல்லது எரிந்த விறகுக்கரியாகவும் இருக்கலாம். சிலர் வேப்பங்குச்சு, ஆலம்விழுது, புல்லாந்தித்தடி முதலியவற்றைப் டிசரளா போல ஆக்கிப் பாவித்துப் பல்லை மினுக்குவார்கள். (ஆலும் வேலும் பல்லுக்குறுதி). பச்சைத் தென்னோலையின் ஈர்க்கை வார்ந்தெடுத்து நாக்கை வழித்துச் சுத்தம் செய்வார்கள். நாக்கைத் தினமும் சுத்தம் செய்தால் பேசும்போது சொற்களை உறுதியாக உச்சரிக்க முடியும்.. முகம் துடைத்த பிறகு, சைவர்களாயின் தவறாமல் திருநீறு பூசிக்கொண்டு கடவுள் வணக்கம் செய்வார்கள். கிறிஸ்தவர்கள் ஆண்டவரை வணங்குவார்கள். யாவரும் காலையில் நல்லெண்ணெய் தேய்த்து சீப்பால் தங்கள் தலைமயிரை வாரிவிட்டுக்கொள்வார்கள். (என்போன்ற மொட்டையர்களை விட!)

இந்தக் காலத்துப் பெண்கள் முகம் அலங்கரிப்பதற்கு உதவ நூற்றுக் கணக்கான அழகுசாதனப் பொருட்கள் கிடைக்கின்றன. தலைமயிருக்குத் தைலவகைகள், (இப்போது நிறங்களும் பூசுகிறார்கள்) கண்ணுக்கு மை, செயற்கை இமை, காதுக்குக் தூக்கணம், வாய்க்குள் thridjjpiy (spray), கன்னத்துக்கு ரூஷ், காது சுத்தப்படுத்தக் குறும்பிவாரி, கழுத்துக்கு, கமக்கட்டுக்கு, அக்குளுக்கு வாசனைத்திவலை, முகம் முழுவதுக்கும் பூச வாசனைக் கிறீம், உதட்டுக்குச் சாயம், இப்படி உடம்பில் எல்லா உறுப்புகளையும் வாசமாக வைத்திருப்பதற்கு ஏதுவாக ஏராளமான அழகுசாதனங்கள் இப்போது சந்தையிலுண்டு.

அந்த நாட்களில் வாசனைத் தூளைத்தவிர வேறொன்றும் கிடையாது. அதைத்தான் பெண்கள் முகத்தில் பூசி அழகுபடுத்திக் கொள்ளுவார்கள். அந்தத் தூளுக்கு *பவுடர்* அல்லது *புசல்மா* என்று அப்போது பெயர். வெவ்வேறு பூக்களின் வாசனைகளில் புசல்மா கிடைக்கும். பெண்கள், தினமும் குளிப்பதற்கும், முகம் கழுத்து கை கால் கழுவும்பொழுதும் வாசனைச்சவர்க்காரம்தான் (soap) பாவிப்பார்கள். அதனால் மேனி சுத்தமாக இருக்கும். நெற்றியை விபூதி, குங்குமப் பொட்டு அலங்கரிக்கும். காதில் தோடு, கழுத்தில் சங்கிலி, மூக்கில் மூக்குத்தி, அணிந்து லட்சுமீகரமாகத் தோற்றமளிப்பார்கள். செயற்கை அழகுசாதனங்களைப் பாவிக்காமலே அவர்களின் முகமும் மேனியும் இயற்கை அழகுடன் சுத்தமாகவும் ஜொலிப்பாகவுமிருக்கும். ஆண்கள் சந்தனப்பொட்டு வைத்துக்கொள்ளுவார்கள். வயதுவந்த பெண்கள் தாம்பூலம் போட்டுக்கொள்வதனால் அவர்களின் உதடுகள் எப்பொழுதும் சிவப்பாக இருக்கும்.

தொடரும்





# Unifund கலைக்கதம்பம் 2001

## ஏட்றியன் அருளானந்தம், கன்பரா

சிட்னிப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் இவ்வருடம் 10ஆவது அடியை மிகச்சிறப்பாகவும், குதூகலத்துடனும், கம்பீரமாகவும் எடுத்து வைத்தது. இதனை முன்னிட்டு வருடாந்தம் நடைபெறும் Unifund கலைக்கதம்பம், மே மாதம் 19ம் திகதி சனிக்கிழமை மாலை Lidcombe Ukranian Youth Club மண்டபத்தில் பெருவிழாவாக ஆரம்பமானது. வழமைபோல் கலைக்கதம்பம் சிட்னிப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்களின் நிர்வாக அமைவதும், இலங்கையின் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் மாணவர்களுக்கென நிதி சேகரிக்கும் ஒரு பெரும் நிகழ்ச்சியாக திகழ்ந்து வருவதும் பெருமைக்குரியதாகும். புலம்பெயர்ந்து வாழ்ந்துவரும் பல்கலைக்கழக மாணவர்களின் கடமை என்றும் கூறலாம்.

அவுஸ்திரேலியாவில் ஆங்கிலச் சூழலில் வளர்ந்து வருகின்ற தமிழ்ச் சிறார்கள் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாவைப் பாடிப் பின்னர் சிட்னிப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் மேடைக்கு வந்து மங்கள விளக்கை ஏற்றி 10ஆவது கலைக்கதம்ப விழாவை ஆரம்பித்து வைத்தனர். தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் 2001 இணைப்பாளர் திரு சோமசுந்திரம் முருகானந்தன், தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழாவை ஆரம்பித்துவைக்க, தமிழ்ப் படைப்பாளியான திருமதி மனோ ஜெகேந்திரன் சிறப்புரை ஆற்றினார். கன்பரா, சிட்னி ஆகிய இடங்களில் 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்ற பொருள்பட நடாத்தப்பட்ட தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை திருமதி ஜெகேந்திரன் வழங்கிக் கௌரவித்தார். இவ்விழாவைக் காணக் கன்பராவிலிருந்து சிட்னி வந்த நானும் ஒரு பெற்றோர் என்ற வகையில், ஆர்வத்துடனும், மகிழ்ச்சியுடனும், சிறுவர்கள் பரிசு பெற்ற நிகழ்வு எமக்கெல்லாம் பெருமையும், மகிழ்ச்சியையும் தருகின்றது. அன்றைய விழாவில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு பரிசு வழங்கி கௌரவித்தது, அவர்கள் மீண்டும் மீண்டும் இதுபோன்ற போட்டிகளில் ஆர்வத்துடன் பங்குகொள்ளவும், தமிழை ஊக்கத்துடன் பயிலவும் உதவும் என்பதில் ஐயமில்லை.

இப்பத்தாவது நிகழ்ச்சி, இதுவரை நடந்த Unifund கலைக்கதம்ப நிகழ்ச்சிகளிலிருந்து வித்தியாசமாகதாகவே அமைந்தது. நவீன காலத்திற்கேற்ப தமிழ்த் திரைப்படப் பாடலுக்கு பச்சைநிற லேசர் கண்காட்சி அனைவரினது கண்களை கவர்ந்த ஒரு மறக்காத நிகழ்ச்சியாகும். மேடையில் வைக்கப்பட்டிருந்த மூன்று லேசர் கருவிகளிலிருந்து மேடையிலுள்ள வெண்திரையிலும், ஆங்காங்காகே மண்டபத்தின் சுவர்களிலும், பார்வையாளர்கள் மீதும் பரந்து வீசிக் கொண்டிருந்தது. பார்வையாளர்களின் குறிப்பாக சிறுவர்களின் மனதைக் கொள்ளை கொண்ட இந்த லேசர் கண்காட்சியை ஒழுங்கு செய்தவர்களைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. இன்னுமொரு லேசர் கண்காட்சி இடைவேளைக்கு பின் இடம்பெற்றதும் வந்திருந்த இளைஞர்களுக்கு பெருவிருந்தாக அமைந்தது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இரவின் பரதநாட்டிய நிகழ்ச்சிகளை, ஸ்ரீமதி ஊஷா கருணாகரனின் மாணவர்கள் வழங்கியிருந்தனர். நிருத்தியாஞ்சலி, ஆடினாயே கண்ணா, நாக நடனம் என்ற மூன்று நடனங்களும் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தன. கிழக்கிந்திய மலைகளில் வாழும் ஆதிவாசிகளின் நடனங்களில் ஒன்றான நாக நடனம் வழமையைவிட வித்தியாசமானதாகவும் சிறப்பாகவும் அமைந்திருந்தது. மோகன கல்யாணி இராகத்திலும், ஆதி தாளத்திலும் அமைக்கப்பட்ட ஒரு சந்தோஷகரமான 'ஆடினாயே கண்ணா' என்ற நடனத்தில் கண்ணபெருமானின் புல்லாங்குழல் இசையின் நடனம் மூன்றாவது பரதநாட்டிய நிகழ்வாக அமைந்திருந்தது.

சிட்னி பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் கடந்த பத்து வருடங்களில் நடந்த நிகழ்வுகளையும்(Flashback) வரலாற்றுக் குறிப்புக்களையும் வீடியோ மூலம் வெண்திரையில் காண்பித்தது, பாராட்டிற்குரியது. இது அவர்கள் ஆற்றிவரும் சமூகப் பணிகளை மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டுவதாகவும், அவர்களை தாம் வந்த பாதையை நினைத்துப் பெருமைப்படவும் வைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

'சினிமாஸ்கோப்' என்ற பாணியில் திரைப்பட பாடல் காட்சியை வெண்திரையில் காண்பித்து, அதன் முன்பாக அதே பாடலைப் பாடியதும் ஒரு புதுவிதமான நிகழ்வாக அமைந்ததென்றே கூறலாம்.

பார்வையாளர்கள் இடைவேளையை நோக்கி இருந்த வேளையில் அவர்களது காதுகளுக்கு இனிதாக அமைந்த நிகழ்வுதான், 'நாதமும் கானமும்'. இந்த நிகழ்ச்சியில் வீணையிசையும், மெல்லிசையும் கலந்து அமைக்கப்பட்டிருந்தது மிகவும் அருமையாக இருந்ததுடன், அன்று மக்களை கவர்ந்த நிகழ்ச்சியாகவும் அமைந்திருந்தது. திருமதி சிவரதி கேதீஸ்வரன் வீணையை அழகாக மீட்டியது மட்டுமல்லாமல் மெல்லிசைப் பாடல்களையும் தேனாக பொழிந்தார். முன்பு எங்கும் காணாத வகையில் திருமதி கேதீஸ்வரன் முருகனுக்குரிய பக்திப் பாடலென்றைப் பாடிக் கொண்டே இடையிடையே வீணையையும் வாசித்து சபையோரின் பாராட்டைப் பெற்றார். இந்த நிகழ்ச்சியில் இவருடன் பலவித கீழைத்தேய, மேலைத்தேய வாத்தியங்களையும் இணைத்து மிகவும் நுட்பகமாகவும் சிறப்பாகவும் இளைஞர்கள் வழங்கியிருந்தனர்.

இடைவேளையின் பின்னர், சந்தாணகிருஷ்ணன் சகோதரர்களின் வயலின் இசை அமைந்திருந்தது. ஆங்கில உலகத்தில் Bee Gees, Jackson Five என்றால் சகோதரர்களை உள்ளடக்கிய புகழ்பெற்ற இசைக்குழுக்களாகும். அந்த வகையில் புகழ்பெற்ற மிருதங்க வித்துவான் சந்தாணகிருஷ்ணனின் புதல்வர்களான சிவராம்(வயலின்), சிவசங்கர்(மிருதங்கம்), சிவகுமார்(தபேலா) மூவரும் தமது கலைத்திறனைக் காட்டி சபையோரை இசை வெள்ளத்தில் அள்த்தினார்கள். அதைத் தொடர்ந்து தமிழ்த் திரையிசைப் பாடலுக்கு இளைஞர்கள் நடனமாடினர். பலத்த கரகோஷத்தைப் பெற்ற பெண்கள் (□மின்னலே□) நடனத்திற்கு சற்றும் சோடைபோகாத அளவிற்கு, இன்னும் விறுவிறுப்புடனும் ஆண்கள் நடனம் அமைந்திருந்தது. நடன அமைப்புடன், அவர்களது உடை ஆக்கமும் மெச்சக்கூடியன. இவை இளைஞர்களுக்கு மட்டுமல்ல முதியோரும் ரசிக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



முத்தமிழில் அமைந்திருந்த இந்த கலைகக்தம்பத்தின் இரு நாடகங்களை (சில நிகழ்வுகளைக் கொண்டதாக) திரு நேசராஜா பாக்கியநாதன் அவர்கள் நெறிப்படுத்தி வழங்கியிருந்தார். திரு குலசேகரம் சஞ்சயனின் கணனி உதவியுடன் நவீன காலத்திற்கேற்ப அமைக்கப்பட்டது www . குடும்பம் . com என்ற நாடகம். கணனியின் தொழிற்பாட்டை ஒரு குடும்பத்தின் தொழிப்பாட்டுடன் ஒப்பிட்டு ஆககப்பட்டிருந்தது பலருக்கும் புதுமையாகவும், ரசிக்கும் வகையிலும் அமைந்திருந்தது. அடுத்தாக அமைந்த நிகழ்வு □மகனுக்குச் செய்தது சரியா?□. பலரையும் சிந்திக்கவும் சிந்திக்க வைத்த இந்த நிகழ்வுகள் இளைஞர்களின் நடிப்புத் திறமை மேலும் மெருகூட்டியதெனலாம். கணனியையும் புகுத்தி நாடகத்தையும் கொண்டுசெல்வதாயின் பல சிரமங்கள் இருக்கத்தான் செய்யும். அதனால் காட்சி மாற்றங்களில் ஏற்பட்ட தடைகளை நீக்கியிருந்தால் நிகழ்ச்சி குறிப்பிட்ட நேரத்திற்கு முடிவடைந்திருக்கும். பார்வையாளர்களில் பெரும்பகுதியினர் நிகழ்ச்சி முடிவு வரை இருந்து நிகழ்ச்சியை ரசித்தார்கள் என்றால் அது நிகழ்ச்சிகளின் தரத்தையே பறை சாற்றுகின்றது.

பத்து வருட நிறைவாக வெளியிடப்பட்ட 80 பக்கங்கள் அடங்கிய தொகுப்பில் சங்கத்தின் தூணோடு தூண் நின்று உழைந்த இளைஞர்கள், பட்டதாரிகளின் பார்வையில் இந்தச் சங்கம் எப்படி திகழ்கின்றது என்ற விடயங்களை வாசிக்க மிகவும் ஆவலாக இருந்தன. மிகச் சிறப்பான முறையில் ஆச்சிட்டு வெளிவந்த இந்தத் தொகுப்பில் 'கலப்பை' சஞ்சிகையின் அனுபவம் தெரிகின்றது.

மொத்தத்தில் இளைஞர்களின் படைப்புகள் தனிரகமாக இருந்ததுடன், வழமையான நிகழ்ச்சிகளை விட 'புதுமை' சேர்த்து, பல ஆற்றலுள்ள புதிய கலைஞர்களை அவுஸ்திரேலியாவின் கலையுலகிற்கு அறிமுகம் பெருமையும் தமிழ்ச் சங்கத்தினரையே சேரும். எந்த ஒரு அமைப்பின் வெற்றிக்கும் ஒற்றுமை (Unity), தொடர்ச்சி என்பன (Continuity) இன்றியமையாதன. சிட்னிப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் அதற்கு ஒரு எடுத்துக்காட்டு. இளவயதிலேயே ஆற்றலையும், அனுபவத்தையும், உரிய தலைமைத்தவத்தையும் பெற்றுள்ள இந்த இளைஞர்கள் மற்ற இளைஞர்களுக்கு ஒரு முன்னுதாரணம். ஒரு வருடம், இரண்டு வருடம் அல்ல பத்து வருடங்களாகத் தொடர்ந்து இயங்கிவரும் இந்த சிட்னி பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்திற்கு ஆதரவு கொடுத்து இன்னும் இப்படி பல வருடங்கள் வளர்ந்தோங்க வேண்டும் என வாழ்த்துகின்றோம். ■

**கலப்பையை (சந்தா) உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கு பரிசுப் பொருளாக்குங்கள்**

வெளிநாடுகளிலோ, உள்நாட்டிலோ இருக்கின்ற தமிழ் மீது பற்றுக்கொண்ட, உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கு கலப்பையைப் பரிசாக்குங்கள். வருட சந்தாவைச் செலுத்துவதன் மூலம் உங்களது பெயரில், அவர்களுக்கு கலப்பை இதழ்கள் அனுப்பிவைக்கப்படும். இதற்கான விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து கலப்பை முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# சிட்னிப் பல்கலைக்கழகத்தின் பத்து வருடங்கள்:

பக்கம் பதின்னான்கு

- டாக்டர் பொ. கேதீஸ்வரன் -

1991ம் ஆண்டு: மருத்துவபீட முதலாம் ஆண்டு மாணவனாக சிட்னிப் பல்கலைக்கழத்தில் காலடி வைத்தேன். அறியாத ஓர் இடம். தெரிந்தவர்கள் யாருமில்லை. தெரிந்து கொள்ள வேண்டிய மாணவர்கள் தொகையோ ஏராளம். ஏனென்றால், இன்னும் ஆறு வருடங்கள் அவர்களுடனேயே படிக்கவேண்டும். அதற்காக அவர்களுடன் பழகவிழைந்தேன். சிலர், பலராகிப் பலரும் நன்றாகப் பழகினார்கள். நானோ ஊருக்கு புதுசு. தமிழ் தெரிந்த தமிழ் மாணவர்கள் அங்கு இருந்தும் தமிழில் கதைக்கப் பேசத் தயங்கினர். மற்றவர்கள் முன்னிலையில் நாம் தமிழில் பேசுவது சற்று மரியாதைக் குறைவு என்று தோன்றியது போலும். சிட்னி பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்கள் மிகவும் அரிதாகவே காணப்பட்டனர். அவர்களுள் தமிழில் என்னோடு பேச விரும்பியவர்கள் ஒரு சிலரே. நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாக எனக்கு ஏதோ ஒன்றைத் தொலைத்த மாதிரியான அனுபவம். படிப்பில் சிரத்தை இருந்தது. ஆனால் நான் எதிர்பார்த்த பல்கலைக்கழக வாழ்கை எனக்கு கிடைக்கவில்லை. தாய்நாட்டில் படித்தவர்கள், படித்துக் கொண்டிருந்தவர்கள் எனக்கு சொன்ன அனுபவங்களையும், கதைகளையும் வைத்துப் பாரத்தால் எனது இந்தப் பல்கலைக்கழக வாழ்க்கை வெறுமையாகவே இருந்தது.

எமக்கென்றெரு கூட்டம். எமக்கென்றொரு அமைப்பு. அதன் மூலம் தமிழர்கள் ஒன்று சேர வாய்ப்பு உருவாகும் என்று தோன்றியது. எனது நண்பர் சிலருக்கும் என் போன்ற அனுபவமே இருந்தது. நாம் இழந்ததைத் தேடத் தொடங்கினோம். இந்தத் தேடலின் விளைவாக உருவானதே "சிட்னி பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம்". சங்க காலத்தில் தமிழ் வளர்த்த தமிழ்ச் சங்கங்கள் பற்றி அறிந்திருக்கின்றோம். நாமும் தமிழ்ச் சங்கம் என்று பெயர் வைத்து விட்டோம். தமிழுக்கு ஏதாவது செய்தோமா? கால, சூழலின் கட்டாயமாக, ஆரம்பத்தில் எமது சங்கம் பல பொழுது போக்கு நிகழ்ச்சிகளையும், சுற்றுலாக் களையுமே ஒழுங்கு செய்து வந்தது. 'ஆடுற மாட்டை ஆடிக் கறக்கவேணும், பாடுற மாட்டை பாடிக் கறக்கவேண்டும்' என்ற வாக்கிற்கிணங்க எமது அங்கத்தவர்களை கூட்டுவதற்கு இவை உதவின. இதன் முலம் பல தமிழ் மாணவர்கள் தமிழ்ச் சங்கத்தின் அங்கத்தவராயினர். சங்கமும் வளர்ந்தது.

## 1992ம் ஆண்டு:

தமிழ்ச் சங்கம் என்று இருக்கும் நாம் தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் எதாவது சேவை செய்ய வேண்டும் என்பது எமது தணியாத தாகமாகியது. அந்த வேளையில் எமக்கு ஒரு அழைப்பு வந்தது. யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் துரைராஜா அவர்கள், அல்லல்படும் யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவுமாறு கோரியிருந்தார். நாம் இப்பொழுது தாய்நாட்டில் ஒரு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்தால் எதிர்நோக்கியிருந்திருக்கக்கூடிய பிரச்சனைகளையும், சவால்களையும் எண்ணிப் பார்த்ததன் விளைவாக உருவாக்கிய அமைப்புத்தான் 'பல்கலைக்கழக நிதியுதவி திட்டம்' என்ற **Unifund Project**. நாம் இங்கு வந்துவிட்டோம். தப்பிப் பிழைத்து விட்டோம் என்று மட்டும் நினைக்காது எமது உடன்பிறவா சகோதரர்களின் எதிர்காலத்திற்கும், அவர்களால் கட்டியெழுப்பப்பட விருக்கின்ற எமது தேசத்தின் எதிர்காலத்தையும் செழிக்கச் செய்ய எம்மாலான ஒரு சிறிய பங்களிப்பே இது என்றே கருதுகின்றேன். இந்தத் திட்டம் இங்குள்ள பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்கள், "ஈழத்தில் அல்லல்படும் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்களுக்கு உதவ" எமக்கு பெரியதொரு வாய்ப்பாக அமைந்திருக்கின்றது. இன்றுடன் ஒன்பது வருட சேவையை வழங்கியதன் மூலம் யாழ்ப்பாண, கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் மற்றும் தனித்தனி வளாகங்களும் இன்றும் பயன் பெற்று வருகின்றன என்பது எமக்கு மிக்க மகிழ்ச்சி அளிக்கும் செய்தியாகும்.

## 1993ம் ஆண்டு:

தாய்நாட்டிற்காக உதவி செய்த அதேவேளையில் நாம் தற்பொழுது வாழ்ந்து வரும் தமிழ்ச் சமூதாயத்திற்கு என்ன செய்யலாம்? என்ற கேள்வி எழுந்தது. மேலைத்தேய சூழலில், ஆங்கில மோகத்தில் வாழ்ந்து வரும் எமது தமிழ்ச் சிறார்களுக்குத் தமிழ் மொழி அறிவு ஊட்ட பல தமிழ்ப் பாடசாலைகளும், அமைப்புக்களும் இருந்தன. ஆனால் அவர்கள் அனைவரும் ஒன்றாக ஊக்கமாக தமிழைக் கற்க வைக்கவேண்டும், அவர்களுக்கு தமிழில் ஒரு ஈடுபாட்டை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் நாம் தொடங்கிய பணி தான், '**தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள்**'. பெயருக்கு ஏற்றவாறு பல தமிழ்ச் சிறார்களை ஊக்குவிக்கவென பல பெறுமதியான பரிசுகளை வழங்கியதோடு நின்றுவிடாது, அவர்களை பலரின் முன்னிலையில் எமது Unifund கலைக்கதம்பம் நிகழ்ச்சியில் கௌரவிப்பதை வழக்கமாகக் கொண்டோம். இதன்மூலம் போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்கள் மட்டுமல்லாமல் பரிசு வழங்கலை பார்த்த மற்றச் சிறார்களும் தமிழைப் படிக்கவும், போட்டிகளில் பங்குபற்றவும் உந்தப்பட்டார்கள். அதேபோல கன்பராவிலும் இந்தப் போட்டிகளை நடாத்தித் தருமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க கடந்த 4 வருடங்களாக தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளை எமது சங்கம் அங்கும் திறம்பட நடாத்தி வருகின்றது. இப்போட்டிகளை ஒழுங்கு செய்து நடாத்துவதற்கு பல்கலைக்கழக மாணவர்கள் முன்னின்று பணியாற்றி வருவது, இப்பணி இனிதே தொடரும் அறிகுறியாகும். கடந்த காலப் போட்டிகளில் பங்குபற்றி தமது திறமைகளை வெளிக்கொணர்ந்த பல இளைஞர்கள், எதிர்காலப் போட்டிகளை ஒழுங்கு செய்தும், உதவி செய்தும் வருவது மகிழ்ச்சியைத் தருகின்றது.

## 1994ம் ஆண்டு:

மெல்போர்னிலிருந்த வெளிவந்த 'மரபு' என்ற சஞ்சிகை வெளிவராது நின்றுபோன காலத்திலேயே, சிட்னித் தமிழ் இளைஞர் அமைப்புடன் தமிழ்ச் சங்கம் சேர்ந்து வெளியிட்ட 'இளைஞர் குரல்' என்ற சஞ்சிகை இடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவராது தடைப்பட்டது. அவுஸ்திரேலியாவிலேயே ஒரு தமிழ்ச் செய்தித்தாளோ, அல்லது சஞ்சிகையோ வெளிவராத காலம் அது. **'தேவையறிந்து சேவை செய்'** என்ற எமது குறிக்கோளிற்கிணங்க, '***கலப்பை***' எனும் காலாண்டு தமிழ்-ஆங்கிலச் சஞ்சிகையை ஜூலை மாதம் வெளியிடத் தொடங்கினோம். இற்றுடன் 28 இதழ்களை வெளிட்டுள்ளோம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அன்னிய நாடொன்றில் ஒரு பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் ஒரு காலாண்டுச் சஞ்சிகையை இவ்வளவு காலம் வெளியிட்டுவருகின்றனர் என்பது ஒரு குறிப்பிடத்தக்கது. நாம் சாதிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் கலப்பையை வெளியிட முனைந்ததில்லை.

பொதுவாக எந்த பத்திரிகையோ, சஞ்சிகையோ எழுத்துலகில் சஞ்சரிக்கும் எழுத்தாளர்களுக்கே களமாகக் கொண்டு வெளிவருவது வழக்கம். இந்த வழக்கத்திற்கு மாறாக, இலைமறை காயாக இருக்கும் பல ஆற்றலுள்ள எழுத்தாளர்களை, குறிப்பாக இளைய தலைமுறையினரை வெளியுலகிற்கு கொண்டுவருவதே கலப்பையின் முக்கிய நோக்கமாகும். அதனாலேயே தமது கருத்துக்களை தமக்கு நன்கு தெரிந்த மொழியில் (தமிழில், அல்லது ஆங்கிலத்தில்) தெரிவிக்க கலப்பை வழிவகுக்கின்றது. அதில் வெற்றியும் கண்டுள்ளோம்.

### 1997ம் ஆண்டு:

தமிழர் வாழ்ந்துவரும் அந்நிய நாடுகளில் தமிழருக்கென கையேடுகள் (சமூக, வியாபார, பொது) இருப்பது போல, சிட்னியிலுள்ள தமிழருக்கு, 'தமிழ் மஞ்சள் கையேடு' வெளியிட்டோம். தற்பொழுது **'தமிழ்க் கையேடு'** என்ற பெயரில் வெளிவரும் இந்தத் தொகுப்பு சிட்னியில் வாழும், வந்து செல்லும் தமிழருக்குத் தேவையான பல விடயங்களை உள்ளடக்கியுள்ளதால், இது பலரது வரவேற்பைப் பெற்றதுடன், இந்த ஆண்டு அதன் மூன்றாவது இதழை வெளியிட ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

இவற்றைவிட இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை தமிழ் வானொலி ஒலிபரப்பு ஒன்றையும் (24 மணி நேரம் ஒலிபரப்பாகும் இன்பத்தமிழ் ஒலி வானொலியினுாடாக), பல தொண்டு நிறுவனங்களுக்குச்(இரத்த தானம், வயோதிபர் விடுதிகள்) சென்று உதவுதல் போன்ற நடவடிக்கைகளிலும் மாணவர்கள் காலம் காலமாக ஈடுபட்டு வருகின்றார்கள். ஒவ்வொரு நிர்வாகக் குழு பதவிக்கு வரும்போதும் அவர்களுக்குறிய உதவிகளும் ஒத்தாசைகளையும் சங்கத்திலுள்ள அனுபவமுள்ளவர்கள் கொடுத்து, அவர்களை வழிகாட்டி வந்திருக்கிறார்கள். அனுபவம் நிறைந்த மூத்த அங்கங்கத்தவர்களின் ஆலோசனைகள், உதவிகள், ஒத்தைசைகள் என்பனவே எமது சங்கம் நாடாத்துகின்ற எல்லாச் செயற்பாடுகளிலும் சிறப்படையவும் அவற்றைத் தொடரவும் காரணமாக இருக்கின்றன.

எமது இளம் தலைமுறையினர் கடந்த பத்து ஆண்டுகளாக காட்டிவரும் ஆர்வமும், வழங்கிவரும் உதவியும் அளப்பரியது. சிட்னிப் பல்கலைக்கழகத்தில் பயிலும் தமிழ் மாணவர்கள் மட்டுமன்றி, ஏனைய பல்கலைக்கழகங்களில் பயிலும் தமிழ் மாணவர்களும் எமது நடவடிக்கைகளில் அக்கறை கொள்வதுடன், தாமும் தமது வளாகங்களில் தமிழ்ச் சங்கங்களை அமைத்தும், எமக்கு உதவியும் வருகின்றார்கள். இதன்மூலம் இவர்கள் அனுபவங்களையும், தலைமைத்தவ





பயிற்சியையும் பெறுகின்றார்கள். இவர்களே நாளைய தலைவர்கள் என்றால் அது மிகையாகாது. இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தோன்றிய அமைப்புத்தான் 'அவுஸ்திரேலியப் பல்கலைக்கழக தமிழ் மாணவர் கூட்டமைப்பு'. இன்று தேசிய மட்டத்தில் இயங்கிவரும் இந்தக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் சர்வதேச அளவில் கொண்டுவரப்படவேண்டும் என்பது பலரது விருப்பம்.

நாம் கடந்துவந்த காலங்களில் அடைந்த இன்னல்கள் சொல்லில் அடங்கா. 'சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது' என்று நினைத்தார்களோ தெரியாது. பொதுவாக மூத்த தமிழ்ச் சமுதாயத்தின் ஆதரவு இளைஞர்களைப் பொறுத்தவரை கிடைப்பது அரிதாகவே காணப்படுகின்றது. இளைஞர்கள் செய்கின்ற நற்பணிகளை ஊக்குவிப்பதற்குப் பலர் முன்வருவதில்லை. அவர்கள் செய்ய விளைகின்ற பணிகளை ஊக்குவிக்காது, குறைகாண்பது இளைஞர்களின் முயற்சிகளுக்கு முட்டுக்கல்லாக இருக்கின்றது. இதனால் பல அக்கறையுள்ள இளைஞர்கள் தமிழ்ப் பணி எதிலும் ஈடுபடத் தயங்குகிறார்கள். இப்படியான எண்ணமும், நடத்தைகளும் எமது சமுதாயத்திற்கு தீமையையே விளைவித்திருக்கின்றன. சிட்னி பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் அங்கத்தராக இருந்தவேளையில் நான் அடைந்த அனுபவங்கள் பல, பல. சந்தித்த நண்பர்கள் பலர். கசப்பான சம்பவங்கள் சில. மொத்தத்தில் என்னை ஒரு தலைநிமிர்ந்த மனிதனாகவும், ஒரு உணர்வுள்ள தமிழனாகவும் மாற்ற இந்தச் சங்கம் வழிகாட்டியிருக்கின்றது. அதேபோல் பலருக்கும் நன்மை பயத்திருக்கும் என்று நம்புகின்றேன். ■

6ம் பக்கத் தொடர்ச்சி

கலைவளர்ச்சிக்குச் சாதகமாக இருந்தது. இலங்கை வானொலியிலும், பின்னர் பெயர் மாறிய இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும் இவருடைய பண்ணிசையும் இசைக்கச்சேரியும் கிரமமாக இடம்பெற்று வந்தன. அத்துடன், பல்வேறு இசைச்சித்திர நிகழ்ச்சிகளிலும் இவர் குரலை நேயர்கள் கேட்டு மகிழ்ந்தது நினைவில் இருக்கலாம். திருவெம்பாவை அஞ்சல், மற்றும் கோயில் விசேஷங்களில் எல்லாம் இவரது உருக்கமான பாடல்களைப் பன்முறையும் கேட்கும் வாய்ப்பு நேயர்களுக்கு ஏற்பட்டது.

வேல்சாமி அவர்கள் உயர்பதவி வகித்தபோதும், சிறிதளவேனும் பதவிச்செருக்கு இல்லாது எல்லோருடனும் இன்முகங்காட்டி அன்புடன் பழகுவார். வேண்டியபோது தயங்காது எவருக்கும் உதவி செய்வார்.இப்பண்புகளினால் பலரும் வேல்சாமியை இனிய நண்பனாகக் கருதினார்.

*1968*ம் ஆண்டின் பிற்பகுதியில் ஜேர்மனிய தேசத்து உபகாரச் சம்பளம் பெற்று அங்கு செல்வதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து முடித்தார். வெளிநாட்டு விஜயத்தின்போது அங்குள்ள வானொலி நிலையங்களில் பாட்டுக் கச்சேரிகள் செய்ய எண்ணினார். அதுபற்றி ஆவலுடன் வேல்சாமி பேசிக் கொண்டிருந்தார். ஆனால் விதி வேறு விதமாக அமைந்தது. இத்தகைய சிறப்புப் பெற்ற கலைஞனை, நண்பனை நம்மிடமிருந்து பிரித்து விட்டான். அவர் மறைவு ஈழத்தின் இசை உலகிற்கு ஒரு பேரிழப்பாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2001 அறிக்கை.
# சிட்னி பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம்

அவுஸ்திரேலிய நாட்டில் தமிழ் மொழியையும் கலாச்சாரத்தையும் பேணி ஊக்குவிக்குமுகமாக நடாத்தப்பட்டுவரும் இப்போட்டிகள் இவ்வருடம் புது மெருகுடன் வேறுபட்ட பல அங்கங்களைக் கொண்டு நாடாத்தப்பட்டன.

"என்று தணியும் இந்த சுதந்திர தாகம்" என்று காலத்திற்கு ஏற்ற ஒரு கருப்பொருளை மையமாகக் கொண்டு சிட்னியிலும் கன்பராவிலும் மொத்தமாக 26 போட்டிகள் நடந்தேறின. எல்லாமாக 280 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று 200 க்கும் அதிகமானவர்கள் போட்டிகளில் பங்குபற்றியிருந்தார்கள். போட்டியாளர்களுக்கு பெறுமதிவாய்ந்த பரிசில்களை இம்முறை வழங்கக் கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

போட்டிகளைப் போட்டிக் கண்ணோட்டத்துடன் பாராது தாம் எல்லோருமே வெற்றி பெற்றவர்கள் என்ற எண்ணம் சிறார்களிடையே வேரூன்றி இருந்தமை பாராட்டத்தக்க ஒரு விடயமாகும். இதனை மேம்படுத்துமுகமாக முதல் மூன்று வெற்றியாளர்களுக்கும் மற்றும் விசேட பரிசுபெற்றவர்களுக்கும் பதக்கங்களை இம்முறை வழங்கியுள்ளோம். இவற்றை வழங்கிய புரவலர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள். இம்முறை வாய்மொழித்தொடர்பாற்றல் போட்டியில் மிகக் கடுமையான போட்டி நிலவியது. இப்போட்டியின் போது சில பெற்றோர்களை அவதானிகளாகவும், மேற்பார்வையாளர்களாகவும் அமர்த்தி அவர்களுடைய பங்களிப்பினையும் ஏற்படுத்தியிருந்ததுடன் சற்றே வித்தியாசமாக வேறு வேறு பின்னணியில் இருந்து ஐந்து நடுவர்களையும் நியமித்து எம்மால் இயன்றவரை போட்டிகளைச் சிறப்பாக நடாத்தினோம்.

தொடர்ந்தும் உங்கள் மயப்படுத்தப்பட்ட போட்டியாக இது மலர வழிவகை செய்வதற்கு உங்கள் ஆதரவை வேண்டுகின்றோம். போட்டியின் போது பங்குபற்றிய மாணவர்களுக்கும், ஒத்துழைப்பு நல்கிய பெற்றோர்களுக்கும், நடுவர்களுக்கும், தமிழ்ப் பாடசாலைகளுக்கும், பரிசில்களை வழங்கிய புரவலர்களுக்கும், வானொலி நிலையங்களுக்கும் மற்றும் எல்லா வகையிலும் போட்டிகளை சிறப்பாக நடாத்த உதவி செய்த அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

நன்றி

சோமசுந்தரம் முருகானந்தன் – ஆனந்தன்
**இணைப்பாளர்**
**தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் 2001**





# பரிசு பெற்றோர் பட்டியல் 2001
## TAMIL COMPETION 2001 WINNERS LIST

## CANBERA கன்பரா

<u>பாடல்மனனப் போட்டி</u>
<u>ஆரம்ப பிரிவு</u>
1ஆவது லோகேஷ் சிவகுமார்
2ஆவது அஷ்லியா லக்ஷினி அருளானந்தம்
3ஆவது நந்திதா குணசீலன்
**விஷேட பரிசுகள்**
கௌரி சிவசபேசன்
தனுஷா தவவரன்
நிவாஷினி சந்திரமோகன்
சிரோமினி சுகிர்தநாதன்
சர்மிளா ஜெயமனோகரன்

<u>பாடல்மனனப் போட்டி</u>
<u>கீழ்ப் பிரிவு</u>
1ஆவது தினேஷ் சிவகுமார்
2ஆவது கேசவன் அயிலானந்தன்
3ஆவது மாதவன் மணிவண்ணன்
**விஷேட பரிசு**
வித்திரன் மோகனதாஸ்

<u>எழுத்தறிவுப் போட்டி</u>
<u>கீழ்ப்பிரிவு</u>
1ஆவது ரவி ரத்தினம்
2ஆவது கேசவா ஸ்ரீக்காந்தகுமார்

<u>எழுத்தறிவுப் போட்டி</u>
<u>மத்திய பிரிவு</u>
1ஆவது சிவசாந் ஞானசேகரன்

<u>வாய்மொழித் தொடர்பாற்றல்</u>
<u>கீழ்ப்பிரிவு</u>
1ஆவது கபிலன் ருக்மணிகாந்தன்
2ஆவது வஷாந்திகா ஞானசேகரன்

<u>வாய்மொழித் தொடர்பாற்றல்</u>
<u>மத்திய பிரிவு</u>
1ஆவது யாதவன் அயிலானந்தன்
2ஆவது மிற்றி பவித்திரா மோகனதாஸ்
3ஆவது டிலக்ஷினி சுகிர்தநாதன்
**விஷேட பரிசு**
டிலக்ஷினி சத்தியமூர்த்தி

<u>வாய்மொழித் தொடர்பாற்றல்</u>
<u>மேற் பிரிவு</u>
1ஆவது ராகுலன் ருக்மணிகாந்தன்

<u>பேச்சுப் போட்டி</u>
<u>மத்திய பிரிவு</u>
1ஆவது காயத்திரி சிவசபேசன்
2ஆவது காயத்திரி கணேசானந்தன்
3ஆவது அஞ்சலா அருளானந்தம்
**விஷேட பரிசுகள்**
அரவிந் தவவரன்

<u>பேச்சுப் போட்டி</u>
<u>மேற் பிரிவு</u>
1ஆவது இராகுலன் கணேசானந்தன்
2ஆவது மிஷேல் யோசப்
2ஆவது நிரோஷினி குணசேகரம்
**விஷேட பரிசுகள்**
தர்ஷிகா ஞானசேகரன்
கர்ஷினி கணேசானந்தம்
மைத்திரேயி சவரிமுத்து
மோறீஸ் யோசப்

<u>பேச்சுப் போட்டி</u>
<u>அதிமேற் பிரிவு</u>
1ஆவது மாயவன் மணிவண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SYDNEY சிட்னி

**பாடல்மனனப் போட்டி**
**ஆரம்ப பிரிவு**
1ஆவது பானு போல் றெமீசியன்
2ஆவது மதுரா ஐயர்
3ஆவது அபிராமி ராஜ்குமார்
3ஆவது இலச்சுமி லோகதாசன்
**விஷேட பரிசுகள்**
றேசி ரைற்றஸ்
ஆர்த்திகா சுகுமார்
கீர்த்தனா ஹரிஹரன்
காவ்யா ஜெய்சங்கர்
ரனுஸ்கா சிவசண்முகராஜா

**பாடல்மனனப் போட்டி**
**ஆரம்ப பிரிவு**
1ஆவது ஷேர்வின் ரைற்றஸ்
1ஆவது பிரவீன் அருட்சிவா
3ஆவது அர்ஜீன் ஞானராஜன்
**விஷேட பரிசுகள்**
ஓம்காரன் சிவனேசன்
சரவணன் சிவகுமார்
நிமலன் சுந்தரம்
ரமணன் ஸ்ரீதரன்

**பாடல்மனனப் போட்டி**
**கீழ்ப் பிரிவு**
1ஆவது வாசன் சிவானந்தா
2ஆவது தன்யா ஐயர்
3ஆவது ஷரண்யா லிங்கதாஸ்
**விஷேட பரிசுகள்**
கீர்த்தனா பாலகிருஷ்ணன்
மைதிலி இளங்கோ
துஷீதன் இளங்கோவன்
சிந்தியா நிவன்
சுஜித்ரா வரதலிங்கம்

**எழுத்தறிவுப் போட்டி**
**ஆரம்பபிரிவு**
1ஆவது சாய்லக்ஷன் இராஜேந்திரன்
1ஆவது மாதுளன் சிவப்பிரகாசம்
2ஆவது அபிராமி லிங்கநாதன்
2ஆவது மதனாகரன் கலாமணி
3ஆவது மாதங்கன் சிவப்பிரகாசம்
**விஷேட பரிசுகள்**
ஜனனி குலராஜா
அபிவர்ணன் தியாகலிங்கம்
மாதீபன் சிவபிரகாசம்
வருணி சாந்தகுமார்
கிருசான் இரவீந்திரதேவன்

**எழுத்தறிவுப் போட்டி**
**கீழ்ப்பிரிவு**
1ஆவது லக்ஷினி ரங்கநாதன்
2ஆவது பைரவி பரிமளநாதன்
3ஆவது பிரணவன் சிவகுமார்
**விஷேட பரிசுகள்**
கவிபாரதி நக்கீரன்
விதுசா தவராசா

**வாய்மொழித் தொடர்பாற்றல்**
**ஆரம்ப பிரிவு**
1ஆவது கஸ்தூரி முருகவேல்
2ஆவது தேனிஷா வாகீஸ்வரன்
3ஆவது துஷான் புகழேந்திரன்

**வாய்மொழித் தொடர்பாற்றல்**
**கீழ்ப் பிரிவு**
1ஆவது கபிலன் பாஸ்கரன்
2ஆவது ஸ்ரீபைரவி மனோகரன்
3ஆவது சிவாங்கி பார்த்தீபன்
**விஷேட பரிசுகள்**
சிவசரன் சூரியகுமார்
சங்கவி பார்த்தீபன்
தனுஷியா இரவீந்திரன்
அபிராம் தியாகலிங்கம்
ஜதுர்ஷன் புகழேந்திரன்

**வாய்மொழித் தொடர்பாற்றல்**
**மத்திய பிரிவு**
1ஆவது பிரகாஷ் பிரபாகரன்
2ஆவது அகிலா ஞானரெத்தினம்
3ஆவது கவிவர்ணன் நக்கீரன்



**விஷேட பரிசுகள்**
சயந்தினி ஜெயலிங்கம்
சிவசங்கரி சிவநேசன்
நித்திலா ஜெயலிங்கம்
தேவிகிருஷ்ணா தேவேந்திரன்

**வாய்மொழித் தொடர்பாற்றல்**
**மேற்பிரிவு**
1ஆவது நிஷேவிதா பாலசுப்பிரமணியன்
2ஆவது சாயிசன் இராஜேந்திரன்
3ஆவது செந்தூரான் ஞானரெத்தினம்
**விஷேட பரிசுகள்**
ஆரணி சோமஸ்கந்தன்
கிரிஷாந் குலராஜா
கீதாஞ்சன் தேவபாலன்
தர்ஷிகா சபாநாதன்
வைஷ்ணவி பரிமளநாதன்
கஜன் சிவானந்தா

**பேச்சுப் போட்டி**
**மத்திய பரிவு**
1ஆவது ஹிஷன் இளங்கோவன்
2ஆவது யாதவி லோகதாசன்
3ஆவது அனுஷா பாஸ்கரன்
**விஷேட பரிசுகள்**
சர்விகா விஜயகுமாரன்
சுஜிவினி சிறிதரன்
யவ்வனா யுசிலானந்தன்

**எழுத்தயறிவுப் போட்டி**
**மத்திய பிரிவு**
1ஆவது அபிராமி புருஷோத்தமா
2ஆவது டர்ஷான் வசந்தன்
3ஆவது பிரதீபா சிவப்பிரகாசம்
**விஷேட பரிசுகள்**
சுஜன்சத்தியசீலன்
தாட்சா சிவானந்தன்

**பேச்சுப் போட்டி**
**மேற் பிரிவு**
1ஆவது சுகன்யா பாலசுப்பிரமணியன்
2ஆவது விபூஷன் இளங்கோவன்
3ஆவது அனிற்ரா கிறிஸ்ரி
**விஷேட பரிசுகள்**
யதுகிரி லோகிதாசன்
பவித்திரா வரதலிங்கம்
மாதுரி இளங்கோ

**பேச்சுப் போட்டி**
**அதிமேற் பிரிவு**
1ஆவது இந்து சற்குணநாதன்

**எழுத்தறிவுப் போட்டி**
**மேற்பிரிவு**
1ஆவது முரளீதரன் கலாமணி
2ஆவது தனுர்சினி முத்துசாமி
2ஆவது மாதுமை நிர்மலேந்திரன்
2ஆவது சிவகஜன் விஜயநாதன்
**விஷேட பரிசுகள்**
நித்லா விஜயநாதன்

**எழுத்தறிவுப் போட்டி**
**அதிமேற்பிரிவு**
1ஆவது மீரா மீனாட்சி சுந்தரம்
1ஆவது அல்பிரட் செல்லத்துரை

**எழுத்தறிவுப் போட்டி**
**விஷேடபிரிவு**
1ஆவது செந்தூரான் சிதம்பரநாதன்
2ஆவது அஜந்தா நடேசன்
3ஆவது பிரசாந் குலராஜா
அனீத்தா நடேசன்
**விஷேட பரிசுகள்**
நீரஜா சண்முகநாதன்
மேரி சகுந்தலா செல்லத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மகனுக்குச் செய்தது சரியா?"

## சிட்னி பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் பத்தாவது ஆண்டு

## கலைக்கதம்பம் 2001 இல் அரங்கேறிய ஒரு நிகழ்விலிருந்து...

(பங்குபற்றியவர்கள் ஹேராம் ஜெயராம், நேசராஜா பாக்கியநாதன்)

கதிரையில் சொக்கலிங்கம் அமர்ந்திருக்கின்றார். அப்பொழுது ஹோரம் ஜெயராம் வருகின்றார். உடனே

கவிஞர்: வாரும் காணும் என்ன ஆளைக் கனநாளாய்க் காணேல்ல.

ராம்: எங்க பாரும் நேரம்

கவிஞர்: அது சரி அன்றைக்கு பள்ளிக்கூடத்துக்குள்ள இருந்து வாறதைக்கண்டன். விட்டதைப் பிடிக்க திரும்பப் பள்ளிக்கூடம் போறீர் போல கிடக்கு.

ராம்: உமக்கு அந்தப் பழைய குறும்பு போகேல்ல.

கவிஞர்: குறை நினைக்காதையும். ஒருக்கா உள்ளுக்குள்ள போய் வீட்டுக்குள்ள இரும். ஏனென்றா என்னைப் பேட்டி எடுக்கிறதென்று ஒரு பத்திரிகையில இருந்து ரிப்போட்டர் ஒராள் வாறேர்.

ராம்: என்ன அப்படிச் சொல்லிப்போட்டீர் நான்தான் இலக்கணப் பிழை என்ற பத்திரிகையிலிருந்து வருகின்றேன்.

கவிஞர்: என்னோடை கதைக்கேக்க ஏதோ நல்ல தரமான பத்திரிகையென்று சொன்னாங்கள்,

ராம்: சரி அதைவிட்டிட்டு பேட்டியைத் தொடங்குவம். தாங்கள் தமிழுலகம் போற்றும் ஒரு பிரமாதமான ஒரு கலைஞர். பல விருதுகளை வாங்கி கௌரவிக்கப்பட்டவர். உங்களைப் பேட்டிகாண்பதை நான் ஒரு பெருமையாகவே கருதுகின்றேன்.

கவிஞர்: நன்றி

ராம்: என்றாலும் நாங்க முந்தி ஒன்றாப்படிக்கேக்க இருந்த சந்தோஷம் இப்ப இல்லை என்ன.

கவிஞர்: நாங்க முந்தி ஒன்றாப் படிக்கேக்க என்று சொல்லாதையும். ஒரே வகுப்பில இருந்ததென்று சொல்லும். நான் படிச்சனான் நீர் படிக்கேல்ல.. சரி அதைப்பற்றி ஏன் கதைப்பான்.

ராம்: பொதுவா எல்லாரும் கேட்கிறமாதிரி ஒரு கேள்வியைக் கேட்பமே? உங்கட இந்த எழுத்துலக வாழ்க்கையில ஏற்பட்ட மறக்கமுடியாத சம்பவம் ஒன்றைக் கூறமுடியுமா?

கவிஞர்: நிச்சயமாக என்ற வாழ்க்கையில மறக்கமுடியாத சம்பவம் எதென்றா? சரியா ஞாபகம் இல்லை.

ராம்: சரி ஒவ்வொரு படைப்பாளியளின்ர வெற்றிக்குப் பின்னாலேயும் ஒருவர் இருப்பார் என்று சொல்வார்கள். உங்களுடைய படைப்புகளுக்குப் பின்னால் உள்ளவர் யார்?

கவிஞர்: நீர் கேட்கிற கேள்வியைப் பார்த்தா ஏதோ நான் மற்றாக்களின்ர கவிதையளை பார்த்தெழுதிப் பேர்வாங்கினமாதிரியும், அவர்தான் என்ற படைப்புகளுக்குப் பின்னால இருக்கிறமாதிரியும் இருக்கு.

ராம்: உங்களுக்குப் பாருங்கோ இந்தக் குறும்பு இன்னும் போகேல்ல. சரி இனி கொஞ்சம் சீரியசா கேட்பம்.

கவிஞர்: அப்ப இவ்வளவு நேரமும் என்ன நகைச்சுவைக்கோ கதைச்சனாங்க.

ராம: பல பெரிய எழுத்தாளர்களிடமும், கவிஞர்களிடம் பலதரப்பட்ட கருத்து வேறுபாடுகள் பெருகி நிற்பதை நீங்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



காணலாம். இவ்வாறான கருத்துவேறுபாடுகள் எழுத்துலகத்தைப் பொறுத்தவரை ஆரோக்கியமானவை என்று நீங்கள் கருதுகின்றீர்களா?

கவிஞர்: நிச்சயமாக. ஒவ்வொருவரைப் பொறுத்தவரை ஒன்றைப் பற்றி ஒரு கருத்து இருக்கும். இன்னொருவரிடம் அதைப் பற்றிய இன்னொரு கருத்து இருக்கும். உதாரணத்துக்கு ஒன்று சொல்கின்றேன்.

ஒரு வீணை ஒன்று இருக்கின்றது. அதைக் கொண்டு போய் ஒரு இசைஞானம் உள்ள ஒருவரிடம் காட்டி இதைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள் எனக் கேட்டால் அதற்கு அவர் இது இன்னிசைச் சங்கமங்களின் இதயம் எனக் கூறுவார்.

ஒரு கவிஞனிடம் கேட்டால்
நீயும் ஒரு பெண்தான்
முகங்களில் கூடவா நரம்புகள்.
பெண்ணோடு பழகினால் ஓரின்பம்
உன்னோடு பழகுவதால் ஏதின்பம்
உன்னைப் பழகினாற்றான் பேரின்பம்.

அதே வீணையை ஒரு பக்திமானிடம் கேட்டால் கலைமகள் கைப்பொருளே என்பார்.

அந்த வீணையைக் கொண்டு போய் ஒரு சட்டி, பானை விற்கும் ஒரு வியாபாரியிடம் கேட்டால் என்ன கூறுவார். இந்த வீணையும் நான் விற்கும் பானையும் விழுந்தால் உடையுமென்பார்.

எனவே அவரவர் சிந்தனையைப் பொறுத்தவரைதான் அவரவர் கருத்துக்கள்.

ராம்: தாங்கள் வெளியிட்ட ஒரு கவிதைத் தொகுப்புத்தான் மேற்கே போகும் மேகங்கள். அதில் ஒரு கவிதை ஞாபகத்துக்கு வருகின்றது.

கவிஞர்:
மீன் குடித்த நீர்தானே மேகங்களாகிறது
கடலினின்று எழுந்த காரணத்தால்
அசைவ மேகமாகிப் போவதுண்டா
கோயினின் மேலாக கருமேகம் கடக்கையிலே
அசைவ மேகங்களென்று
கோபுரங்கள் எப்போதும் குனிந்ததுண்டா
ஓடுகின்ற மேகங்கள் தனைப்பார்த்து
கடவுளின் நோக்கோடு கண்வைச்சா
மேகங்களெல்லம் என்ன ஜேஓ எநப?ஆ

ராம்:இதை நீங்கள் எழுதியபோது நீங்கள் சமயங்களிலும், கடவுள்களிலும் நம்பிக்கையற்றவராக இருந்தீர்களா?

கவிஞர்: கடவுளின் கோட்பாடுகளை நான் மதிப்பவன், கட்டுப்பாடுகளை வெறுப்பவன். ஒரு மதத்தை நீங்கள் பின்பற்றலாம். ஆனால் மற்ற மதங்கள் பற்றிய அறிவு இருக்கவேண்டும். ஒரு பத்திரிகையில் இப்படிப்பட்ட செய்திகள் வரவேண்டும் என நினைக்கின்றேன்.

பிரம்மஸ்ரீ குமாரசுவாமிக்குருக்கள் குர் ஆன் பற்றிப் பேசினார்

பஞ்சபுராணத்தில் பக்தி மயம் என்ற தலைப்பில் பாதிரியார் பஸ்தியாம் பிள்ளை உரையாற்றினார்.

ஆறுமுகக் கடவுளின் ஆயிரம் நாமங்கள் என்று ஆய்வுரை நிகழ்த்தினார் அப்துல் காதர்.

மாணிக்க வாசகரின் திருவாசகம் படித்த மகாநாயக்க தேரோ மனந்திருந்தினார்.

இப்படிப்பட்ட நிகழ்வுகள் நிகழ்கின்ற பட்சத்தில் ஒன்றே மதம் என்ற உண்மை புலப்படும்.

ராம்: மேற்கே போகும் மேகங்கள் என்ற தொகுப்பில் வெளியான இன்னொரு கவிதை வரிகள் எனக்கு ஞாபகம் வருகின்றது.

சந்திரன் தன் மேல் சந்தேகம் கொண்டதனால்
மறைந்த சூரியன்தான் மறுவாழ்வு கொடுக்குமென்று

■

மேகங்கள் இப்போது மேற்கே போகிறது. காலைவரை அவை காத்திருக்கும் ஆனாலும் அவை மனதின் ஆழத்தில் ஒரு கவலைமறுநாள் வரும்முன்னர் மழையாகி விடுவோமா?
இதை எழுதிய போது என்ன மன நிலையில் தாங்கள் இருந்தீர்கள்?

கவிஞர்: மன நிலைபற்றிச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆனால் சில வேளை நம்பிக்கை என்பது இருந்தாலும் அதையும் மீறிய சக்தி ஒன்று இருக்கின்றது என்பதை நாம் உணர்வது நிச்சயம். உதாரணமா காலைவரை நாம் காத்திருப்போம். அது வரைக்கும் மழையாகி விடாமல் இருக்கவேண்டும் என்று நினைப்பதுதான் அந்த நம்பிக்கையுடன் கூடிய நிச்சயமற்ற தன்மை.

ராம்: ஒரு படைப்பாளியைப் பொறுத்தவரை தன்னம்பிக்கை முக்கியமா? தலைக்கனம் முக்கியமா?
கவஞர்: என்னால் முடியும் என்று கூறுவது தன்னம்பிக்கை, என்னால் தான் முடியும் என்று நினைக்கிறது தலைக்கனம். என்னாலும் முடியும் என்பது விடாமுயற்சி. என்னால் கூட முடியும் என்பது முயற்சியுடன் கூடிய வெற்றி. என்னால் தலைக்கனங்கொள்ள முடியும் என்ற தலைக்கனம் கூடாது.

கவஞர்: உங்களுடைய எழுத்துக்களிலுள்ள கருத்துக்களில் கோபமே பெரிதும் மேலோங்கி நிற்கும். நீங்களும் இலகுவில் கோபமடையக்கூடியவர் என்று பரவலாக எல்லோரும் பேசுகின்றார்களே அது உண்மையா?
(கோபத்துடன் கூறுகின்றார்) நான் ஒருநாளும் கோபப்படுகிறதில்லை. நாலு பேர் நாலு விதமாப் பேசுவார்கள். அதற்காக நீர் அப்பிடிக் கேட்கிறதே?

ராம்: அறப்படிச்ச மூஞ்சூறு கழுநீர்ப்பானைக்குள் விழுந்தது போல் போன்று பலர் பழுத்த படைப்பாளிகளாக இருக்கின்றபோதிலும் சில படைப்புகளில் அவர்களின் பெயர் கெட்டுப்போகின்றதே அது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்.
கவிஞர்: அதுக்கு முதல் இன்னொரு விடயத்தை நான் உமக்குத் தெளிவுபடுத்தவேண்டும். பொதுவாக எல்லோரும் சொல்கின்ற பழமொழியைத்தான் நீரும் கூறியிருக்கின்றீர். அறப்படிச்ச மூஞ்சூறுக்கும் கழுநீர்ப்பானைக்கும் என்ன சம்பந்தம்.

அது அறப்படிச்ச மூஞ்சூறல்ல. அறவடிச்ச முன்சோறு
முன்பு உலையிலே சோறு சமைப்பது வழக்கம். அப்போது அந்தப் பானையை ஒரு மூடியினால் மூடி அந்தச் சோற்றை வடிப்பார்கள். வடித்து முடிக்கும் வேளையில் அந்த பானையின் முற்பகுதியிலிருக்கும் முன்சோறு வடித்த கஞ்சிக்குள் விழுந்து விடும். இதையே அறவடித்த முன் சோறு கழுநீர்ப்பானைக்குள் விழுந்ததுபோல் என்று சொல்வார்கள். அதாவது ஒரு காரியம் கைகூடும் வேளையில் அந்தக் காரியம் கெட்டுவிடுவதையே இவ்வாறு கூறுவார்கள்.
இனி நீர் கேட்டதற்குப் பதில் சொல்ல வருகின்றேன். இந்த நிலைபடைப்பாளிகளுக்கு ஏற்படுகின்ற ஒரு பொதுவான பிரச்சனைதான். அதற்காக படைப்புகள் சரியில்லை என்று சொல்வதற்கில்லை. முன்னர் அவர் வெளியிட்ட படைப்பிலும் தரங்குறைவானது என்றே பொருள்.

ராம்: நல்ல எழுத்தென்பது ஒரு படைப்புக்கு





முக்கியம். எழுத்தின் தரம் என்பது பலராலும் ரசிக்கக்கூடியதாகவும், வயது வித்தியாசமின்றி வாசிக்கப்படக் கூடியதாகவும் இருக்கவேண்டும். எனவே நல்ல சிந்தனையான எழுத்துக்கும், விரசம் கலந்த எழுத்துக்கும் என்ன வித்தியாசம்?

கவிஞர்: உதாரணமாகக் கூறின்
'அந்த இளைஞன் கர்ப்பிணியான பெண்ணுக்கு உதவி புரிந்தான்:. சொல்லும்போது அதில் ஓர் ஆதங்கம், ஓர் அபிமானம் அவன் மீது ஏற்படுகின்றது. இது தரமான சிந்தனை.

இதை இப்படிச் சொன்னால் எப்படியிருக்கும். அந்தப் பெண் கர்ப்பிணியாவதற்கு இந்த இளைஞன் உதவினான் என்றால் நிலமையைப் பாருங்கள். தரம் என்பது மிகவும் முக்கியம்.
ராம்: கனநேரமா நான் ஒரு கேள்வி கேட்கவேணுமென்று இருக்கிறன். நீங்கள் காதலைப் பற்றிக் கவிதைகள் எழுதுவதில்லையா.

கவிஞர்: சிலவேளைகள் எழுதுவதுண்டு.
ராம்: அதற்குக் காரணம் அனுபவமா? இல்லை கற்பனையா?
கவிஞர்: இது கேட்கத்தான் மெய்யா வந்திருக்கிறீர்போல கிடக்கு,
ராம்: இல்லை உங்களுக்கு அந்த அனுபவம் இருக்கிறதா என்று கேட்க நினைத்தேன்.
கவிஞர்: மற்றாக்களைமாதிரி நான் இல்லையென்று சொல்லமாட்டன். அதேநேரம் ஓமென்றும் சொல்ல மாட்டன்.
ராம்: கேட்க வந்ததை விட்டிட்டன். அதாவது எனக்கொரு காதல் கவிதை சொல்லித் தருவீர்களா?
கவிஞர்: நிச்சயமாக
உன்னில் எனக்குப்பிடிக்காத ஒன்று
என்னை உனக்குப் பிடிக்காதது.
ராம்: சரிபாருங்கோ என்ன தான் பெரிய படைப்பாளிகளாக இருந்தாலும் அவர்களுக்கிடையில் பல பிணக்கங்கள் ஏற்படுவது இப்பொழுது சாதாரணமாகி விட்டது. தங்கள் தரங்களை விட்டிறங்கி சண்டை போடுவது சாதாரண விடயமாகிவிட்டது. இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்.

கவிஞர்: இரண்டு எழுத்தாளர்கள் சந்தித்துக் கொண்டார்களாம். ஒருவர் மற்றவரிடம் கேட்டாராம் ' தாங்கள் வெளியிட்ட புத்தகம் ஒன்றைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. அது மிகவும் தரமான படைப்பாக இருந்தது. அது சரி அதை உங்களுக்கு யார் எழுதித்தந்தது. மற்றவருக்கு மனதுக்குள் கோபம். அதைக்காட்டிக்கொள்ளாமல் கேட்டாராம்' உங்கள் கருத்துக்கு மிகவும் நன்றி. அது சரி அந்தப் புத்தகத்தை உங்களுக்கு யார் உண்மையில அதை யார் வாசித்துச் சொன்னது.


## 'தமிழ்க் கையேடு 2001' TAMIL GUIDE 2001

தமிழ்க் கையேட்டின் 2001 ஆண்டுக்கான 3ம் பதிப்பு,
வெளிவரவிருக்கின்றது என்பதை சிட்னி வாழ் தமிழ்
மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.
இதுவே சிட்னித் தமிழருக்கென வெளிவரும்
ஒரேயொரு சமூக, வர்த்தகக் கையேடு.
இதனை தமிழ் வர்த்தக நிலையங்களில் இலவசமாகப் பெறலாம்.
**தொடர்பு: (02) 9896 6266 or 0412 31 30 10**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கைக்காக

அது 1971ஆம் வருடம் உதித்திருந்த நேரம். ஓர் ஜனவரி மாதக் காலைபொழுதில் கண்டி மகளிர் பாடசாலையில் நான் நான்காம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த காலம் அது.

கண்டி மலைகளுக்குப் பின்னால், பனிபடர்ந்த மரங்களினூடே, ஆதவன் மேலெழுந்து வந்து இரண்டு மணித்தியாலங்களுக் கெல்லாம் எங்கள் பாடசாலை மணி அடித்துவிடும். நாங்கள் எல்லோரும் கவலையற்றுப் பறந்து திரியும் இளஞ்சிட்டுகள் போலே பாடசாலைக்குள் சென்று விடுவோம். அப்புறம் மதியம் 1-30 வரை படிப்பு, ஆட்டம், பாட்டம் கொண்டாட்டம்தான்.

மாணவர் பருவம் என்பது எல்லோருக்கும் இனிமையாய், சந்தோஷமாய் அமைந்து விடுவதில்லை என்பதை எனக்கு உணர்த்தியவள் என்னோடு கூடப் படித்த மேரி என்பவள். வாழ்க்கையில் சிறுவயதிலேயே வறுமையின் கொடுமை, அது தரும் துன்பம், துயரம், விதி காட்டும் கோரமுகம் எல்லாவற்றையும் ஒருசேர அனுபவித்தவள்தான் மேரி.

எனக்குப் பக்கத்து இருக்கையிலேயே அவளை எங்கள் ஆசிரியர் அமர்த்திவிட்டார். அதனாலேயே அவளைப்பற்றி நன்கு அறிந்துகொண்டேன். கள்ளங்கபடமில்லாத முகம், பார்ப்போரைக் கவர்ந்திழுக்கும் காந்தக் கண்கள், இதழோரத்தில் எப்போதும் புன்னகை, இப்படித்தான் அவளை வர்ணிக்கத் தோன்றும். ஆனால், அவள் அணிந்திருந்த யூனிபோமில் மூன்று பீத்தல்கள் (holes) இருந்தன. (Socks) ஸொக்ஸில் உள்ள கிழிசல் தெரியாதவாறு ஸொக்ஸை மடித்து விட்டிருந்தாள். நாங்கள் எல்லோரும் இரட்டைப்பின்னல் பின்னி, நீல றிபனால் முடிச்சுப் போட்டு, இரட்டைப்பின்னல் எங்கள் முதுகில் நாட்டியமாட பாடசாலைக்குச் செல்வோம். மேரி மட்டும் இரட்டைப்பின்னல் பின்னித் தன் தாயின் பழைய நீலச்சேலையில் கிழித்து எடுத்த துணியினால் பின்னலுக்கு முடிச்சுப் போட்டுக்கொண்டு வருவாள்.

மாலினி, ப்ரியா, ரமா எல்லாரும் மேரியை சிலவேளைகளில் *போஸ்ற் பொக்ஸ், போஸ்ற் பொக்ஸ்* என்று பகிடி பண்ணுவார்கள். கண்களில் நீர் வழிந்தோட அவள் என்னைப் பார்ப்பாள்.

"மேரி! நீர் நல்லாய் படிச்சுவந்து இவைக்கு நல்ல பாடம் படிப்பியும். அப்பதான் இவையடை கொட்டம் அடங்கும்" என்று அவ்வப்போது அவளை நான் தேற்றுவதுண்டு. அவள் அணியும் சப்பாத்து அவளுடைய காலளவை விட இரண்டு இஞ்ச் பெரிதாக இருந்தது. எப்படியோ அந்தச் சப்பாத்தையும் போட்டுக்கொண்டு இரண்டு மைல் தூரம் பள்ளிக்கு நடந்து வந்துவிடுவாள்.

நான் ஒருநாள் அவளைக் கேட்டேன், " ஏன் மேரி! உம்முடைய அப்பா டோபி என்கிறீரே, பிறகேன் உம்முடைய யூனிபோம் கொஞ்சம் ஊத்தையாய் இருக்குது?"

"அதுவா, ஆனந்தி! என்டை அப்பா ஊருக்கெல்லாம் உடுப்பு வெளுத்துப் போடுவார். ஆனால் எனக்கிருக்கிறது ஒரே ஒரு யூனிபோம்தான். அதுதான் எனக்கு அடிக்கடி அதைத் தோய்க்க ஏலாது" என்றாள். அவள் கண்ணீருடன் தன் கஷ்டத்தைக் கூற என் கண்களும் நிறைந்துவிட்டன. அதன்பிறகு நான் எடுத்துப்போகும் மதிய உணவில் அவளுக்கும் சிறிது கொடுப்பேன். அப்போதெல்லாம் கண்டியில் பாடசாலை இடைவேளையில் மூன்று பிஸ்கெற் கொடுப்பார்கள். அவள் அதை உண்ணமாட்டாள். ஸ்கூல் பையில் பத்திரப்படுத்தி வைப்பாள். "ஏன் மேரி, நீர் இப்ப இந்த பிஸ்கெற்றைச் சாப்பிட லாமே ஏன் வீட்டுக்குக் கொண்டு போறீர்?" என்று கேட்டால், "இல்லை ஆனந்தி, வீட்டை கொண்டுபோனால் அம்மாவுக்கும் தம்பிக்கும் குடுக்கலாம். அப்பா, கிடைக்கிற சம்பளத்திலை குடிச்சுப்போட்டு, கொஞ்சக் காசுதான் அம்மாவிட்டைக் குடுப்பார். அதாலை வீட்டிலை கஷ்டம்தான்" என்று பதில் கூறுவாள் மேரி. எங்கள் பாடசாலைக் கான்டீனில் வடை, இனிப்பு, கேக், சொக்ளேற்மில்க் (Chocolate Milk) போன்றவை விற்பார்கள். என் அப்பா கான்டீனில் சிற்றுண்டி வாங்க என் அக்காவுக்கும் எனக்கும் சிலவேளைகளில் காசு தருவார். ஒருமுறை மேரிக்கும் ஒரு சொக்ளேற்மில்க் வாங்கிக்கொடுக்க அவள் அதை ஸ்ட்ரா ஊடாக சிரமத்துடன், ஆனால் ஆசையுடன், உறிஞ்சிக் குடித்த காட்சி இன்னமும் என் கண்முன்னே நிழலாடுகிறது.

ஒருநாள் என் அக்காவும் அவள் தோழிகளும் மேரியை அழைத்து, "மேரி! கான்டீனில் ஒரே கூட்டமாக இருக்கிறது. நீ கூட்டத்தில் போய் எங்களுக்குக் கொஞ்ச வடையும் சொக்ளெற்மில்க்கும் வாங்கி வாறியா? நாங்கள் உனக்கு 20 சதம் தருகிறோம். நீ அந்தக் காசுக்கு ஏதும் வாங்கலாம்" என்றார்கள். அவளும் அதற்குச் சம்மதித்து, "அதுக்கென்ன வாங்கித் தாறென்" என்றாள்.

இரண்டு மாதங்கள் கழித்து, கான்டீன் அருகில் என்னருகே நின்ற மேரி, "ஆனந்தி! இப்ப நான் கொஞ்சம் கொஞ்சமாய் ஒரு உண்டியல்லை சில்லறை சேர்த்து வருகிறன;" என்றாள். "ஏன்,


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மேரி! நீர் கிடைக்கிற சில்லறையிலை கான்டீனிலை ஏதும் வாங்கிச் சாப்பிடலாமே!" "இல்லை, என்ரை அம்மாவுக்கு ஒரு பிள்ளை பிறக்கப்போகுது. அநேகமாக அது தங்கச்சியாய்த்தான் இருக்கும் என்று நினைக்கிறன். தங்கச்சிக்கு விளையாட ஒரு பொம்மை (doll) வாங்கப்போறன். 10 ரூபா சேர்க்கவேணும;" என்றாள். "மேரி! இப்ப எவ்வளவு சேர்த்திட்டீர்?" "ஆனந்தி! உம்மடை அக்காவும் தோழிகளும் தாற சில்லறையுடன் பள்ளிக்கூடம் முடிஞ்சதும் நேரே என்ரை அம்மா வீட்டுவேலை செய்யிற நந்தகுமாரம்மா வீட்டுக்குப் போய் பாத்திரம் தேய்ச்சுக் குடுப்பென். அந்த அம்மாவின் இரண்டு வயசுப் பிள்ளையைப் பாத்துவிடுவென். இப்பிடி வேலை செய்யிறதாலை என்ரை அம்மா எனக்குச் சிலவேளை கொஞ்சம் சில்லறை தருவா. இப்ப எல்லாமாய் மூன்று ரூபா சேர்த்துப்போட்டென்.'' என்றாள் மிக்க மகிழ்ச்சியுடன். பிறகு தொடர்ந்து, "சிலவேளைகளில் அப்பாவின்ரை பழைய சைக்கிள் வண்டியிலை ஏறி, வெளுத்த உடுப்புகளை வீடுகளிலை குடுக்கப் போகேக்கைதான் பாத்திருக்கிறன் வடிவான சட்டை எல்லாம் போட்டு, நல்ல நீட்டுத் தலைமயிரோடை, குட்டிச் சப்பாத் தோடை சில பொம்மைகளை வைத்து என்ரை வயசுப் பிள்ளைகள் விளையாடுவாங்க. ஒருநாள் ஒரு பொம்மையை நான் தொட்டிட்டென் என்று அந்தப் பணக்கார வீட்டு அம்மா என்ரை அப்பாவிட்டைச் சொல்ல, அப்பா வீட்டைவந்து எனக்கு நல்ல அடி! அப்ப நான் நினைச்சென், எனக்கு விளையாடப் பொம்மை இல்லாட்டியும் பரவா யில்லை, என்ரை தங்கச்சிக்கு ஒரு பொம்மை வாங்கிக் குடுத்திட வேணுமென்று".

"மேரி! நீர் உம்முடைய சில்லறையெல்லாம் எங்கை சேர்த்து வைத்திருக்கிறீர்?" ஒன்பது வயதுக்குரிய குழந்தைத்தனத்துடன் அவள் எப்படிக் காசைக் கவனம் பண்ணுகிறாள் என்றறிய நான் கேட்க, அவள் கூறினாள், "அம்மாவிடம் கெஞ்சிக் கூத்தாடி ஒரு சின்ன உண்டியல் மட்டும் கண்டி மார்க்கெட்டில் போனகிழமை வாங்கி னனான். அதிலைதான் போட்டு வைக்கிறென்"

மேரியின் தாயின் வயிறு நிறைந்துகொண்டே வர மேரியின் உண்டியலும் நிறைந்து கொண்டே வந்தது. காலமகள் யார் தயவையும் பார்க்காமல் தான்போன போக்கில் ஓடிக்கொண்டிருந்தாள். நாங்களும் நான்காம் வகுப்பு முடிந்து ஐந்தாம் வகுப்பிற்கு வந்துவிட்டோம்.

1972 மே மாதமென்று ஞாபகம். அன்று மலர்ந்த தாமரைப்பூப் போல என்றுமில்லா மலர்ச்சியுடன் ஒருநாட்காலை மேரி என் கைகளைப் பிடித்துக்கொண்டாள்.





"ஆனந்தி! நேற்றுப் பின்னேரம்தான் அம்மாவுக்கு கண்டிப் பெரியாஸ்பத்திரியிலை பிள்ளை பிறந்தது. நான் நினைச்சபடியே பொம்பிளைப் பிள்ளைதான். குட்டி முகம், குட்டி வாய், சரியான குட்டிக்குட்டி விரல்கள், ஆனாலும் பிள்ளை நல்ல சிவப்பாயிருக்குது"

"அப்படியா மேரி! உம்முடைய அப்பா என்ன சொன்னார்?" "அப்பாவுக்கும் நல்ல சந்தோஷந்தான். ராமசாமி வீட்டு அம்மா கொஞ்சம் பழைய சின்ன உடுப்புகள் தந்திருக்கிறா. அதெல்லாம் தங்கச்சிக்குப் போட்டுவிடலாம் என்றா;" என்று கூறினாள்.

நான் சற்றே ஆதங்கத்துடன் அவளை வெறித்து நோக்கினேன். என் கண்களின் ஓரம் நீர்முத்துக்கள் கோத்துக் கொண்டன. மேரி பதறித் துடித்துப்போனாள்.

"ஏன் ஆனந்தி, இருந்தாப்போலை அழுகிறீர்?" "இல்லை மேரி! என்ன இருந்தாலும் நீர் லக்கிதான். இனி வீட்டுக்குப் போனால் நீர் விளையாட தம்பி, தங்கை என்று இருக்கிறார்கள். எனக்குத்தான் என்னோடை விளையாட ஒருவருமில்லை. என்ரை அக்காவுக்கு எந்த நேரமும் படிப்பு யோசனைதான். என்னோடை விளையாடவும் வரமாட்டா". நான் கூறி முடிக்கவும் பாடசாலை மணி அடிக்கவும் சரியாகவிருந்தது. அப்படியே பிரார்த்தனைக் கூட்டத்துக்குப் போய்விட்டோம். அடுத்துவந்த சில நாட்களில் மேரி தன் தங்கை எப்படித் தாயிடமிருந்து ஆசையாய்ப் பால்குடிக்கிறாள் என்பதையும், தகப்பன் குடிப்பதைக் குறைத்து விட்டதையும் மகிழ்ச்சியுடன் கூறினாள். மேரியினது மகிழ்ச்சி ஆண்டவருக்குப் பொறுக்க வில்லைப் போலும். அவள் சந்தோஷக் களிப்பில் கறை ஏற்பட்டுவிட்டது. அந்தச் சின்னஞ் சிறு உள்ளத்தில் குடி கொண்டிருந்த உவகையை சூறாவளியொன்று அடித்துச் சென்றுவிட்டது. எமன் தான்போட்ட கணக்குத் தவறுவதில்லை என்று சரிவர நிருபித்து விட்டான்.

மேரியின் தங்கைக்கு எலிஸா என்று பெயர் வைத்திருந்தார்கள். எலிஸா பிறந்து இரண்டு மாதம் சென்றிருக்கும். ஒரு கிழமை மேரி பாடசாலைக்கு வரவில்லை. அதன்பிறகு அவள் வந்தபோது அவள் கண்களெல்லாம் அழுதழுது சிவந்திருந்தன. அவள் வதனம் வாடி வதங்கிய ரோஜா மலர்போலக் கிடந்தது. மிகவும் சோர்ந்த நிலையில் காணப்பட்ட அவளும் நானும் மதிய இடைவேளையில் பாடசாலைத் தோட்டத்தில் இருந்த பெரிய மரத்தின் கீழ் அமர்ந்து கொண்டோம்.

அந்தப் பெரிய மரக்கிளைகளில்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அணில்கள் "கீச் கீச;" என்று கத்தியபடி அங்குமிங்கும் ஓடியோடி விளையாடிக் கொண்டிருந்தன. இரண்டு சிட்டுக் குருவிகள் தங்களுக்குள்ளே ஏதோ கதை பேசிக் கொண்டிருந்தன. சூரிய ஒளிக்கற்றைகள் மர இலைகளினூடே ஊடுருவி, நிலத்தில் அழகிய கோலங்களைப் போட்டுக் கொண்டிருந்தன. ஆனால் எதையும் ரசிக்கக்கூடிய மனநிலையில் மேரியும் இருக்கவில்லை, நானும் இருக்கவில்லை.

அவள் பேச ஆரம்பித்தபோது குரல் நடுங்கிற்று. நா தழுதழுத்தது. விம்மியபடியே என் கையைப் பற்றிக்கொண்டவள், "ஆனந்தி! ஆனந்தி! எலிஸாவுக்கு நாலு நாளாய் வயித்தாலையும் போய், காய்ச்சலும் இருந்தது. அன்றைக்கு ராத்திரி காய்ச்சல் கூடியிட்டுது என்று அப்பாவும் அம்மாவும் கண்டி பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு போனாங்கள். அடுத்தநாள் காலையில் அம்மாவின்ரை மடியிலை எலிஸா செத்துப் போனாள். அம்மாவுக்குச் சரியான துக்கம். சரியாச் சாப்பிடாமல், கதைக்காமல், ஒரு மூலையிலை இருக்கிறா. அப்பாவும் தம்பியும் கூட அழுதிட்டு இருக்கிறாங்க" என்று கண்ணீருடன் கூறிமுடித்தாள்.

மேரி அழுவதைப் பார்த்ததும் எனக்கும் அழுகை வந்தது. அவளை என்ன கூறி ஆறதல் படுத்துவது, எப்படித் தேற்றுவது எனத் தெரியாமல் அவள் கையைப் பிடித்துக்கொண்டிருந்தேன்.
சில நிமிடங்கள் கழித்து "ஆனந்தி! என்ரை உண்டியல்லை இப்ப ஒரு ஏழு ருபாய்க்குக் கிட்டச் சேர்ந்திருக்கும். இன்னும் மூன்று ரூபா சேர்த்திட்டா எலிஸாவுக்கு ஒரு பொம்மை வாங்கிக் குடுத்திடலாம் என்று நினைச்சேன். அதுக்குள்ளை உப்பிடி நடந்துட்டுதே" என்று கூறிய மேரி கன்னமெல்லாம் நனைய நனைய அழுதாள்.

இந்தச் சம்பவம் நடந்து ஏறக்குறைய மூன்று மாதங்களின் பின்னே எங்கள் சந்திப்பு அதே மரத்தின் கீழ் நடந்தது. முதல்நாள் பெய்திருந்த மழையினால் னைந் திருந்த மண்ணில் எங்கள் சப்பாத்துகள் புதையப் புதைய நடந்து சென்று அந்த மரத்தின் கீழ் அமர்ந்து கொண்டோம்.

சிறிது நேரம் ஒன்றுமே பேசாமலிருந்த மேரி, மெல்ல என் கைகளைப் பற்றிக்கொண்டு "ஆனந்தி! நான் உமக்கு முந்தியே சொல்லியிருந்தபடி பாதர் மாத்யூஸின் உதவி யுடன் எலிஸாவுக்கு ஒரு சின்னக் கல்லறை எழுப்பியாச்சு. நான் ஒன்பது ரூபா சேர்த்திருக்கிறேன். அப்பா தந்த ஒரு ரூபாவையும் சேர்த்து நான் ஆசைப்பட்டபடி பொம்மை ஒன்று வாங்கி நேற்றுத்தான் எலிஸாவின் கல்லறையில் வைத்துவிட்டு வந்தனான்" என்று கூறி முடித்தாள். அவள் கண்களின் ஓரத்திலிருந்து நீர் முத்துக்கள் வழிந்தோடின. புயலுக்குப்பின் ஒரு அமைதி தோன்றுமே, அந்தமாதிரித் தோற்றமளித்தது அவள் வதனம். அமைதித் தேவதையாய் அமர்ந்திருந்த அவள் முகத்தில் சூரிய ஒளிபட்டு அவள் முகம் தகதகவென ஜொலித்தது.

அந்தப் பத்து ரூபாயைச் சேர்க்க அவள் பட்ட கஷ்டத்தையும் கடைசியில் அதைச் சேர்த்து அவள் தன் கடமையை நிறைவேற்றிய மனஉறுதியையும் எண்ணி வியந்து கொண்டே அவளைக் கண்ணிமைக்காமற் பார்த்துக் கொண்டிருந்தேன். அவளும் என்னைப் பார்த்துக்கொண்டிருந்தாள். மதிய வகுப்புகள் ஆரம்பிப்பதற்கான மணி ஒலித்ததும் இருவரும் எழுந்து எங்கள் கைகளைக் கோத்துக்கொண்டு எங்கள் வகுப்பறை நோக்கி நடந்தோம்.

++++++++++++++++++++++++++++++++++++++

ஏறக்குறைய முப்பது வருடங்களின் பின் இந்தக் கதையை நான் எழுதும்போது, ஆரம்பத்தில், பிறக்காத தங்கைக்காக சில்லறை சேர்த்த மேரி, அப்புறம் பிறந்த தங்கைக்காக சில்லறை சேர்த்த மேரி, இறுதியில் இறந்த தங்கைக்காக சில்லறை சேர்த்த மேரிதான் என் மனக்கண் முன்னே தோன்றித் தோன்றி மறைகிறாள்.

இப்போதெல்லாம் நானும் என் சிவப்பு உண்டியலில் அவ்வப்போது சில்லறை சேர்த்து, ஒரு கணிசமான தொகை தேறியதும் அதை மாற்றி *அநாதை இல்லம்* ஒன்றிற்கு அனுப்பிவருகிறேன். இந்தக் கதையை வாசிக்கும் வாசகர்களும் வருஷத்தில் ஒரு தடவையாவது உலகத்தில் எந்த மூலையிலாவது இருக்கும் அநாதை இல்லமொன்றிற்குப் பணம் அனுப்பினார்களானால், மேரி போல் சிரமப்படும் எத்தனையோ குழந்தைகள் பயன் பெறுவார்கள்.

வாசகர்களின் தாராளமான மழையால் என் நம்பிக்கை மொட்டு விரைவில் மலர்ந்து விடும் என்ற திடமான நம்பிக்கையுடன் இந்தக் கதையை முடிக்கிறேன்.

## கலப்பையின் மின்அஞ்சல் தொடர்பு

கலப்பையின் புதிய மின்அஞ்சல் முகவரி kalappai@yahoo.com என்பதை அறியத் தருகின்றோம். கலப்பை சந்தாதாரர்கள், வாசகர்கள் அனைவரதும் மின்அஞ்சல் முகவரிகளை சேகரித்து வருகின்றோம். உங்கள் மின்அஞ்சல் முகவரிகளை எமக்கு அனுப்பி வைப்பதன் மூலம், நீங்கள் இந்த முயற்சியை இலகுவாக்கலாம். எதிர்காலத்தில் கலப்பை பற்றிய புதிய விடயங்களை உடனுக்குடன் அறிந்து கொள்வதற்கும், உங்கள் கருத்துப் பரிமாற்றத்திற்கும் (விமர்சிக்கவோ அல்லது விவாதிக்கவோ) இது மிகவும் உதவியாக இருக்கும் என்பது எமது நம்பிக்கை. - ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதய சூரியன் ... வெளிச்சவீடு ... ஒரு தேர்தல் !!!

*- ராதாகிருஷ்ணன் மாயழகு -*

இன்று வெள்ளிக்கிழமை, வார இறுதி விடுமுறை நாட்களை எண்ணி ஒரே உற்சாகம். அலுவலக வேலைப்பளுவில் மூழ்கியிருந்த எனக்கு நேரம் மாலை 6.00 மணியானதே தெரியவில்லை. சுமார் இரண்டுமணி நேரத்திற்கு முன்பே அலுவலக நண்பர்களில் பெரும்பாலானோர் "Have a good week-end Mate" என்று கூறிச் சென்றது இப்போதுதான் ஞாபகம் வருகின்றது. இந்த வாரத்திற்குரிய கடமைகள் அனைத்தும் முடித்த மனத்திருப்திக்கு, இரண்டு நாள் விடுமுறை என்கின்ற எண்ணம் முத்தாரம் வைக்கிறது. ஒரு துள்ளல் நடையோடு உற்சாகமாகக் காரில் ஏறி, ஏறிய கையோடு C.D. Playerஐத் தட்டிவிடுகிறேன். பழைய பாடல்களை என்றுமே புதிய பாடல்களுக்கு நிகராக இரசித்துக் கேட்கின்ற எனக்கு, C.D.யில் ஒலித்த *அமைதியான நதியினிலே ஓடும் ஓடம்* பாடல் மனதை இதமாகத் தாலாட்டுகின்றது. இந்தப் பாடல் எத்தனை தடவை கேட்டாலும் ஒவ்வொரு தடவையும் மனதில் அமைதியையும், ஒரு இனம்புரியாத உணர்வினையும் தூண்டுகின்ற பாடல். மேலும் இளமைக்கால நினைவுகளையும் இப்பாடல் ஒவ்வொரு தடவையும் மீட்டிவிடத் தவறுவதில்லை. பாடல் மீட்டிய நினைவலைகளில் தவழ்ந்தவாறே நான் வந்துகொண்டிருக்கின்ற Hume Highwayஐ ஒருநோட்டம் விடுகிறேன். கோடை முடிந்து இலையுதிர் காலம் ஆரம்பமானபோதிலும், மணி 6.00ஐக் கடந்தும் அந்தி வெய்யில் *சுள்* என்று எரித்துக் கொண்டிருக்கின்றது. காரின் முன்கண்ணாடியை ஊடுருவி வந்த வெய்யிலினால் உடலில் இலேசாக வியர்வை துளிர்க்கின்றது. மனதிலிருந்த மகிழ்ச்சியில் வெப்பம் ஒரு பொருட்டாகவே தெரியவில்லை. பாடலை இரசித்தவாறே வீதியை மீண்டும் ஒரு நோட்டம் விடுகிறேன் ம்...ம்...... *ஊரிலையெண்டா இந்நேரம் சூரியன் படுவான்கரை ஆற்றிலை இறங்கத் தொடங்கியிருப்பான்* என்கின்ற எண்ணம் மனதில் எங்கோ ஒரு மூலையிலிருந்து பளிச்சென்று தோன்றி மறைகின்றது. அவ்வெண்ணத்தோடு கூடவே சுமார் பத்து பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சில நிகழ்வுகளும் மனதை மெதுவாக ஆக்கிரமிக்கத் தொடங்கின. நினைவலைகளில் சங்கமிக்கத் தொடங்கிய எனக்கு ஒரு சந்தேகம். ஆம்! காரில் போகிறோமா, அல்லது படுவான்கரை ஆற்று சூரிய அஸ்தமனக் காட்சியை இரசித்தவண்ணம் எனது லுமாலா சைக்கிளில் போகிறோமா, என்று !

சூரிய அஸ்தமன சிந்தனை எழுந்தபோது அதனோடு தொடர்புபட்ட பல சம்பவங்களும் மனத்திரையில் படமாக ஓட ஆரம்பிக்கின்றன. சூரியன் ஒருபுறம் மறைய, மறுபுறம் கல்லடிக் கடற்கரையில் நண்பர்களோடு கூடியிருந்து அரட்டையடித்த நாட்கள். இப்போது இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருக்கும் கோட்டைமுனைப் பாலத்தின் இரு மருங்கிலும் அமைந்துள்ள கட்டில் நண்பர்களோடு கூடியிருந்து மரவள்ளிக்கிழங்கும் சுண்டலும் உண்ட ஞாபகம். தமிழ் தேசிய இராணுவம் பலாத்கார ஆட்சேர்ப்பு நடாத்திய நாட்களில் எமது சிறிய நண்பர் குழாம் ஒன்று ஒவ்வொருநாளும் இரகசிய கூட்டம் கூடி அரட்டையடிப்பதுடன், எமது உள்ளக் குமுறல்களையும் பகிர்ந்துகொண்ட ஞாபகம். களைத்துக் களைப்படைந்ததும் இராணுவ புல்டோசர்கள் இடித்துத் தள்ளிய எங்கள் வீட்டின் இடிபாடுகளில் அமர்ந்து உணர்ச்சியற்ற நிலையில் சூரிய அஸ்தமனத்தினை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ஞாபகம். சூரிய அஸ்தமனவேளையில் யுஃடு ரியூஷன் முடிந்துவரும் பெட்டைகளுக்கு நக்கலடித்து சேட்டை பண்ணிய நாட்கள், மற்றும் *மன்ரேசா* தியான இல்லத்தின் மொட்டைமாடியில் அமர்ந்து அமைதியாக சூரிய அஸ்தமனத்தை இரசித்த ஞாபகம். இப்படி எத்தனையோ ஞாபகங்கள் மனத்திரையில் நொடிப்பொழுதில் ஓடி மறைந்தன.

இந்த ஞாபகங்கள் அனைத்தும் கடலலையைப்போன்று தோன்றி மறைந்தாலும், சூரிய அஸ்தமனம் பற்றிய ஒரு சுவையான வாக்கியம் பயன்படுத்தப்பட்ட ஒரு சம்பவம் தொடர்பான ஞாபகம் மாத்திரம் எனது எண்ணக் கிடக்கைகளை ஆழமாகக் கிளற ஆரம்பித்தது.

ஆம்! அது 1989ம் ஆண்டு பொதுத்தேர்தல் காலப்பகுதி. அமைதி காத்தல் என்கின்ற போர்வையில் இந்திய இராணுவம் தமிழ் பிரதேசங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த காலப் பகுதி அது. மேற்படி எனது எண்ண அலைகளைத் தூண்டிவிட்ட அந்தச் சம்பவம் இந்தத் தேர்தலின் போதுதான் இடம்பெற்றது.

மேற்படித் தேர்தலின்போது யாழ்குடாநாட்டிலே கடுமையான சண்டை இடம்பெற்றுக் கொண்டு இருந்தது. யுத்த கெடுபிடியினால் தேர்தல் யாழ்குடாநாட்டில் சூடுபிடிக்கவில்லை. ஆகவே தமிழ்க் கட்சிகளுக்கிடையிலான பலமான போட்டி கிழக்கு மாகாணத்தினை, குறிப்பாக திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களை, மையமாகக் கொண்டதாக அமைந்திருந்தது. இலங்கை அரசியல் வரலாற்றிலே முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகக் கருதப்படும் இத்தேர்தல், வடக்கு-கிழக்கு மாகாணம் வாழ் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையிலும் பல்வேறு காரணங்களுக்காக முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகக் கருதப்படுகின்றது.

இலங்கை அரசியலைப் பொதுவாக எடுத்துக்கொண்டால் 1977


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யூலை தேர்தலை அடுத்து 12 ஆண்டுகளுக்குப் பின்னர் இடம்பெறும் முதலாவது தேர்தல் அது. ஜே-ஆர்.ஜெயவர்த்தனா வின் அரசியல் வாழ்வு முற்றுப்பெற்று பிரேமதாசா யுகம் ஆரம்பமாக வழிசெய்த தேர்தல் அது. மேலும் இலங்கையில் இரண்டாவது குடியரசு யாப்பு நடைமுறைக்கு வந்தபின்னர் விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் நடாத்தப்பட்ட முதலாவது தேர்தல் அது. மறுபுறத்தில் தமிழர்களைப் பொறுத்தவரையில் தமிழினம் எண்பதுகளின் ஆரம்பம் முதலே தேசிய அரசியலிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட இனமாக விளங்கிவந்ததனால் தேர்தல் ஒன்று தமிழ்ப் பிரதேசங்களில் இடம்பெற்றமை தமிழர்களும் இந்நாட்டுப் பிரஜைகள்தான், அவர்களுக்கும் தேசிய அரசியலை நிர்ணயிப்பதில் ஒரு பங்குண்டு என்பதனை எங்களைப்போன்ற ஒரு புதிய தலைமுறைக்கு ஞாபகப்படுத்தும் ஒரு தேர்தலாக அத்தேர்தல் அமைந்தது. மேலும் போராட்டம் என்பது மட்டும்தான் அரசியல் என்று எண்ணியிருந்த தமிழ் இளைஞர்களுக்கு ஒரு ஜனநாயக நாட்டில் தேர்தல் என்ற ஓர் அடிப்படையான நடைமுறை உள்ளது என்பதனை நினைவூட்டுவதாக இத்தேர்தல் பரவலாகக் கருதப்பட்டது. இப்பொதுத் தேர்தலுக்குச் சற்று முன்னராக இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தலில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஆட்சியைக் கைப்பற்றியிருந்த E.P.R.L.F. இயக்கத்தின் தலைமையிலான கூட்டணியின் செல்வாக்கினைப் பரீட்சிக்கும் ஒரு தேர்தலாக இத்தேர்தல் அமைந்ததோடு, அவ்வியக்கத்தினரால் தேசிய அரசியலில் ஏதாவது பாதிப்பினை ஏற்படுத்த முடியுமா என்ற கேள்வியினைத் தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக ஏற்படுத்திய ஒரு தேர்தலாகவும் அமைந்தது.

முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையில் வடக்கு-கிழக்கு மாகாணசபை தேர்தலினூடாக அரசியல் கிரகப்பிரவேசம் செய்திருந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அரசியலில் ஒரு ஸ்திரமான காலடியினை எடுத்துவைக்க வழிசெய்ததொன்றாக இத்தேர்தல் அமைந்தது.

இவை அனைத்துக்கும் மேலாக 1983ம் ஆண்டு முதலே அரசியல் அரங்கத்திலிருந்து ஒருங்கியிருக்க நிர்ப்பந்திக்கப் பட்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியலில் மீளக் காலடி எடுத்து வைத்த ஒரு தேர்தலாகவும் இத்தேர்தல் அமைந்தது. அத்துடன் தமிழரின் இனப்பிரச்சினைக்கு ஆயுதப் போராட்டமே தீர்வு என்ற இளைய தலைமுறை எண்ணியிருந்த ஒரு காலகட்டத்தில் மிதவாதிகளின் செல்வாக்கினைப் பரீட்சிக்கும் ஒரு தேர்தலாகவும் இது அமைந்தது.

இத்தேர்தல் காலத்திலேதான் மீன்பாடும் தேன்நாடாம் மட்டக்களப்பில் க.பொ.த. உயர்தர வகுப்பில் நான் படித்துக் கொண்டிருந்தேன். சூரிய அஸ்தமன ஞாபகம் மேற்படி தேர்தல்கால ஞாபகங்களை மெதுவாக அசைபோட வைக்கிறது.

இத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஈரோஸ் எனப்படும் ஈழமாணவர் புரட்சிகர அமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் இணைய, விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் ஈ.பீ.ஆர்.எல்.எவ். எனப்படும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, T.E.L.O. எனப்படும் தமிழீழ விடுதலைக் கழகம், E.N.D.L.F. எனப்படும் ஈழ தேசிய ஜனநாயக முன்னணி என்பவற்றுடன் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி கூட்டாக களத்தில் இறங்கிப் போட்டியிட்டது.

தேர்தல் களத்தில் இறங்கிய ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொருவகையான சிறப்பம்சங் களைக் கொண்டதாக அமைந்திருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியினை எடுத்துக்கொண்டால், அக்கட்சியின் 12 ஆண்டு கொடுங்கோலாட்சியின் பேறு தமிழினம் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்தது. அப்படியிருந்தபோதிலும், இக்கட்சி எந்த முகத்தோடு தமிழ் மக்கள்முன் வாக்குக் கேட்டு வந்துள்ளது என்று மக்கள் அக்கட்சியினை வியப்போடு நோக்கினர். ஐக்கிய தேசியக் கட்சிமீது மக்களுக்கு மிகுந்த சீற்றம் இருந்தபோதிலும் தேசிய ரீதியில் அக்கட்சி ஆட்சியில் இருந்தமையால் அதன் மூலமாகக் கிடைக்கக்கூடிய சலுகைகளில் மோகம்கொண்ட அடிவருடிகள் சிலர் அக்கட்சியின் சார்பாகத் தேர்தல் களத்தில் இறங்கியிருந்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை வேட்பாளராக வாழைச்சேனை கடுதாசிக் கூட்டுத்தாபன ஆளணி முகாமையாளர் திரு ஈஸ்வரன் அவர்கள் போட்டியிட்டார்.

மேற்படி தேர்தல் விடயத்தில் என்னைப்போன்ற மாணவர்களின் கவனத்தினை ஈர்த்த ஒரு முக்கிய காரணி, அத்தேர்தலில் ஆசிரியர்கள், பாடசாலை அதிபர்கள் என சில முக்கியஸ்தர்கள் இறங்கியதாகும் எனக்கூறினால் அது மிகையாகாது. ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் மட்டு. இந்துக்கல்லூரி திரு சாரங்கபாணி அவர்கள் போட்டியிட்டார். மேலும், ஈழமாணவர் புரட்சிகர முன்னணியின் தலைமை வேட்பாளராக மட்டு. அரசடி மகாவித்தியாலய அதிபர் திரு. சௌந்தரராஜா அவர்கள் போட்டியிட்டார். அவரைத் தவிர பிரபல பொருளியல் ஆசிரியர் திரு.ஆழகு குணசீலன் அவர்களும் அக்கட்சியின் சார்பில் போட்டியிட்டார். முன்னைநாள் மட்டு. மெதடிஸ்ற் மத்திய கல்லூரி அதிபர் திரு பிரின்ஸ் காசிநாதன் தேர்தலில் போட்டியிட்ட மேலும் ஒரு முக்கியஸ்தவராவார். இப்படி ஆசிரியர்கள் தேர்தல் களத்தில் இறங்கியது அவர்களின் அந்நாளையதும், மற்றும் முன்நாளையதும் மாணவர்கள் மத்தியில் தேர்தல்பற்றிய ஆர்வத்தினை ஏற்படுத்தியது.

தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைக்கலை

திருமதி. கனகாம்பிகை ஜெகநாதன்

இயல், இசை, நாடகம் எனப்படும் முத்தமிழில் இசை மிகவும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. தொன்றுதொட்டு வந்துள்ள 64 கலைகளில், லலிதகலைகள் எனப்படும் நுண்கலைகள் நமது உள்ளத்தை ஈர்த்து, மேலான உணர்ச்சியையும், கலை இன்பத்தையும் உண்டாக்குவன: அனைவரையும் பரவசப்படுத்தும் இயல்புடையவை. நுண்கலைகளுள் இசைக்கலை மிகமேன்மையான கலையாகும். இசை பயில்வதனால் ஒருவனிடம் நற்குணங்கள் விருத்தியாகி, துர்க்குணங்கள் ஒழிகின்றன. பலதேசத்து மக்களையும் ஒன்றுசேர்க்கும் சக்தி இசைக்கலைக்கே உண்டு. சங்கீதத்திற்குக் *காந்தர்வ வேதம்* என்று பெயர். காந்தர்வவேதம் நான்கு உபவேதங்களில் ஒன்று.

இசைக்கலை ஒரு தெய்வீகமான ஒரு கலையாகும். ஏனைய கலைகளையும் சாஸ்திரங்களையும் கற்பதனால் அடையக்கூடிய பயனை ஒருவன் நுண்கலைகளில் முதன்மையான இசைக்கலையை முறையாகக் கற்பதனால் பெறமுடியும். இறைவன் மனிதனுக்கு அருளிய குரல் பேசுவதற்கு மட்டுமல்லாது பாடுவதற்குமாகும். பாடும்போதுதான் ஒருவன் குரலின் முழுப்பயனையும் அடையமுடியும். இசை பயிலாத ஒருவன், இவ்வுலகில் இயல்பாகவே தனக்குக் கிடைக்கக்கூடிய கலை இன்பத்தையும் தெய்வீக உணர்ச்சியையும் இழக்கின்றான். இறைவழிபாடு செய்வதற்கும், இறைவனை அடைவதற்கும் இசை ஒரு முக்கிய சாதனமாகும். கடவுள் நாதப்பிரம்மாய் விளங்குகின்றார். *ஏழிசையாய் இசைப் பயனாய்* என்று வரும் தேவாரத்தில் சுந்தரமூர்த்திநாயனார் இறைவனைப்பற்றிக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இறைவனை அறிவதற்கும் அடைவதற்கும் அநேக மார்க்கங்கள் இருந்தாலும் இசைமார்க்கம் இனிமையானதும் மிகச் சுலபமான மார்க்கமும் ஆகும். வார்த்தைகளால் வெளியிடமுடியாத அதிநுட்பமான கருத்துக்களையும் இசையின் மூலமாக வெளியிடலாம்.

தமிழ் மக்கள் பண்டைய காலத்தில் ஒரு உன்னதமான இசையை இசைத்து வந்தார்கள் என்பதைச் சிலப்பதிகாரத்திலிருந்தும் புராதன தமிழிசை நூல்களிலிருந்தும் அறியலாம். இந்தமுறை தற்போது வழக்கத்தில் இல்லாவிடினும் அதன் சிறந்த அம்சங்கள் பிற்கால இசையில் பின்னர் புறப்பட்டன. இசைக்கு ஆதாரம் நாதமே. நாதத்தினின்று சுருதிகளும், சுருதிகளினின்று ஸ்வரங்களும், ஸ்வரங்களினின்று இராகங்களும் உற்பத்தியாகின்றன. ஸ்வரம் என்னும் பதத்திற்கு இயல்பாகவே ரசனையைக் கொடுக்கும் த்வனி என்று பொருள். சங்கீதத்திற்கு ஆதாரமாயுள்ளவை ஸப்தஸ்வரங்களாகும்.

இந்திய இசையை இராக சங்கீதம் என்றும், மேல்நாட்டுச் சங்கீதத்தை சமவாத சங்கீதம் என்றும் அழைப்பர். இந்திய சங்கீதத்திலுள்ள நுண்மையான சுருதிகள், கமகங்கள் முதலிய அருமையான இசைத்தத்துவங்களை மேல்நாட்டு இசையில் காணமுடியாது. இந்திய சங்கீதம் மிகவும் பழமையானது. பண்டையகாலத்தில் இந்தியா முழுவதும் ஒரே வகையான இசை வழக்கத்திலிருந்தது. பின்னர் வடநாட்டு (ஹிந்துஸ்தானிய) சங்கீதம் என்றும், தென்நாட்டு (கர்நாடக) சங்கீதமென்றும் வேறுபாடு ஏறக்குறைய 600 வருடங்களுக்கு முன்புதான் ஏற்பட்டது. பின்பு இவை தனித்தனியாக வளர்ச்சிபெற்று வந்துள்ளன.

தென்னிந்திய சங்கீதத்திற்குப் புத்துயிரளித்து, நூற்றுக்கணக்கான அரிய உருப்படிகளை இயற்றி அநேக அபூர்வராகங்களைப் பிரசித்தப்படுத்திய மூன்று இயலிசைப் புலவர்களாகிய ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள், முத்துஸ்வாமித் தீக்ஷதர், சியாமா சாஸ்திரிகள் என்னும் மகான்களாவர். இவர்களைச் சங்கீத *திரிமூர்த்திகள்* என அழைக்கின்றார்கள். புகழ்பெற்ற அநேக வாக்கேயகாரர்கள் இருந்தாலும் இம்மூவரைமட்டுமே இவ்வாறு அழைப்பதற்குப் பல காரணங்கள் உள. தற்காலத்தில் பாடப்பட்டுவரும் கிருதி என்னும் உருப்படிவகையைச் சிறந்த நிலைமைக்குக் கொண்டு வந்தவர்கள் இம்மூவருமேயாகும். ராகபாவம் ததும்பும் இம்மகான்களின் உருப்படிகளில் அநேக அபூர்வராகங்களும், புதிய ராகங்களும் காணப்படு கின்றன. முன்பெல்லாம், ஒரே வர்ணமெட்டில் பல ஸாகித்தியங்கள் கூடுதலாக வழக்கத்திலிருந்தன. சங்கீத திரிமூர்த்திகள்தான் முதன்முதலில் ஒவ்வொரு பாடலும் தனித்தனி வர்ணமெட்டில் அமையவேண்டும் என்ற நியதியைக் கடைப்பிடித்தார்கள். இதனால் நாதரசனை வளரலாயிற்று. மனதைக் கவரும்படியான அநேக கிருதிகளை இவர்கள் இயற்றியுள்ளார்கள்.

உன்னதமான இசையை நாம் அடிக்கடி கேட்பதால் நமக்கு மன அமைதி ஏற்படுகின்றது. சங்கீத சாஸ்திர ஞானத்தை எவனொருவன் பெறுகின்றானோ அவன் ஸாரூப்பிய பதவியை அடைகின்றான். ஸ்ரீதியாகராஜ சுவாமிகள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:-

*ஸங்கீத சாஸ்த்ர ஞானமு*
*ஸாரூப்ய ஸௌக்யதமே மனஸா.*

இதன் பொருள். ஸங்கீத சாஸ்திர ஞானம், ஸாரூப்யம் என்னும் பேரின்பத்தைத் தரும், என்பது. அதாவது, வெறும் சங்கீதம் கற்றால்மட்டும் போதாது: அதனுடைய பூரண இன்பத்தையும் அனுபவிக்க வேண்டுமானால் அதன் அடிப்படையான சாஸ்திரத்தையும் தெரிந்துகொள்ளவேண்டும்.

இசைக்கலை ஒரு நிகரற்ற கலை எனலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரண்பாடுகள்

பாமதி சந்திரசேகரம்

விதை தூவினேன்
முட்கள் மட்டுமே பிரசவிக்கின்றது

இலைகள் உதிர்த்து
அம்மணமாய் கிளைகளும் வேர்களுமாய்

முடியவில்லையே
பூக்களை பிரசவிக்க முடியவில்லை
கழுத்து முறிந்த மானிடர்கள்
மனிதத்தை நேசித்தவர்கள்
ஆயுள் கைதியாய் காணாமல் போயினர்

மேகத்திற்கு பின் ஒளித்து
வாழ்கையின் யதார்த்திகள்
கோழமையே எதிலுமாய்-உடனே
என் கர்ப்பம் கலைகின்றது
முட்கள் மட்டுமே பிரசவிக்கின்றது

குருதியாய் கொப்பளிக்கிறேன்
முரண்பாடுகளே மிஞ்சிக்கிடக்கின்றது
எவனோ என் வாழ்கைக்கு
விடைகள் எழுதி வைத்தான்
பொருந்தாமல் கைகளால்
கேள்விகளை உந்தித் தள்ளுகிறேன்.

முயற்சித்து குழி தோண்டி புதைக்க எத்தனித்னே்
முகம் குதிவரை கொப்பளங்கள்
குட்டரோகி போல்

முடியாது

பூக்களை பிரசவிக்க முடியாது

இவ்வுலகம் இவ்வாறு இருக்கையில்
இதுவே என் உரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேர்பெற்ற இலக்கிய விவாதம் : *சிலப்பதிகாரம்*

– *கலாகீர்த்தி, பேராசிரியர், டாக்டர் பொன் பூலோகசிங்கம்* –

சிலப்பதிகாரம் எனும் பேரிலக்கியத்தினைப்பற்றி அறியாத – கேள்விப்படாத – தமிழறிவுள்ளவர்கள் இன்று மிகக்குறைவாகவே இருக்கிறார்கள். ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்கூறிலும்கூட சிலப்பதிகாரத்தினைத் தமிழ் வித்துவாமிசர் பலர் கேள்விப்படவில்லை. சிலப்பதிகாரமா அல்லது சிறப்பதிகாரமா என்று அவர்கள் ஐயுற்றிருக்கிறார்கள். திருவாவடுதுறை வித்துவான், கும்பகோணம் காலேஜ் பண்டிதர் உ.வே.சாமிநாதையர் 1880ஆம் ஆண்டு அக்தோபர் 21ஆம் தேதி சேலம் கோ.இராமசாமி முதலியாரைச் சந்தித்தமையால், சிலப்பதிகாரம் முதலாம் பழமையும் பெருமதிப்புமுடைய தண்டமிழ் நூல்களிற் பொதிந்து கிடக்கும் இன்றமிழ் இயற்கை இன்பத்தை மாந்தி மகிழ முடியாமற் போய்விட்டதே என்று வருந்தி, சிலப்பதிகாரத்தினைத் தேடித் தமிழ்நாட்டின் பல்வேறு ஊர்களிலும் அலைந்தபோது, தமிழ்நாட்டு வித்துவாமிசர் பலருக்கு, அத்தகைய ஒரு தமிழ்நூல் இருந்ததே தெியவில்லை. அவர்களிலே சிலர் நூற்பெயர் சிறப்பதிகாரமாக இருக்குமோ என்ற ஐயத்தினையும் ஐயரவர்களிடம் தெரிவித்துள்ளனர் (உ.வே.சாமிநாதையர் **என் சரித்திரம்**, முதற்பதிப்பு 1950, பக்.726, 936–937). இச்செய்தியைப் பேராசிரியர் எஸ் வையாபுரிப்பிள்ளையும் ஐயரவர்கள் தமக்குக் கூறியதாக எடுத்தாண்டுள்ளார் (**இலக்கிய மணிமாலை** 2ம் பதிப்பு 1957, பக். 126–127) . இந்நிலைமை 1872இலே சிலம்பின் முதற்காண்டம் (புகார்க் காண்டம்) முதல் எட்டுக்காதை (வேனிற் காதை) முடிய மூலம் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்ட பிறகும் காணப்படுதல் வியப்பினை அளிக்கலாம். மேலும் ஐயரவர்களின் தேடுதலுக்கு முன்பே (1880 சித்திரை) அவருடைய ஆசிரியர் திரிசிரபுரம் மகாவித்துவான் சி.மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மூத்த மாணவர் சோடசாவதானம் சுப்பராயச்செட்டியார் புகார்க்காண்டத்தினை அடியார்க்கு நல்லார் உரைச்சுருக்கத்துடனும் தாம் கானல்வரிக்கு எழுதிய புத்துரையுடனும் வெளிப்படுத்தியிருந்தார்.

தமிழ்நாட்டிலே சிலப்பதிகாரம் பயிற்சிகுன்றி விளங்கியமைக்கு, அக்காலத்தில் மரபுவழிக் கல்வியில் ஆதீனக்கல்வி செலுத்திய தாக்கம் முக்கிய காரணமாயது என்பதை உ.வே.சாமிநாதையரின் *என் சரித்திரமும்* திருவாவடுதுறை ஆதீன ஈசானதேசிகர் *இலக்கணக்கொத்துரையும்* (பாயிரம், ஏழாம் நூற்பாவுரை) உணர்த்துகின்றன. புறச்சமய நூல்களையும் சமயச்சார்பு குறைந்த உலகியல் நூல்களையும் ஆதீனக் கல்வி அன்று புறக்கணித்துவந்தது. 1872இலே சிலம்பின் புகார்க்காண்டப் பகுதியின் பதிப்பாசிரியர் சென்னை பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதர் தி.ஈ.ஸ்ரீவாஸ ராகவாச் சாரியார் நூலாசிரியரைச் சேரமான் பெருமாணாயனார் என்று கூறினாரேயொழிய இளங் கோவடிகள் என்று கூறவில்லை. சேரமான் பெருமாணாயனார் சுந்தரமூர்த்தி நாயனாருடைய நண்பர், எனவே சுந்தரர்

காலமான இரண்டாம் நரசிம்மவர்மன் (690 - 729) காலத்தவர். இவருடைய மூன்று பிரபந்தங்களையும் உள்ளடக்கிய பதினோராம் திருமுறை 1869இலே ஆறுமுகநாவலர் அவர்களால் அச்சிடப்பட்டுவிட்டது. இளங்கோவடிகளை அன்று தமிழ்நாடு அறிந்திருக்கவில்லை.

ஈழநாட்டிலே சிலப்பதிகாரம் என்ற பெயரிலோ அதன் ஆசிரியர் இளங்கோவடிகள் பெயரிலோ மயக்கம் இருந்ததாகக் கூறமுடியவில்லை. சீமான் காசிச் செட்டி அவர்கள் இலங்கை வேத்தியல் ஆசிய சங்கத்தில் 1848 ஜூன் மூன்றாம் தேதி வாசிக்க ஆரம்பித்த தமிழ்நூற் பட்டியலிலே சிலப்பதிகாரம் என்ற பெயரையும் அதன் கதைப்போக்கினையும் செய்யுளியல்பையும் குறிப்பிடத்தக்கவராகக் காணப்படுகிறார்.
(A Catalogue of Books in the Tamil Language with the names of the Authors, the Subjects and the Dates as far as they can be ascertained - JCBRAS 2.4.59-80: 2.5.180-187 (1848-1849: Pub.in 1887-1890).
ஆயினும், அதன் ஆசிரியர் இன்னார் என்றும் அதன்காலம் இன்னது என்றும் அவராற் குறிப்பிடமுடியவில்லை.

ஆயினும் இலங்கையிலே தோன்றிய சிலம்புக் கதைகளிலே சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் என்ற விபரம் இடம்பெறுவதை மா.சே.செல்லையா பதிப்பித்த *கோவலனார் கதையும்* (1962) பண்டித வித்துவான் வி.சீ.கந்தையா வெளியிட்ட *கண்ணகி வழக்குரையும்* (1968) தெளிவாக உணர்த்துகின்றன. யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிந்த ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலே (கிபி. 14ஆரம்ப – 17ஆரம்ப நூற்றாண்டுகள்) எழுந்ததாக நிறுவக்கூடிய கிராமியப் போக்குமிக்க ஈழத்துச் சிலப்பதிகாரக் கதைகள் தரும் இளங்கோவடிகளைக் குறிப்பிடும் பாடல்களை *"வெள்ளிப்பாடல்"* அல்லவெனத் துணியின் சீமான் காசிச்செட்டியவர்கள் காலத்திற்கு (1807–1860) பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகளை ஈழம் போற்றிவந்திருந்தமை புலனாகும்.

ஈழத்திலே தமிழ்நாட்டில் நிலவியதுபோன்று ஆதீனங்களும் மடங்களும் இருக்கவில்லை. தமிழ்நாட்டிலே சைவாதீனங்களே பதினெட்டு நிலவியிருக்கின்றன. வீரசைவமடம், கௌமாரமடம், வேதாந்தமடம், சங்கராமடம் என வேறு சிலவும் நிலவி யுள்ளன. அவை மரபுக்கல்வியிலே அக்கறை காட்டியுள்ளன. ஈழத்திலே மரபுக்கல்வி சமயக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் மட்டும் அமையாமலிருந்தமை குறிப்பிடத் தக்கது. இதனால் கம்பராமாயணம், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் போன்ற பேரிலக்கியங் களும், கந்தபுராணம், பெரியபுராணம், தணிகைப்புராணம், திருவாதவூரடிகள் புராணம், திருச்செந்தூர்ப்புராணம் போன்றனவற்றிற்கு ஈடாகச் செல்வாக்குப் பெற்றிருந்தன.

சிலப்பதிகாரக்கதை மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம் எனும் மாநிலங்களிலே திருத்தலங்களிற் பாராயணம்பெற்ற நூற்பொருளாக அமைந்திருந்தது. அங்கணாமக்கடவை, ஆரைப்பற்றை, களுதாவளை, காரைதீவு, சிற்றாண்டி, செட்டிபாளையம், தம்பிலுவில், தேற்றாத்தீவு, நீலாவணை, மகிழடித்தீவு, மந்திகை, வந்தாறுமூலை, வற்றாப்பளை, வீரமுனை போன்ற ஊர்களிலே சிலம்புக்கதை வருடாவருடம் வைகாசிப்பொங்கலை இலக்காக வைத்துப் படிக்கப்பட்டு வந்துள்ளது. சிலப்பதிகாரத்தினை அடியார்க்கு நல்லார் உரையுடன் பதிப்பிக்கத் தூண்டிப் பொருளுதவி செய்த கொழும்பு பொ.குமாரசுவாமி முதலியாரை (1849–1906) அவ்வாறுசெய்ய வைத்த காரணிகளிலே ஈழத்திலே வழங்கிய சிலப்பதிகாரக் கதைகளும் அடங்குவன.
(Chilappathikaram, JCBRAS, 13.44. 81-89 (1893).

தமிழகத்திலே சேரன் செங்குட்டுவனுக்கு முன்பிருந்தே கோயில் கொண்டு விட்ட கண்ணகி மாரியம்மனாகவும், பகவதியாகவும், ஒற்றைமுலைச்சி அம்மனாகவும் மாற்றம் அடைந்து, துர்க்கையுடன் சங்கமமாகிவிட்டாள். இலங்கையிலும் அவள் மாரியம்மன், ராஜராஜேஸ்வரி, நாகம்மாள், நாகபூஷணி, நாகேஸ்வரி என்று மாற்றம் பெற்றபோதும், மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம், திருமலை மாநிலங்களிலே பல ஊர்களிலே இன்னமும் உருமாறாமல் இருக்கிறாள். சிங்களப் பிரதேசங்களிலே அவள் பத்தினி தெய்வமாகப் போற்றப்படுகிறாள். மன்னார் மாநிலத்தில் மருதமடு எனும் திருப்பதியில் முன்னாள் கண்ணகி கோயில் இருந்ததாகக் கூறப்படும்
(R.W.Ivers : The Manual of the North Central Province, 1899, p.110)
யாழ்ப்பாணத்திலே சைவமறுமலர்ச்சி 19ஆம் நூற்றாண்டில் எழுந்தபோது கண்ணகி வழிபாடு முதலானவை அங்கு கண்டனத்திற்குள்ளாயின.

*"சைவசமயிகள் என்று பெயர் இட்டுக்கொண்டு, அநேக மூடர்கள், உயிர்ப்பலி ஏற்கிற துட்ட தேவதைகளையும், காடன், மாடன், சுடலைமாடன், காட்டேறி, மதுரைவீரன், கறுப்பன், பதினெட்டாம் படிக்கறுப்பன், சங்கிலிக்கறுப்பன், பெரிய தம்பிரான், முனி, கண்ணகி, பேய்ச்சி முதலானவர்களையும் வணங்குகிறார்கள். இவர்கள் எல்லாரும் சிவத்துரோகிகள், இவர்களே அஞ்ஞானிகள்"* என்றும், *செட்டிச்சியும் புறச்சமயத்தவளுமாகிய கண்ணகி பரம்பொருள் எனவும், விநாயகக்கடவுள் சுப்பிரமணியக்கடவுள் இருவரும் அவளில் தாழ்ந்தவர்கள் எனவும் மயங்கி, அவளுக்குக் கோயில் கட்டுவித்து, அவ்விருவர் விக்கிரகத்துக்கும் நடுவே அவள் விக்கிரகம் தாபிப்பித்து வழிபடும் அதிபாதகர்களும், அவளுக்குப் பிரதிட்டை பூசை திருவிழாக்கள் செய்து அவள் எச்சில் புசிக்கும் அதிபாதக சிரோமணிகளாகிய பிராமணர்கள் சைவகுருமார்களும், அவர்களை நமஸ்கரித்தும் கும்பிட்டும் அவர்களுக்குத் தக்ஷணைகொடுத்தும், அவர்களைக்கொண்டு தீக்ஷை அந்தியேட்டி சிராத்தம் கலியாணச்சடங்கு விரதோத்தியாபனம் முதலியவற்றையும் சிவாலய, விக்கினேசுராலய, சுப்பிரமணியாலயப் பிரதிட்டை பூசை திருவிழாக்களையும் செய்விக்கும் நீங்களுமா சைவசமய நிந்தகர்கள்? உங்களுக்கு இரங்கி இவையெல்லாம் பாவம் பாவம் என்று போதிக்கும் நாமும் நம்போல்வார்களுமா சைவசமய நிந்தகர்கள்? விசாரியுங்கள்!"*
என்றும் ஆறுமுகநாவலர் சைவசமயம் (1878) நல்லூர் கந்தசுவாமிகோயில், இரண்டாம் பத்திரிகை (1875) என்பனவற்றிலே கூறியிருக்கிறார் (ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, முதற்பாகம் 1954, பக்.87' இரண்டாம்பாகம் 1955, பக்.68). சிலப்பதிகாரம் 1892இலே முழுநூலாக உரையுடன் வெளிவருவதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பே யாழ்ப்பாணத்துச் சைவபாரம்பரியம் "குடிமக்கள் காவியம்" எனச் சிறப்புப்பெற்றிருந்த கோவலன்–கண்ணகி கதையை ஏற்றுப் போற்றும் மனோபாவம் உடையதாக இருந்ததெனல் சாலாது.

ஆனால், *"சிலப்பதிகாரம் வெளிவரவே, பண்டைத் தமிழ்நாட்டின் இயல்பும், தமிழில் இருந்த கலைப்பரப்பின் சிறப்பும் யாவர்க்கும் புலப்படலாயின. 'கண்டறியாதன கண்டோம்' என்று புலவர்களும் ஆராய்ச்சியாளர்களும் உவகைக் கடலில் மூழ்கினர். சிலப்பதிகாரம் மிக அரிய சரித்திரச் செய்திகளை உடையது. தமிழ் நாட்டு அரசனாகிய செங்குட்டுவன் வடநாடு சென்று, வடவேந்தர்களைவென்று, கண்ணகியின் படிமச்சிலை கொணர்ந்த செய்தி மிக்க விம்மிதத்தை உண்டாக்கியது."*

என்று சிலம்பின் பதிப்பாசிரியர் உ.வே.சாமிநாதையர் பேரால்வந்த "என் சரித்திரம்"(1950 பக்.973–74) கூறுகின்றது.

தமிழ்மக்கள் தம்பெருமையை உணர்ந்து அந்நிய ஆதிக்க உறக்கத்திலிருந்து விழித்தெழச் சிலம்பின் பாரம்பரியங்கள் உதவும் என்ற ஆசை பற்றி மல்லாகம்

வி .கனகசபைப்பிள்ளை 1895இலே **"மதராஸ் றிவியூ"** எனும் ஆங்கிலப் பத்திரிகைக்குப் பண்டைத்தமிழர்பற்றி, சிலம்பை மையமாகக்கொண்டு எழுதத் தொடங்கினார். 1940களிலே தமிழ்நாட்டு அரசியலிலே தமிழரசுக் கழகம் உருவாகியபோது ம.பொ.சி.யைச் *"சிலம்புச் செல்வர்"* ஆகக் காணமுடிகிறது. கண்ணகி போன்று தமிழ்ப்பெண்கள் ஆகிவிட்டால் அந்நிய ஏகாதிபத்தியத்தை அழித்துவிடலாம் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தது. அக்காலத்திலே ரா. வேங்கடாசலத்தின் **"இமயத்தில் நாம்"** நாடகமும் சிலம்பின் அரசியல் யாத்திரையில் ஒரு மைல்கல்லாகும். இமயத்திற்குப் படை எடுத்துச் சென்ற தமிழன், வடவரை அடிமைகொண்டு, அவர்கள் தலையிலே கல்லைச் சுமக்கச் செய்த செய்தி திராவிடத்திற்குப் பெரும் எழுச்சியைக் கொடுத்தது. இக்காலத்திலே எழுச்சி கண்ட தமிழ் இசை இயக்கத்திற்கும் சிலம்பு கருவூலமாகக் காணப்பட்டது. மட்டுநகர் பேராசிரியர் விபுலானந்த அடிகளின் **யாழ்நூல்** சான்றாகும்.

வரலாற்றுணர்வுகளையும் கலாசார–பண்பாட்டு அபிமானங்களையும் ஒதுக்கிச் சிலம்பு எவ்வாறு நெஞ்சை அள்ளுவதாக அமைகின்றது என, அதன் உண்மையான சிறப்பினை, அதன் கவித்துவ சக்தியை, நாடிபிடித்து உணரவேண்டியது அவசியம். இத்தேவையை பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்திற்கு ஆர்.கே.சண்முகஞ்செட்டியார் கண்ட புத்துரைக்கு 1946இலே எழுதிய முன்னுரையிலே வற்புறுத்தினார். மு.வ.வின் **"சிலப்பதிகாரத்துள் மாதவி"** எனும் 1945 சொற்பொழிவு 1950இலே நூலுருப்பெற்றது. இடையிலே 1948இலே எஸ்.ஆர். மார்க்கபந்து சர்மாவின் **சிலம்பின் இரசனை** வெளிவந்தது. 1940களிலும் 1950களிலும் சிலம்பின் இலக்கியத் திறனை நோக்கும் ஆய்வுகள் அபூர்வமாகவே வெளிவந்திருக்கின்றன. கண்ணகியா? மாதவியா? என்ற விவாதங்கள் மட்டும் பல்வேறு மட்டங்களிலும் இருபதாம் நூற்றாண்டிலே பரவலாக நடைபெற்றுவந்தன. இவை நாடகமாகவும், நாட்டிய நாடகமாகவும், திரைப்படமாகவும் சிலம்பு ஜனரஞ்சகப்படுத்தப்பட்ட கட்டத்திலே, வேறுபட்டு அமையினும் சிலம்பின் கவித்துவத்தினைக் கவனிக்கத் தவறிவிட்டன.

சிலப்பதிகாரத்தின் இலக்கிய அந்தஸ்தினைக் கேள்வியாக்கிய விசாரம் ஈழத்திலே நடந்து முடிந்த வரலாறு இன்றைய சந்ததியினர் பலருக்குத் தெரியாது. இருபதின் நாற்பதுகளின் கடைசியில் அந்த இலக்கிய விசாரம் ஈழத்திலே நடந்தேறியது. மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் (பண்டிதமணி) சி.கணபதிப்பிள்ளை 1948 ஜூலாயிற் கொழும்பில் "இலக்கியம்" என்ற பொருள்பற்றிப் பேசினார். அப்பேச்சு சிலப்பதிகாரத்தின் இலக்கியத் தகுதியை மதிப்பிடுவதாக அமைந்திருந்தது. பண்டிதர் கணபதிப்பிள்ளையின் சிலம்பு விமரிசனத்தை 1948இலே மறுத்து நின்றவர்களுக்கு வித்துவான் க.வேந்தனார் முதல்வராகத் திகழ்ந்தார். 1948 ஈழகேசரி இதழ்களிலே பண்டிதர் கணபதிப்பிள்ளையும் அவர்கள் மாணாக்கரும் கம்பராமாயணச் சார்பிலும், வித்துவான் வேந்தனாரும் அவர் சகாக்களும் சிலப்பதிகாரத்தின் சார்பிலும் பெரியதொரு கருத்துப் போரினைத் தொடர்ந்து நடத்தினார்கள். தமிழ் இலக்கிய விமரிசனத்திலே அக்கட்டம் மிகவும் முக்கியமானது.

சிலப்பதிகாரத்தின் கருப்பொருள் பாரதத்திலோ இராமாயணத்திலோ இருந்து எடுத்ததன்று. அது தமிழ்நாட்டிலே என்றோ ஒரு நாள் நடந்த கதை. தமிழர் சமுதாயம் அழிந்து, தமிழர் பாரம்பரியங்கள் பாழ்நின்ற நிலையிலே, அதன் மூலத்தினைச் சமுதாயத்திலே கண்ட ஆசிரியர், சமூகக்கதையைக் கருவாகக்கொண்டார். அந்தக் கருவின் ஊடே அவர் பண்டைத் தமிழர்தம் பாரம்பரியப் பெருமைகளை மார்தட்டி எடுத்துப் பாடினார்: தமிழ் இசை, நடனம், ஆடல்பாடல் அமைதிகள், கிராமிய இலக்கிய அமைதிகள், இலக்கிய மரபுகள், கோயில் அமைப்பு, நகர அமைப்பு, அணிகலன்கள், வழிபாடு, விழா, நாகரிகம் – அப்பப்பா! எவ்வளவு தகவல்கள்! கலைக்களஞ்சியப் போக்கு! இளங்கோவடிகளுக்குக் கதை சட்டகம்தான். அதன் வேலைப் பாடுகள், பண்டைத் தமிழர்தம் கலாசாரம், பண்பாடு, நாகரிகம் சம்பந்தமான சின்னங்கள். சிலம்பின் மொழிநடைவளமும் யாப்பமைதிகளின் சிறப்பும் கற்பனை ஊற்றும் மேலோங்கி நிற்பதை யாரும் மறுத்தல் அரிது. பிறந்து, மொழி பயின்றபின்னெல்லாம் என்று தோற்றுவாய் செய்யாது, திருமணத்திலே தொடங்கி, கதையை விரைவுவிரைவாக நகர்த்திக்கொண்டே இளங்கோ செல்கிறார். ஆனால், அவருடைய இலட்சியத்தினால் – நோக்கினால் – கதைக்குப் புறம்பான விடயங்கள் விரிவாக அமைந்து, கதைப்போக்கின் செலவு தொய்ந்தும் நலிந்தும் பாதிப்படைந்துவிட்டது.

பண்டிதர் கணபதிப்பிள்ளை அவர்களின் பிரதான விமரிசனம் கண்ணகியெனும் பாத்திரத்தின் இயக்கத்தினை மையமாக உடையது.

*"தமிழ்நாட்டிலே, இலக்கிய உலகிலே ஒரு பாத்திரம் **என்ன செய்தது?** ஒரு பெண் **என்ன செய்தான் ?** என்று விசாரம் இல்லை. **என்ன செய்யவேண்டும** என்றுதான்விசாரம்"* என்பது பண்டிதமணியவர்களின் அளவுகோல் (செந்தமிழ்க் களஞ்சியம், 1987, பக்.136) கண்ணகியின் பாத்திரத்திலே பண்டிதமணியவர்கள் இரு முக்கியமான கட்டங்களிலே அவள் பெண்மையைச் செய்யவில்லை என்று வாதிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியமன்னன் தான் செய்த தவறினால் ஏற்படும் பழிக்கு அஞ்சி உயிர்விட்டான். அவன் செயலை அறிந்த பாண்டிமாதேவியும் உயிர் துறந்தாள். அபுத்திபூர்வமாக நிகழ்ந்த பழிக்கு அஞ்சி உயிர்நீத்த பாண்டியனுடைய நீதியைக் கண்ணகி மதித்திலள். அவள் மதுரையையே எரித்தாள். அச்செயலால் பெண்மை தவறிவிட்டது என்பது பண்டிதமணியவர்கள் கருத்து.

கோவலனுக்கும் கண்ணகிக்கும் இடையிலான ஒரு உரையாடலின் பண்புபற்றியது பண்டிதமணியவர்களின் அடுத்த கருத்து. தன்னோடு மதுரை சென்ற பாதையிலே கால்கள் கற்களாலும் முட்களாலும் குத்துண்டு வேதனைக்குள்ளாகிக் கண்ணகி வருந்தி நின்றபோது, தன்னை நம்பிப் பின்நடந்த அவளுடைய அவலத்தினைக் கண்டு கோவலன் வேதனையுடன் –

*"எழுகென எழுந்தாய், என் செய்தனை?"* என்று இரங்கினான். கணவன் உருகி நின்ற போது கண்ணகி இரங்கி நிற்கவில்லை –

*"போற்றா ஒழுக்கம் புரிந்தீர் யாவதும்*
*மாற்றா உள்ள வாழ்க்கையேன் ஆதலின்*
*ஏற்றெழுந்தனன் யான்"*

என்று பதில் கொடுக்கிறாள் ( கொலைக். 70, 81–83). இதற்குப் பண்டிதமணி தரும் பொழிப்பு –

*"நடவாத நடை நடந்தவனே, வா! என்றாய், வந்து தொலைந்தேன்"* என்பதாகும். கண்ணகி இங்கும் பெண்மையைச் செய்யவில்லை என்பர் பண்டிதமணியவர்கள். கண்ணகி பெண்மையைச் செய்யாததால் அவளுக்கு இலக்கியத்தில் இடம் இல்லை. பெண்மையைச் செய்யாத கண்ணகியைச் சந்திக்கு இழுத்தது கவிஞன் குற்றம் என்பர் அவர். பாத்திரப் படைப்பிலே இளங்கோ தவறிவிட்டார் என்பது பண்டிதமணியவர்கள் வாதம். சிலம்பு நெஞ்சை அல்ல செவியை அள்ளுவதாக அவர் முடிவு செய்கிறார்.

பண்டிதமணிவட்டம் கம்பன் காவியத்திற்குத் தம் உள்ளத்தினைக் காணிக்கை யாக்கியது. சீதையின் அறக்கற்புக்கு முன்னே கண்ணகியின் மறக்கற்பினை இலக்கிய தராசு இறக்கி விட்டதோ? எடுபடவில்லையோ? நாவலர் மரபில் வந்தவர்கள் கண்ணகியைப் போற்ற முன் நிற்க வில்லை. பண்டிதர் கணபதிப்பிள்ளை யாழ்ப்பாணம் பரமேசுவராக் கல்லூரியிற் சென்னைத் தமிழ் வளர்ச்சிக்கழக ஆதரவில் 1951இலே நடந்த தமிழ்விழாவிலும் சமணபௌத்த காவியங்களைச் சங்கம் அங்கீகரிக்குமா என்ற பிரச்சினையை எழுப்பியதும், விழாத்தலைவர் பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளை ஆத்திரப்பட்டு பேச்சுக்குக் காலக்கெடு வைத்ததும், வி.கே.பி.நாதன் தினகரனிலே (13.5.1951) ஆசிரியர் தலையங்கம் தீட்டி "பண்டிதமணி" என்று கௌரவித்ததும் அப்பட்டத் தினைக் "கல்கி" கிருஷ்ணமூர்த்தி அநுவதித்ததும் பழங்கதைகள்.

ஈழத்திலே செல்வாக்குப் பெற்றிருந்த நாவலர் மரபுவழிப்பட்ட தமிழறிஞர் முடிவை மறுத்துக் கருத்துரைக்கும் பண்டித மரபொன்று ஈழத்திலே நிலவியதைச் சிலப்பதிகார விசாரம் காட்டுகிறது. அம்மரபு புதிய தமிழ்க்கவிதையினையும், நவீன உரைநடை இலக்கியங்களையும் விமரிசனம் செய்யும் பெற்றியுடையதாகத் திகழ்ந்த காலம் ஒன்றுண்டு. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலியல் கல்வி

துள்ளித் திரியும் பிள்ளைகளின்
துடுக்கை அடக்க முடியாது
பள்ளிப் பருவ மாணவர்க்குப்
பாலியல் கல்வி அவசியம்தான் !

பாலியல் அறிவு வளரட்டுமே
பாவையர்க்கும் அது தெரியட்டுமே
பனை ஓலையில் எழுதியது பழங்காலம்
படம் கணனியில் வரைவது இக்காலம் !

அன்று பால்ய விவாக வைபவத்தில்
கன்றின் கடைக்கூற்று விளக்கம் எதற்காக?
ஆணும் பெண்ணும் சேர்வது போல்
நாணும் பருவத்தில் தெளிவது மேல் !

ஏட்டுச் சுரைக்காய் கறியாகாது
ஓட்டைக் குடத்தில் நீர் நிற்காது
பண்டைய காலத்து சில முறைகள்
இன்றைய உலகில் இடர்வழிகள் !

பாலியல் கல்வி ஊட்டாவிடில்
களவியல் கலவியில் நாட்டம் வரும்
வேதனை நிலைமை ஏற்பட்டபின்
நிந்தனை சிந்தனை மதியீனம் !

ஆக்கம்: ' *'நல்லைக் குமரன்* "

# "காக்கைச் சிறகினிலே நந்தலாலா"

நெடுங்கதை

சாயிசசி

## இரண்டாம் பகுதி

முன் கதைச் சுருக்கம்

திருச்சி நகரின் ஓர் மைல்கல்லாகத் துலங்கும் மலைக்கோட்டையின் தாயுமானவர் கோயில் சந்நிதியின் சிற்பங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த ஜோசப்பின் பார்வை தற்செயலாக அங்குள்ள மேற் படிக்கட்டுக்களில் பதிந்த போது அங்கே தலையில் முக்காடிட்ட ஒரு பெண் மிக அவசரமாக ஏறிக் கொண்டிருந்தாள். அந்தி மாலை மயங்கும் வேளையில் அவளுக்கு அங்கே என்ன வேலை எனச் சந்தேகித்த ஜோ அவளைத் தொடர்ந்தான். மதி வதனி என்ற கம்ப்யூட்டர் பட்டதாரியான அம்மங்கை அழகின்மையால் பல அவமானங்களுக்கு ஆளாகி முடிவில் தற்கொலை செய்ய முனைந்து கொண்டிருந்தாள். அவள் எண்ணத்தை மாற்றி அழகு ஒரு பொருட்டல்ல என்பதை உனக்குப் புரிய வைக்கின்றேன் என்னுடன் ஆஸ்திரேலியா வா என அழைத்து வந்தான் .

மதி குறித்த அந்த ஸா∴ப்ட்வேரைத் தயாரித்து ஜோவிடம் கொடுத்தனுப்பினாள். அவர்களுக்கு மிகவும் பிடித்துக் கொண்டது. அதைப் பாவிப்பதற்தான அனுமதியை எழுத்துமூலம் கோரினர். ஜோ "நீ தயாரித்தது தானே, மதி! உன் பெயரிலேயே இருக்கட்டும்" என்றான். "இல்லை நான் உன்னிடம் ஊழியம் பார்க்கின்றேன். நம் கம்பனி பேரிலேயே இருக்கட்டும்" என்றாள். அதுவும் சரிதான் என்றவன் வெளியே போய் வேறு சில பத்திரங்கள் கொண்டு வந்து மதியிடம் கையெழுத்து வாங்கினான். கேட்ட இடத்திலெல்லாம் மதி எதுவித யோசனையுமின்றிக் கையெழுத்திட்டாள். "என்ன எதற்கென்று கேட்கமாட்டியா மதி இப்படிக் கேட்ட இடத்தில் கையெழுத்திடுவது ஆபத்து, தெரியுமா?" எனக் கேட்டான்.

"ஆமாம், என்னிடம் நிறையச் சொத்துக்கள் இருக்கு நீ சுருட்டிக் கொண்டு போக" என நகைத்தாள்.

"சொத்தினால் மட்டும் கஷ்டம் வரலாமென்பது இல்லை" என்றவன், "எங்கள் கம்பனியின் பெயரை மாற்றி எம் ஜே கம்ப்யூட்டர்ஸ் என பங்குதாரர் நிறுவனமாக்கப் போகிறேன். பின் நீயே கம்பனி பெயரில் கையெழுத்திடலாம்" என்றான். "எதுவோ செய்" என மதியின் வாய் சொன்னாலும், அவள் இதயத்தில் ஜோ பண்பிலே உயர்ந்து நின்றான்.

புதிய நிறுவனம் ஆரம்பித்த தினமோ அல்லது மதி வந்த அதிர்ஷ்டமோ அவர்கள் வியாபாரம் அவர்களின் அன்றாடத் தேவைகளைக் கஷ்டமின்றிச் சமாளிக்க உதவியது. நாளுக்கு நாள் வெவ்வேறு விதமான ஆர்டர்களும் வந்த வண்ணமிருந்தன.

ஜேன் கொடுத்த கிறீமைக் கவனமாக முகத்திற்குப் பூசிக்கொண்டுவந்த மதி பதினைந்து நாட்களில் முகத்திலிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தழும்புகள் மறைந்து முகம் முழுவதும் ஒரே நிறமாக இருக்கக் கண்டு வியந்தாள். பதினைந்து வருடங்களாகப் பார்த்துப் பார்த்து சலித்த தழும்புகள் பதினைந்து நாட்களில் மறைந்தமை கண்டு மதி வியந்தாள். இதை ஏன் திருச்சியில் ஒருவரும் சொல்லவில்லை? ஏழைகள் என்றால் அவ்வளவு கவனக்குறைவா என நினைத்த போது அவளுக்குக் கோபம் வந்தது. ஒரு சிறு மருந்து அங்கேயே கிடைத்திருந்தால் அவளது வாழ்க்கையே சில வேளை மாறியிருக்கலாம் என மனம் நொந்தாள்.

சுமார் ஒரு வருடம் ஓடியது. அவர்கள் வியாபாரம் சூடு பிடித்தது. வாடிக்கையாளர் தொடர்பு கொள்வதற்குச் சுலபமாகக் கம்ப்யூட்டருக்கு இணைய வசதிகளையும் செய்து வைத்தாள். அன்று ஈ மெயிலைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த மதி சத்தமாகச் சிரித்தாள். என்ன என ஜோ எழுந்து வந்து பார்த்தபோது, அதிலிருந்த அனைவருக்கும் பொதுவானதாக ஆனால் அவளுக்காகவே அனுப்பப்பட்டிருந்த ஒரு செய்தியைக் காட்டி மீண்டும் நகைத்தாள். *அதிலே, காக்கைச் சிறகினிலே நந்தலாலா! உன் திசை தெரிந்ததா? உடனே தொடர்பு கொள். பல்லவி* என ஆங்கில எழுத்தில் எழுதப் பட்டிருந்தது. வாசித்த ஜோவுக்கு எதுவும் புரியாமல் திருதிரு என விழித்தான். மதி அது சித்துவின் வேலை எனச்சொன்னதும் மதிக்குத் தெரியாமல் அதில் ஒரு பிரதி எடுத்து வைத்துக் கொண்டான்.

மதியின் திறமையும் நேர்மையும் சேர்ந்து செயற்பட, ஆடர்கள் வந்து குவிந்தன. வங்கி நிலுவையும் அதிகரித்தது. ஜோ "நான் புட்டபர்த்திக்குப் போகவா?" எனக் கேட்டுக் கொண்டிருந்தான். "பணமிருக்கிறது தானே, தாராளமாகப் போய் வா" என அனுப்பி வைத்தாள்.

போகும் போது உனக்கு என்ன வேண்டுமெனப் பல முறை கேட்டும் மதி எதுவுமே சொல்லவில்லை. யாரையாவது பார்த்து வரவா என்றதற்கும். வேண்டாம் அவர்கள் என்னை மறந்து இருக்கட்டும் என நா தழுதழுக்கக் கூறினாள். அது ஜோவின் நெஞ்சைப் பிசைந்தது. மௌனமாகப் போய்விட்டான். ஆனால் சித்ராங்கியைப் போய்ப் பார்த்து விபரம் கூறினான். அவள் "என் மதியைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்" எனக் கண்கலங்கினாள்.

நாளடைவில் வியாபாரம் அதிகரித்ததால் நிறுவனத்தை விரிவுபடுத்திப் பலரை வேலைக்கு அமர்த்தினர். ஜோ எனக்குக் கீ–போர்ட்டிலுள்ள அகரவரிசை மட்டும்தான் தெரியும். மற்றதெல்லாம் மதியின் திறமையென வியாபார உலகில் பிரபல்யப்படுத்தியதால் மதியின் புகழ் எங்கும் பரவியது. அவர்கள் தயாரித்த மென் பொருட்களுக்கு வெளிநாட்டிலிருந்தும் ஆடர்கள் வந்து குவிந்தன.

அதனால் கம்ப்யூட்டர் அலுவலர் சங்கத்தின் முக்கிய அங்கத்தினர் வரிசையில் மதியின் பெயரும் இருந்தது. அங்கே மதியின் மதிநுட்பம் மிகவும் பாராட்டப்பட்டது. அவளது புதிய மென்பொருட்களுக்கு விளக்கம் அளிக்குமாறு அவர்களிடமிருந்து அழைப்பு வந்தது. மதி தயங்கினாள் ஆனால் ஜோ, "நீ போகத்தான் வேண்டும், மதி, போனால் தான் உனக்கு அழகென்பது வெறும் தோலின் நிறத்தில் இல்லை, ஒருவரின் தனித்தன்மை, திறமை, துணிவு, தன்னம்பிக்கை போன்றவற்றில்தான் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள

முடியும், அப்பொழுது தான் உன் மனத்திலுள்ள அந்தத் தாழ்வு மனப்பான்மை மறைந்து நீ தலை நிமிர்ந்து நிற்கலாம்'' என வற்புறுத்தி அழைத்துச் சென்றான். அங்கே சரமாரியாகத் தொடுக்கப்பட்ட வினாக்களுக்குத் தங்குதடையற்ற நீரோடை போல் மதியின் நாவிலிருந்து பதில்கள் பாய்ந்து வந்து அனைவரையும் அசர வைத்தன. என்ன ஒரு மூளை என அனைவரும் வியந்தனர். என்னில் ஒன்றும் இல்லை இது கடவுள் தந்த வரம் என மதி தன்னடக்கமாக நினைத்தாள்.

கூட்டம் முடிந்து தேனீர் விருந்தின்போது சிலர் மதியை வந்து பாராட்டினர். சிலர் தமது நிறுவனத்திற்கு ஆலோசகராக இருக்க முடியுமா எனக் கேட்டனர். ராகவன் என்பவர் தான் ஒரு கம்ப்யூட்டர் துறையில் பேராசிரியர் எனக் கூறித் தன் மாணவர்களுக்கு ஓர் உரையாற்ற முடியுமா எனக் கேட்டார். அவரைப் பார்க்க மதிக்கு ஒரு மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டது. மனத்தில் என்றுமில்லாத ஒரு பரவசம் ஏற்பட்டது. எதுவோ ஒரு மகிழ்ச்சிப் பிரவாகம் எழுந்து அவள் இதயம் எங்கும் வியாபித்து, வார்த்தைகள் தடைப்பட்டன. அதனால் பதில் கூறச் சிறிது நேரம் தடுமாறிய மதி, பின் "பல்கலைக் கழகத்தில் உரையாற்றும் அளவுக்கு எனக்குக் கல்வித் தகுதிகள் இல்லையே. நான் வெறும் பீஎஸ்ஸி பட்டதாரி மட்டும்தான் என்றாள். கலகலவெனச் சிரித்தவர், "உங்கள் கல்வித் தகுதியை யார் கேட்டார்கள். உங்களின் இந்தத் துறையில் உங்களின் பேராற்றல் தான் நன்கு தெரிகிறதே. சில சமயம் உங்களின் மென்பொருட்களுக்கு எந்தக் கணிதக் கோட்பாட்டைப் பயன்படுத்தித் தீர்வு கண்டீர்கள் என்று நான் கூடக் குழம்பியிருக்கிறேன்'' என்றார்.

"அப்படியானால் எப்பொழுது என்று சொல்லுங்கள் வருகிறேன்'' எனக் கூறித் தனது விஸிட்டிங் கார்டை அவரிடம் கொடுத்தாள். மதிக்கு அவரை மீண்டும் மீண்டும் பார்க்க வேண்டும் போலிருந்தது.

அப்பொழுது, மதியை நோக்கி ஒருவர் வந்தார். அது தன்னுடன் படித்த, காணுமிடமெல்லாம் எதையாவது சொல்லித் தன்னை நோகடித்த வருண் என்பது தெரிந்திருந்தும், மதி காட்டிக்கொள்ளாமல் நின்றாள். அவன் அவளது திறமையைப் பாராட்டினான். வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷிப் பட்டமா? என நினைத்துத் தனக்குள் சிரித்த மதி அவன் பாராட்டுக்குத் தன் நன்றியைத் தெரிவித்தாள்.

வருண், அவள் எங்கே படித்தாள் என்று கேட்டபோது ஒரு குறுமுறுவலுடன் தன் திருச்சிக் காலேஜின் பெயரைக் கூறினாள். உடனே அவன் "அங்கு தானே நானும் படித்தேன்? அப்படியானால் நீ நம்ம மதி, எங்கள் காக்கைச் சிறகினிலே மதி!'' எனப் பெருமையாகக் கூறினான். பின் நினைவு பெற்றவனாக "மன்னித்துவிடு மதி, பழக்க தோஷம்!'' என்றான்.

இருவரும் சேர்ந்து சிரித்தனர். காக்கைச் சிறகினிலே இப்பொழுது ஒரு செல்லப்பெயர் போலாகிவிட்டது. அன்று அதைக் கேட்டபோது இருந்த மனத்துயர் இன்று இல்லை என மதி நினைத்தாள்.

வியாபாரம் விருத்தியடைந்ததால் ஜோ அடிக்கடி இந்தியாவுக்குப் போனான். அங்கே ஸ்வாமியைத் தரிசிப்பதுடன் கம்ப்யூட்டர் உதிரிப் பாகங்களும் மலிந்த விலையில் வாங்கி வருவான். ஒவ்வொரு தடவையும் நீயும் வா மதி எனக் கெஞ்சிக் கேட்பான். ஆனால் மதி மறுத்துவிடுவாள். ஜோ போகும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இனிப்பு வகைகள், உடைகள், மின் உபகரணங்கள் போன்றன அங்கே தன் நண்பர்களுக்கெனக் கொண்டு சென்று மதியின் குடும்பத்தாருக்குக் கொடுப்பான். மதி "நீ கொண்டு செல்லும் பொருட்களைப் பார்த்தால் அங்கு ஒரு குடும்பத்திற்குப் போதும்போல் தெரிகிறது! அப்படி இரகசியமாக ஏதாவது இருந்தால் சொல்லிவிடு ஜோ'' எனக் கேலி செய்வாள்.

வரும்போது மதிக்குப் பட்டுப்புடவை, சங்கீத ஒலிநாடாக்கள், மதியின் அம்மாவிடமிருந்து சிற்றுண்டி வகைகள் போன்றன கொண்டு வருவான். ஒருமுறை அவன் கொண்டு வந்த சிற்றுண்டியைச் சுவைத்த மதி, "இதை எங்கே வாங்கினாய் ஜோ? எங்கம்மா செய்த மாதிரியே இருக்கே'' என்றாள் அதிர்ந்து அவளைப் பார்த்தவன், ஒருவாறு சமாளித்து, "உனக்கு அம்மா ஞாபகம் வந்தால் நான் என்ன செய்ய மதி?'' எனக் கூறிவிட்டுப் போய்விட்டான்.

அடுத்த தடவை சித்ராங்கியின் உதவியுடன் ஒரு வீணையைக் கொண்டு வந்து "இதில் உனக்கு ஓரளவாவது தெரியுமென்று நினைக்கிறேன்'' என்றான். "ஓரளவில்லை ஜோ, நன்றாகவே தெரியும். எங்கம்மா தான் என் குரு. வீணை வாங்க உனக்கெப்படித் தோன்றியது ஜோ? மிகவும் நன்றி!'' என்றாள்.

மதி அடிக்கடி வாதாபி கணபதி என்ற ஹம்சத்வனி ராகக் கீர்த்தனையை வீணையில் மீட்டுவதைக் கேட்ட ஜோ "ஏன் மதி! உனக்கு இது மட்டும் தான் தெரியுமா? பெரிதாக எல்லாம் தெரியுமென்றாயே?'' எனக் கேலி செய்தான்.

"படவா ராஸ்கல்! என்ன நினைத்தாய்?'' எனச் செல்லமாகக் கோபித்தவள், "அது அம்மா விநாயகருக்கென்று முதன் முதல் பழக்கியது, அது தான் அம்மா நினைவு வரும்போது அதை வீணையில் மீட்டுகின்றேன், அம்மா பக்கத்தில் இருந்து கேட்பது போல, என் பிழைகளைத் திருத்துவது போல, ஒரு உணர்வு'' என்றாள்.

அவளை இரக்கத்துடன் பார்த்தவன் "நீ ஏன் திருச்சிக்குப் போய் அம்மாவைப் பார்க்கக் கூடாது, மதி? ஏன் இந்தத் தயக்கம்?'' எனக் கேட்டான்.

"அது மட்டும் வேண்டாம் ஜோ. அது உனக்குப் புரியாது'' எனக் குரல் கரகரக்கக் கூறினாள். அவள் கண்களில் நீர் பூத்தது, எழுந்து போய்விட்டாள். அவளைக் கருணையுடன் பார்த்த ஜோ இதற்கென்ன வழி என யோசித்தான்.

ஏம்ஜே கம்ப்யூட்டர்ஸ் க்கு இப்பொழுது உலகளாவிய பெயரும், புகழும் இருந்தது. சிட்னி நகரின் மத்தியில் உள்ள ஒரு பலமாடிக் கட்டிடத்தின் சில அடுக்குகளை அது தனக்கென ஆக்கிரமித்துக் கம்பீரமாக இயங்கிக் கொண்டிருந்தது. அத்துடன் மதியின் திறமையும் தன்னம்பிக்கையும் தஞ்சைப் பெரிய கோவில் கோபுரம்போல் உயர்ந்து நின்றன. வியாபாரம் பல பிரிவுகளாக்கப்பட்டு ஒவ்வொன்றிலும் தேர்ச்சி பெற்றோர் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

இருந்தாலும் வாடிக்கையாளரின் திருப்தி குறித்து மதி ஒவ்வொன்றையும் தன்னால் முடிந்தவரை மேற்பார்வை செய்வாள். அவளிடம் மௌரியப் பேரரசின் உன்னதங்களை வெளிக்கொணர்ந்த சந்திரகுப்த அரசனின் சாணக்கியமும், முன்னியது முடிக்கும் ஆற்றலும்

இருநத்து. அதனால் எம்ஜே கம்ப்யூட்டர்ஸ் பொற்காலத்தை எட்டிப்பிடித்திருந்தது. எல்லாவற்றையும் கனகச்சிதமாக ஒழுங்கு செய்து எல்லோருக்கும் குறித்த நேரத்தில் அவர்கள் கேட்டதைக் கிடைக்கச்செய்யும் மதியின் நிர்வாக நுணுக்கத்தினைப் பார்த்து ஜோ வியப்பில் அவ்வப்போது மூக்கில் விரலை வைப்பான். மதிக்குச் சித்துவை நினைத்துக் கண் கலங்கும். நீ ஒரு தீர்க்கதரிசி சிந்து என நினைத்துக் கொள்வாள். அந்த நிறுவனமே அவளது குடும்பம், குழந்தை, போலாகியது. நாளும், பொழுதும் அதன் வளர்ச்சி கண்டு புளகித்தாள். அவள் உள்ளம் ஜோவுக்கு நன்றி சொல்வதை ஒரு கணமேனும் நிறுத்தவில்லை.

மதி ராகவனின் அழைப்பை ஏற்று அடிக்கடி பல்கலைக் கழகம் சென்று மாணவர்களுக்கு உரை நிகழ்த்தினாள். ஒவ்வொரு தடவையும் அவர்கள் பல வினாக்களை வைத்துக்கொண்டு அவளை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதையும், அவள் விளக்கியதும் அவர்கள் முகத்தில் பிரதிபலிக்கும் பரவச உணர்வையும் கண்டு மதி அகத்தழகுதான் அவசியமேயன்றிப் புறத்தழகு ஒரு பொருட்டல்ல எனப் புரிந்து புளகித்தாள். மதி–ராகவன் நட்பும் வளர்ந்தது. அவனை அடிக்கடி பார்க்கவும் பேசவும் அவள் மனம் விழைந்தது. இதை ஜோ கவனித்துத் தனக்குள் ஒரு திட்டம் தீட்டினான்.

அன்று சனிக்கிழமை, மதி வீட்டிலிருந்து மின் அஞ்சல்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தாள். அந்தப் பக்கமாக வந்த ஜோவிடம் "என்ன ஜோ செய்கிறாய்? கனடாவுக்கு விலைப் பட்டியல் அனுப்பினாயா? யப்பானுக்கு ஆர்டர்கள் போய்விட்டனவா?" எனக் கேட்டாள்.

அவளை மௌனமாகப் பார்த்த ஜோ, "என்ன மதி, சனிக்கிழமையும் வேலையா? எனக்கு அதற்கெல்லாம் இப்பொழுது மூட் இல்லை" என்றான்.

"என்னது? வேலை செய்ய உனக்கு மூட் இல்லையா ஜோ? அப்படியானால் உன் மூட் எங்கே?" எனக் கேலி செய்தாள். "எனக்குக் கல்யாண மூட் வந்திருக்கிறது" என்றான்.

"கல்யாண மூட் ஆ? அது அவசியம் வர வேண்டியது தான். ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது. பெண் யார் ஜோ? எனக்கு எதுவும் தெரியாதே. இரகசியமாகவே வைத்திருந்துவிட்டாய் திருமணத் திகதியை மட்டும் சொல்லு. மிகுதியை நான் பார்த்துக் கொள்கின்றேன்" என மிகவும் ஆரவாரமாகக் கூறினாள்.

அவளருகே சென்ற ஜோ அவளை ஒரு குறும்புப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டு மௌனமாக நின்றான். "என்ன ஜோ?" என மதி செல்லமாகக் கேட்டாள்.

அவளைப் பார்த்துப் புன்னகைத்தவன் "விவாகம் எனக்கில்லை மதி" என்றான்.

"அப்படியானால், யார் திருமணம் ஜோ?" எனக் கேட்டாள்.

"மதி!..." எனச் சிறிது நேரம் மௌனமாக நின்றவன் "உனக்குத்தான் கல்யாணம் மதி. நீ மணம் புரிய வேண்டும்" என்றான்.

உடனே மதியின் முகம் இறுகியது, உடல் எந்த அசைவும் அற்று, ஸ்தம்பித்துப் போய் இருந்தாள். ஜோ "மதி!" என அவள் கையை மெதுவாகப் பற்றினான். கைகள் நடுங்கின, கண்கள் சிவந்தன, எழுந்து போய் ஜன்னலுக்கு வெளியே பார்த்தாள்.

சிறிது நேரம் சும்மா நின்ற ஜோ "என்ன மதி?" என்றான்.

திரும்பி அவனைப் பார்த்தாள். அவள் கண்களில் முத்துக்கள் பளபளத்தன. அவற்றைக் கன்னத்தில் இறங்கவிடாமல் இதழ்களைக் கடித்துத் தடுத்தவள், வேதனையுடன் ஜோவைப் பார்த்துக் "கல்யாணமென்றால் எனக்கு அலேர்ஜிக் என்று உனக்குத் தெரியுமல்லவா ஜோ? தயவு செய்து இனி என்றும் இந்தப் பேச்சை எடுக்காதே!" எனக் கண்டிப்பாகக் கூறினாள். அவள் கட்டுப்பாட்டையும் மீறி கண்ணீர் முத்துக்கள் அவள் கன்னங்களில் மாலைகளாயின.

ஜோ அவள் கைகளைப் பற்றி அழைத்துக் கொண்டு போய் அருகிலிருந்த சோபாவில் இருத்திப் பக்கத்தில் இருந்து அவள் கைகளைத் தன் கைக்குள் வைத்து ஆசுவாசப் படுத்தினான்.

அவள் வேதனையை முகம் படம்பிடித்தாற் போல் காட்டியது. ஜோவின் வார்த்தைகள் மதியின் மனத்துள் ஒரு கல் எறிந்தாற் போலானது. நீர் வட்டங்கள் உருவாகித் தண்ணீருக்குள்ளேயே மறைவது போல, அவள் நெஞ்சின் அலைகளும் உள்ளுக்குள்ளேயே கொந்தளித்துக் கொண்டிருந்தன. மதி அதரங்களை அழுத்தி நினைவுகளுக்குக் கடிவாளமிட முனைந்து, தோற்று, வெய்துயிர்த்தாள்.

அவள் மனத்துள் நீறு பூத்த நெருப்பாக இருந்த புண்ணைத் தொட்டு அவள் நெஞ்சில் ஒரு வலியை உண்டாக்கிவிட்டேனே என ஜோ தன்னைத்தானே கடிந்துகொண்டான். இருப்பினும் இந்தத் தழும்பை ஆற்றுவதற்கு ஒரு வழி செய்ய வேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டான்.

மதி ஒருவாறு தெளிவடைந்ததும், "என்றோ, யாரோ அறிவிலிகள் எதுவோ சொன்னதை நீ பெரிதுபடுத்தி, விவாகத்தையே வெறுக்கலாமா மதி? இன்று உனக்குள்ள பெருமைக்கும் புகழுக்கும் உன்னை உனக்காகவே திருமணம் செய்ய எத்தனை பேர் முன்வருவார்கள்!" என மிகவும் கனிவாகக் கூறினான்.

"அப்படி யாரும் இல்லை, ஜோ இருக்கவும் மாட்டார்கள். இந்தப் பேச்சை விட்டு விடு ஜோ, ப்ளீஸ்" எனக் குரல் கம்மக் கெஞ்சினாள். பின் "உனக்கு ஏன் இந்த எண்ணம் தோன்றியது ஜோ? நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். இது எனக்குப் போதும்" என்றாள்.

சிறிது நேரம் எதுவுமே பேசாமல் இலக்கற்று எங்கோ பார்த்த ஜோ பின்னர் திரும்பி அவளைப் பார்த்து, "இல்லை மதி, இது போதாது" என்றான். அவன் வார்த்தைகளில் சில சமயங்களில் வாடிக்கையாளர்களிடம் காட்டும் அந்த உறுதி தெரிந்தது.

திகைத்த மதி, விழிகள் துளிர்க்க என்னை விடமாட்டாயா என்பது போலப் பார்த்து "உனக்கு ஏன் இந்தப் பிடிவாதம் ஜோ? இத்தனை காலமாக இல்லாத எண்ணம் ஏன் இப்பொழுது வந்தது?" எனக் கேட்டாள்.

உன் தாயின் ஆசை உன்னைத் தாலியும் கழுத்துமாகப் பார்ப்பதுதான் மதி எனத் தனக்குள் நினைத்தவன் "நான் அண்மையில் ஒரு புத்தகம் படித்தேன். அதில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம்தான் ஒரு பெண்ணுக்குச் சுமங்கலி என்ற புனிதத் தன்மையையும், இல்லத்தரசி என்ற மேலான அந்தஸ்தையும் அளிக்கிறது. திருமணத்தின் மூலம்தான் அவள் பிறப்பு நிறைவு பெறுகிறது என்றிருந்தது. உன் ஜன்மம் கடைத்தேற வேண்டும் மதி, அதற்கு நீ திருமணம் புரிந்துகொள்ள வேண்டும்'' என்றான்.

''உன் அன்பும், பண்பும், நிர்வாகத் திறனும் நம் கம்பனியுடன் நின்றுவிடக் கூடாது. அது ஒரு குடும்பத்திலும் பரிமளிக்க வேண்டும். என் குடும்பம், என் குழந்தை என்று நீ பெருமைப்பட வேண்டும். திருச்சியில் போய்த் தலை நிமிர்ந்து நிற்கவேண்டும். உன் குடும்பத்தாரை மகிழ்வில் ஆழ்த்தவேண்டும். நீ இப்படியே தயங்கிக் கொண்டிருந்தால் வயதான உன் அம்மாவுக்கு ஏதாவது நடந்தால் அது இதைவிடப் பெரிய வேதனையாகும்.

''எல்லாவற்றிற்கும் மேலாக அழகில்லையென்று அவமதிக்கப்பட்டேனே என்ற உன் மனத்தழும்பு ஆறவேண்டும். என்னை எனக்காக ஒருவர் ஏற்றுக் கொண்டார் என்ற நினைப்பே உனக்கு ஒரு பலத்தையும், தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தும். அது நீ மேலும் பல சாதனைகள் புரிவதற்கு வழி வகுக்கும்.

''நான் திடீரென நினைக்கவில்லை மதி, பல நாட்களாகச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். எனக்குத் தெரியும் இது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல் உன் மனத்தை நோகடிக்குமென்று தயங்கினேன். ஆனால் ஊசி மருந்து வலிக்குமென்று கொடுக்காமல் விட்டால் நோய் தீருமா. அதனால் தான் இன்று இந்தப் பேச்சை எடுத்தேன்'' என மிக நிதானமாக ஒவ்வொரு வார்த்தையாக அவள் மனத்தில் பதியுமாறு கூறினான்.

மதி கண்கள் பனிக்க அவனைப் பார்த்தாள். அவள் இதழ்கள் புன்னகையில் விரிந்தன. ''எனக்காக இவ்வளவு சிந்தித்திருக்கிறாயே, உனக்கு நான் என்ன செய்ய!'' என்றாள். அவள் குரல் தழதழத்தது, விழிப்புனல் உதிர்ந்தது.

அவள் கையைப் பற்றிய ஜோ ''எனக்கு என்றும் அம்மாவாக இரு மதி. நீ வந்த பின்தான் நான் தாயன்பை உணர்ந்தேன்'' எனக் குரல் கரகரக்கக் கூறியவன், ''விவாகம் செய்து கொள் மதி, பிளீஸ்'' என மீண்டும் கெஞ்சினான்.

மதி மௌனித்தாள். பின் எதையோ சிந்திப்பவள் போல் யன்னலுக்கு வெளியே தெரிந்த சிட்னித் துறை முகப் பாலத்தைப் பார்த்தாள். வெகு கம்பீரமாக உயர்ந்து நிற்கும் அப்பாலம் சிட்னி நகரின் ஓர் அடையாளச் சின்னம். ஆஸ்திரேலியரின் திறமைக்கு அது ஒரு சான்று என நினைத்தாள். பின் ஜோவிடம், ''யாரும் என்னைத் திருமணம் செய்ய முன்வரவில்லையே என நான் வருந்துகின்றேன் என நீ நினைத்தால் அது தவறு ஜோ. ஏனென்றால் நான் என்றும் அந்த வாழ்வுக்கு ஆசைப்படவோ ஏங்கவோ இல்லை. நான் ஆசைப்பட்டதெல்லாம் இதுதான். என் திறமையைப் பலரும் மதிக்க வேண்டும் என்பது. அது உன்னால் எனக்குக் கிடைத்துவிட்டது. அதற்கு உனக்கு என் பல்லாயிரம் கோடி நன்றிகள்'' என்றாள்.

ஆனால் ஜோ விடுவதாக இல்லை. ''நான் உனக்குச் சொல்லத் தேவையில்லை, மதி! சிந்தித்துப் பார் நீ. உன்னை இந்தப் புகழ், பெருமை, பணத்துடன் உன் அம்மா காண்பதா அல்லது கழுத்தில் ஒரு





தாலியுடன் நான் ஒருவரின் மனைவி என்ற அந்தஸ்துடன் பார்ப்பதா அவருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்?'' எனக் கேட்டான். கடைசியாக அவன் திருச்சிக்குப் போனபோது மதியின் அம்மா ''அவளை என்று தாலியும் கழுத்துமாகப் பார்க்கிறேனோ, அன்று தான் எனக்கு நிம்மதி'' என வருத்தத்துடன் கூறியதை நினைத்துக் கொண்டான்.

உதடுகள் மலரப் புன்னகைத்தவள் தனக்குள் நினைத்தாள். என்னதான் பணம், காசு, பதவி இருந்தாலும் காலாகாலத்தில் ஒரு கல்யாணம் செய்து கொள்ளவேணும் என்று அம்மா சொல்வது நினைவு வந்தது. ஜோவைக் கண்கள் மலரப் பார்த்தாள். அவள் இதழ்கள் புன்னகையில் மலர்ந்தன. அத்துடன் சதா வேலை வேலையென்று கம்ப்யூட்டருடன் இருக்கும்போது சில சமயங்களில் ஒரு தனிமையும் வெறுமையும் தோன்றுவதுண்டு. அச்சமயங்களில் அன்பாகப் பேசி மகிழ ஜோவைத் தவிர யாரும் இல்லையே. சித்துவாவது அருகில் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்றும் அவள் மனது ஏங்கும்.

மதி நினைத்தாள் இன்று அவளுக்குக் கிடைக்கும் கணவன் என்பவன் பொருளாதார ரீதியில் அவளைக் காப்பாற்றுபவனாக இருக்கத் தேவையில்லை. ஆனால் ஒரு நட்பு, அன்புப்பரிமாற்றம், ஆதரவு தேவைப்படும் போது உரிமையுடன் சாய்வதற்கு ஒரு தோள். வாழ்வின் நல்லது கெட்டதுகளைப் பகிர்ந்துகொள்ள ஒரு தோழமையான இதயம் கிடைத்தால் நல்லது. அப்படிக் கிடைக்கும் தோழமையான அந்த அன்பும் நட்பும் அவள் வளர்ச்சி கண்டு பொறாமைப்படாததாக, ஓர் அழகான மலர்ச்செடிக்கு அன்புத் தண்ணீர் ஊற்றிக் கவனத்துடன் வளர்க்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

அப்படி யாரும் கிடைப்பார்களா என நினைத்துப் பார்த்தாள். ராகவனின் முகம் வந்து அவள் இதயமெங்கும் வியாபித்துக் கண்கள் விகசித்தன. ஒவ்வொரு தடவையும் அவளது புதிய மென் பொருட்களையும் அவற்றை உருவாக்க அவள் கையாண்ட யுக்திகளையும் அவர் தன்னை மறந்து வானளாவப் புகழும்போது மதி ஒரு வகைச் சங்கோசத்துடன் அதை ஏற்றிருக்கிறாள்.

இதையெல்லாம் கவனித்த ஜோ, ''என்ன மதி?'' என அவளை உலுக்கினான்.

''எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறாயே, ஜோ! மிகவும் மகிழ்ச்சி, எனக்கு ஒரு விவாகம் செய்ய வேண்டுமென்று நீ விழைந்தால் என்னை இந்த நிலைக்கு உயர்த்திய உன் விருப்புக்கும் நான் மதிப்பளிக்க வேண்டும். எனவே என்னை எனக்காகவே விரும்பும், நமது புனிதமான இந்த நட்பின் மகத்துவத்தை நன்கு புரிந்த, அதற்கு என்றுமே களங்கம் கற்பிக்காத, என் அக அழகை மட்டுமே ஆராதிக்கும் ஒருவர் இருந்தால் கொண்டு வந்து காட்டு. அதன்பின் மிகுதியைச் சிந்திப்போம்'' என்றாள்.

ஜோ ஆனந்தக் கடலில் மூழ்கினான். ''ரொம்ப நன்றி மதி'' என அவள் கைகளைப் பற்றிக் குலுக்கினான். நீ சொன்ன எல்லாத் தகுதிகளுடனும் ஒருவரை நாளைக்கே காட்டுகிறேன்'' என்றான். ''நாளைக்கேவா? யாரையாவது மனத்தில் வைத்திருக்கின்றாயா?'' எனக் கேட்டாள்.

''அது சஸ்பென்ஸ்! ஆனால் அவரைப் பார்த்து நீ ஆச்சரியப்படப் போகிறாய்'' எனக் கூறிவிட்டுப் போய் விட்டான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மதி, யாராக இருக்கும் என நினைத்தாள். அவள் மனத்திற்குள் ராகவனின் முகம் எட்டிப் பார்த்தது. நினைவுகளைக் கலைத்து வேலையில் ஈடுபட முனைந்து கொண்டிருந்தாள்.

மறுநாள் காலையிலிருந்தே ஜோ, "மதி இன்று மாலையில் ஒரு வேலையும் வைத்திருக்காதே. உனக்கு முக்கியான ஒரு அப்பொய்ன்ட்மென்ட் இருக்குது" என்று சொல்லிக்கொண்டிருந்தான். "அப்படி எதுவும் எனக்கு நினைவில்லையே, ஜோ! என்னது? யாருடன்?" எனக் கேட்டாள். "போனால் தெரிகிறது மதி, இது முக்கியமான ஓர் ஒப்பந்தம் கவனமாகக் கையாளவேண்டும்" எனப் புதிர் போட்டான்.

"என்னவோ போ!" என மதி விட்டுவிட்டாள். ஆனால் ஜோ மீண்டும் மாலையில் "மதி ஒரு நல்ல பட்டுப் புடவையில் வா, ஹோட்டல் வாசலில் நான் இறக்கி விடுகிறேன் நீ மட்டும் போய் பேசி முடித்துக் கொண்டு வா!" என்றான்

"யாருடன், என்ன பேசுவது, என்று எதுவுமே சொல்லாமல், இது என்ன விளையாட்டு, ஜோ?" எனக் கடிந்து கொண்டாள். பின் "நான் என்ன கொண்டு போக?" என்றாள். "ஒன்றுமே தேவையில்லை, உன் இதயத்தை மட்டும் கொண்டு போ. வரும் போது அதை விட்டுவிட்டு வேறொன்றை எடுத்துக் கொண்டு வா!" என்றான்.

புருவங்களைச் சுருக்கி அவனை ஒரு மாதிரியாகப் பார்த்து நகைத்தவள், "ஜோ! நீ நன்றாக இருக்கிறாயா அல்லது மன நோய் மருத்துவர் யாரையாவது உடனே பார்க்கவேண்டுமா?" எனக் கேட்டாள்.

"மன நோய் மருத்துவர் உண்மையில் யாருக்குத் தேவைப்படுகிறார் என்று வெகு விரைவில் தெரியவரும், இப்போ வா!" எனக் கொண்டு போய் நகரின் அந்தப் பிரபல ஐந்து நட்சத்திர ஹோட்டல் வாசலில் இறக்கி விட்டு "அதோ வாசலில் ஆவலுடன் உன்னை எதிர்பார்த்து நிற்கிறாரே, அவருடன் உன் வாழ்க்கை ஒப்பந்தத்தைச் சரியாகப் பேசி முடிவெடுத்துவிட்டு வா மதி, இதில் உனக்கும் சம்மதமென்பது எனக்குத் தெரியும்" என்று சொன்னான்.

அவன் காட்டிய திசையில் பார்த்த மதி ராகவன் நிற்பதைக் கண்டாள். அவரைப் பார்த்ததும் மதியின் மனச்சிறகுகள் விரிந்தன. இதமான காற்று மேனியைத் தழுவ இனம்புரியாத ஒரு குதூகல உணர்வு அவள் இதயமெங்கும் ஆக்கிரமித்துக் கொள்ள ஜோவின் புதிரெல்லாம் புரிந்த நிலையில் அவனை நோக்கி நடந்தாள்.

ராகவன் அவளருகே வந்து "வா மதி! நீ புடவையில் மிகவும் அழகாக இருக்கிறாய்" என்றான்.

மதியின் உள்ளமெங்கும் ஒரு வினோதமான அபூர்வமான இன்ப உணர்ச்சி பீறிட்டு அவளை நிலை தடுமாறச் செய்தது. அவள் விழிகள் பளபளத்தன.

இருக்கையில் போய் அமர்ந்த பின்னரும் மதியால் எதுவுமே பேச முடியவில்லை. அவள் நெஞ்சக் குழியை எதுவோ அடைத்து வார்த்தைகள் தடைப்பட்டன. எத்தனையோ வியாபார ஒப்பந்தங்களைப் பல சர்வதேச நிறுவனங்களுடன் பேசி வெற்றி பெற்றவளுக்கு இன்று என்ன பேசுவதென்று தெரியவில்லை. கண்கள் வேறு நிறைந்து கொண்டிருந்தன. என்றுமில்லாத ஒரு நாணம் அவள் இதயத்தின் அடித்தளத்திலிருந்து கிளர்ந்தெழுந்து அவளை ஆட்கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதி அங்கே ஓர் மௌனப் பதுமையாக இருந்தாள்.

அவளைக் குறும்பாகப் பார்த்த ராகவன் அதரங்களில் குறும்பு மின்ன "என்னால் நம்ப முடியவில்லையே" என்றான்.

மெதுவாகத் தலையை நிமிர்த்தி "எதை?" என வினவினாள்.
"எல்லோரின் வினாக்களுக்கும் ஒரு நொடியில் பதிலளிக்கும் அந்தக் கம்ப்யூட்டர் மூளையா என முன்னால் இருப்பது?" என்றான்.

குனிந்த தலை நிமிராமலே "இல்லை, ராகவ்!, இப்பொழுது உங்கள் முன்னால் இருப்பது ஒரு சாதாரணத் தமிழ்ப் பெண்" என்றாள்.

அதைக் கேட்ட ராகவன் உள்ளமெங்கும் உவகைபொங்க அவள் கைகளை மெதுவாகப் பற்றிக் கொண்டான். "ஜோ எல்லாம் சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன், மதி, என்னை....என்னைத் திருமணம் செய்து கொள்வாயா?" என வார்த்தைகளில் அன்பைக் குழைத்துக் கேட்டான்.

அச்சொற்கள் வரண்டு காய்ந்திருந்த பூமிக்கு ஒரு வான்மழை போல, உணர்ச்சியற்ற வாழ்வுக்கு ஒரு ஜீவன் போல அவள் இதயமெங்கும் ஓர் இன்ப ஊற்றாகப் பாய்ந்து அவளைத் திக்குமுக்காட வைத்தது.

ஒருவாறு தன்னிலைக்கு வந்த மதி மெதுவாகத் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள். அவள் கண்கள் பூத்தன. நெஞ்சம் நிறைந்ததால் பேச்சுத் தடைப்பட்டது.

ராகவன் அவள் கேட்பதற்கு முன்னரே "உன் உள்ளம் அன்பும், அறிவும், பண்பும், கருணையும் நிறைந்த ஓர் அழகான பூஞ்சோலை என்பது எனக்குத் தெரியும், மதி. அது தான் எனக்கு வேண்டும். வேறு எதுவுமே எனக்கு ஒரு பொருட்டல்ல. சிறு வயதிலேயே பெற்றவர்களின் அன்பை இழந்த என் மேல் அன்பு செலுத்த ஓர் உன்னதமான இதயம் வேண்டும் மதி. அது நீயாக இருந்தால் நான் மிகவும் அதிர்ஷ்டசாலியாவேன்" எனக் கூறினான்.

அவள் இதயமெங்கும் பொங்கி, கரைபுரண்டோடும் காட்டாற்று வெள்ளம்போல, மகிழ்ச்சி பிரவகித்து ஓடியது. பல வருடங்களின் பின் மதி அத்தகைய ஒரு இன்பசாகரத்தில் மூழ்கித் திளைத்தாள். மதியின் கண்கள் மெள்ள விரிந்தன. அந்த விரிவு ஒரு சந்தோஷச் சிரிப்பின் முகை அவிழ்ந்தது போலாகி மேலும் மலர்ந்து அவள் முகமெங்கும் பரந்து விகசித்தது.

அதையே அவளின் சம்மதமாக ஏற்ற ராகவன் அவள் கையைப் பற்றி மெதுவாகத் தன் இதழ்களைப் பதித்தான், மதியின் கண்களிலிருந்து அவன் கைகளில் தெறித்த சில துளி ஆனந்த புஷ்பங்கள் அதை ஆமோதித்தன. அங்கே மௌனம்தான் பரிபாஷையானது. வார்த்தைகள் தேவையற்று, இரு உயர்ந்த உள்ளங்களின் அன்பு சங்கமமாயிற்று.

மதியின் சம்மதம் தெரிந்த ஜோ மிக விமரிசையாகத் திருமண ஏற்பாடுகளில் இறங்கினான். மதி பத்து வருடங்களின் பின் முதல் தடவையாகத் தன்னருமைத் தோழியை மின் அஞ்சல் மூலம் தொடர்பு கொண்டாள்.

அவள் இதய வீணை *'காக்கைச் சிறகினிலே நந்தலாலா'* என்றும் *'உந்தன் கரிய நிறம் தோன்றுதடா நந்தலாலா'* என்ற பாரதியார் பாடலைச் சுநாதமாக இசைத்து மகிழ்ந்து கொண்டிருந்தது.

*யாவும் கற்பனை!*

# இலங்கை வேந்தன்
## எதிர்
# அஸ்தினாபுரி அரசன்

( வல்லிபுரம் சுகந்தன், 3ம் வருடம்,
பொறியியல் பீடம், பேராதனைப் பல்கலைக் கழகம் )

உங்களுடன் !

இதிகாசங்களான இராமாயணமும் பாரதமும் தமிழ் இலக்கியத்தின் இருபெரும் சொத்துக்கள். அவற்றில் மூழ்கித் திளைப்பவர்கட்கு விதவிதமான சிந்தனை முத்துக்களை அள்ளி வழங்கும் அட்சய பாத்திரங்கள். அந்த ஆழிகளின் அடிவரை ஆழ்ந்து சென்று அலசிவர ஆசைப்பட்டேன். ஆழம் காணமுடியா மங்கையர் மனம் மாதிரி, மூழ்கிப்பார்த்த கணங்களில் மூச்சுத்தான் முட்டியது. அந்த மூச்சுத் திணறல்களுக்கிடையே கையில் கிடைத்த கிளிஞ்சல்களை அள்ளிக் கொண்டு கரைவந்து சேர்ந்தபோது மிளிர்ந்த பவளங்களிற் சில கீழே பவனி வருகின்றன.

இந்தக் கருத்துக்களுடன் நீங்கள் உடன்படாமல் முரண்படலாம். ஆனாலும், அடை வைத்த முட்டைகளில் குஞ்சுகள் தம் கோதுடைத்து வெளிவருவதுபோல் இதுவரை காலமும் இதிகாசங்களில் இருட்டடிப்புச் செய்யப்பட்ட விடயங்கள் இப்போது வெளிப்படுகின்றன என்றே கூறவேண்டும். ஏனெனில்,

இராமயணத்தின் மூலம் வால்மீகி. பின் அதனைக் கம்பர், தன் கற்பனை சேர்த்துத் தமிழில் பாடினான். இருவரும் எப்படியிருப்பினும் தேசப்பற்று நிரம்பியவர்களாய்த்தான் இருந்திருப்பர். எனவே தங்கள் மன்னனைப் பாட்டுடைத் தலைவனாக்கி, எதிரிகளைத் தாழ்த்தித் தூற்றியிருக்க வாய்ப்புண்டு. அதேபோல், பாரதமும் வியாசரால் இயற்றப்பட்டதும், பாண்டவர் பேரனான பரீட்சித்து மன்னனின் மகனின் வேண்டுகோளின்படியே வைசம்பாயனரால் அவனது யாகத்தில் முதன்முதலாக மக்களுக்குக் கூறப்பட்டது. கௌரவர்களின் தாயாதிகளின் வழித்தோன்றலான ஜனமேஜயனின் வேண்டுகோளின்படி சொல்லப்பட்டதால் பாரதமும் பக்கசார்புடையதாகத்தான் இருந்திருக்கும்.

இந்நிலையில் இதிகாசநாயகர்களின் விரோதிகள் இருவரையும் தனித்தனியே கற்பனையில் சந்தித்த வேளைகளில் அவர்கள் என்னிடம் முறையிட்டவற்றைக் கேட்டுவிட்டு, அவர்கள் இருவரையுமே இணைத்து உங்கள்முன் உரையாட விட்டுவிட்டு, நந்திமாதிரி நில்லாமல் நான் விலகிக்கொள்ளுகிறேன்.

*இடம் - மேலுலகம்*
*காலம் - நிகழ்காலம்*



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



*பாத்திரங்கள் - இராவணன், துரியோதனன்.*
*(இன்னிசைமிகு வீணாகானம் காற்றில் கலந்துவந்து காதோரம் உரசிச் செல்ல, அதை அனுபவித்தவாறே அதை நாடி வருகிறான் துரியோதனன்)*

துரி - (*தனக்குள்*) ஆகா! என்னதோர் வீணாகானம்! இவ்வின்னிசையை இதுவரை என் செவி பருகியதில்லையே! அதற்குச் சொந்தக்காரர் யாராயிருக்கும்? *(சுற்றும்முற்றும் பார்க்கிறான். சற்றுத் தொலைவில் இராவணன் வீணை மீட்டுவதைக் காண்கிறான். அவனருகிற் செல்ல, காலடியோசை கேட்டு இராவணன் வீணை வாசிப்பதை நிறுத்திவிட்டுத் துரியோதனனைப் பார்க்கிறான்)*

துரி - ஆகா! என்ன இனிமை! என்ன இனிமை! தேவரீரே! தனிமையிலே இனிமைமிக்க கானமிசைக்கும் தாங்கள் யாரென அறிய அஸ்தினாபுரியின் அரசன், துரியோதனன், நான்ஆவலாயிருக்கிறேன்.

இரா - அப்பா! சுயோதனா! என்னையா தெரியவில்லை? பூவுலகில் வீணைக்குப் பெயர்பெற்று, சிவனையே தன் சிரம்கொண்டு செதுக்கிய வீணையின் கீதத்தால் பரவசப்படச்செய்த அந்தசாட்சாத் இராவணனே நான்!

துரி - மாண்டோதரி மணாளரே! மூவுலக வேந்தே! தாங்களா நீங்கள்? உங்களைச் சந்தித்ததில் பேருவகை அடைகிறேன்.

இரா - கௌரவர் முதல்வனே! கர்ணனுக்கு நண்பனாயும், விகர்ணனுக்கு அண்ணனாயும் விளங்கிய அரவக்கொடியோனே! உன்னைக் கண்டதில் எனக்கும் மகிழ்ச்சியே!

துரி - ஆனாலும் தங்களின் வீணாகானத்தின் சோகபானத்தையல்லவா என் செவி அருந்தியது!

இரா - என் செய்வது? மனதில் இருப்பதுதானே செயலிலும் வரும்.
துரி - பெறுதற்கரிய துணைவனாகக் கும்பகர்ணனையும், மைந்தனாக இந்திரஜித்தையும் அடைந்த தங்களுக்கு அப்படி என்னதான் கவலையோ?

இரா - சொந்தப் பூமியாம் சுதந்திர ஈழத்தில் மண்ணின் மைந்தர்கள் படும் அவலம் கவலை அளிக்கிறதே!

துரி - எமது பரம்பரை காட்டிய கலங்கரை வெளிச்சத்தை ஏற்க மறுத்து எதிர்த்ததால் அல்லவா அவர்கள் அல்லலை அனுபவிக்கிறார்கள்.

இரா - உங்கள் ஆதிக்க வெறிக்கு அடிபணியவில்லை என்பதற்காய், எண்ணியதைச் சாதிக்கும் எனது வாரிசுகட்கு எதிராய் வாதிக்க வந்தீரோ! அடுத்தவன் சொந்தத்திற்கு ஆசைப்படுவதும், அண்ணன் தம்பிகள் அடிபட்டுக்கொள்வதும் உங்கள் அணிக்கே உரித்தான பழக்கமல்லவா! உங்கள் பிணியை எமது மண்ணில் உருவாக்கியதும் உமது பரம்பரைதான்!

துரி – எதற்காய் எம்மீது வீண்பழி சுமத்துகின்றீர்? நாங்கள் எங்கே அண்ணன் தம்பிக்குள் அடிபட்டோம்? உங்கள் வம்சத்தில்தான் தம்பியே தமையனுக்கு எதிராய், துரோகியாய் மாறினான். சொந்தத் தம்பி என்பதற்காய் காட்டிக்கொடுத்த கயமையைக் கண்டிக்காது விட்ட தாங்கள் அல்லவா தண்டிக்கப்படவேண்டியவர்!

இரா – ஆகா! அண்ணன் தம்பி ஒற்றுமைக்கு இலக்கணமாய் வாழ்ந்தவர்களல்லவா நீங்கள்! அதனாற்தானோ அன்னையை நிகர்த்த அண்ணனின் மனைவியை, பாஞ்சாலன் பெற்றெடுத்த பைங்கிளியாம் பாஞ்சாலியை, சபைதனில் நிறுத்தி, துச்சாதனனைக்கொண்டு சொந்தத்தை நிந்தித்தாய். அந்தகன் மைந்தனாதலால் அறிவுக் கண்ணுமா உந்தனுக்குக் குந்தகமாய்ப் போயிற்று? அந்நியன் ஆதிக்கத்தை அழிப்பதற்கும், அண்ணனின் பங்கை அபகரிப்பதற்கும் உள்ள வித்தியாசத்தை இனியாவது புரிந்துகொள்.

துரி – மன்னிக்கவேண்டும் மகாராஜா! மறைக்கப்பட்ட சில உண்மைகளை மறக்கமுடியாமல் தான் இன்னும்கூட நான் வேதனையால் தவித்துக்கொண்டிருக்கிறேன். பாண்டவர் என் சகோதரர்கள் அல்ல! இந்த உண்மையை உங்களால்கூடவா உணரமுடியவில்லை?

இரா – ஏதேது! புதுக்கதைகள் கூறுகிறாய்? அப்படி என்னதான் உண்மை உங்கள் வரலாற்றில் மறைக்கப்படிருக்கிறது? பாரதபூமி பாண்டவர்க்கே உரியது என்பதில் மறைப்பதற்கோ அன்றி மறுப்பதற்கோ ஏதும் இருப்பதாய் எனக்குத் தெரியவில்லையே!

துரி – ஏன் இல்லை? அஸ்தினாபுரியின் அரசுக்குப் பாண்டவர்கள் எப்படி உரித்துடையோராவர்? பாரத ஆட்சி அம்பாலிகை மைந்தனுக்கே உரியது. அதை நாங்கள் ஆட்சேபிக்கயில் ஆண்டுவந்த பாண்டு மாண்டுபோனதும், பாண்டவர்கள் என்று அழைக்கப்பட்டவர்கள் அந்தப் பூமியைத் தீண்டும் உரிமையை இழந்துவிட்டார்கள். ஏனெனில், அவர்கள்தான் பாண்டுவின் இரத்த வாரிசுகளில்லையே! அவர்களைப் பாண்டவர்கள் என்றே அழைக்க முடியாது. பாண்டுவின் பத்தினி என்று பகல்வேஷம்போட்ட பிருதையின் பிள்ளைகள் என்பதால் அவர்களுக்கு ஆட்சியுரிமை வந்திடுமோ? வேண்டுமானால் பாண்டுவின் இராச்சியத்தில் அவன் மாண்டுபோகையில் மாத்ராதேவிக்கு உருவான, கருவான சங்குவதிக்கு உரிமை இருந்திருக்கலாம். ஆனாலும் அரசுரிமை ஆண்வழிச் சொத்து என்பதால் எங்களுக்கே அஸ்தினாபுரி உரித்துடையது.

இரா – நீ செய்த தவறுகளை மறைப்பதற்காய் உன் சிற்றன்னைமீது அவதூறு கூறுகின்றாயே கதைக்கவிட்டால், திருஷ்டத்துய்மன் தங்கையின் துகிலுரிந்ததைக்கூட நியாயப்படுத்திவிடுவாய் போலல்லவா தெரிகிறது!

துரி – உண்மையும் அதுதானே! சில நிர்ப்பந்தங்களின் பெயராலேயே செய்யக்கூடாத சில செய்கைகளையும் நாம் செய்யவேண்டியிருந்தது. அதில் ஒன்றுதான் திரௌபதியின் துகிலுரிவும்!

இரா – அப்படி என்னதான் நிர்ப்பந்தமோ?

துரி – சிற்றன்னை என்பதற்காயக் குற்றங்களை மறைத்து, குந்தியின் மானம் சந்திசிரியாது பாதுகாத்தோம். ஆனால், சூரன் புத்திரியின் உதரத்தில் உதித்த உதிஷ்டிரனும் அவன் தம்பியரும் அஸ்தினாபுரியின் ஆட்சிக்கு ஆசைப்பட்டார்களே! அரசகுலத்தோர் அல்லாதோர்க்கு ஆளுமுரிமை எப்படி வரும்? இயமன் புத்திரனும் அவன் இளவல்களும் சத்திரியர்களல்ல என்பதைச் சபைக்கு உணர்த்தவே அந்த ஆரணங்கின் ஆடையை அகற்ற உத்தரவிட்டேன். அவர்கள் அரசவாரிசுகளாய் இருந்திருப்பின், தம் மனைவியின் மானத்தை மற்றவர்கள் மாசு செய்கையில் மனம்பொறுத்து மரங்களாய் நின்றிருப்பார்களா? பார்த்திபனுக்கு மாலையிட்ட பாஞ்சாலியைப் பஞ்சவரும் பதிவிரதையாய்ப் பகிர்ந்தார்களே! ஐவரைக் கலியாணஞ்செய்தும் கல்யாணியின் மானம் காக்க அவள் அண்ணனாம் கண்ணன் அல்லவா வரவேண்டியிருந்தது.

இரா – கொடுத்த வாக்கைக் காப்பது சத்திரியர்களின் கடமையென்பதால் அவர்கள் பொறுமை சாதித்திருக்கலாம்தானே?

துரி – சத்தியம் மீறியதற்குப் பிராயச்சித்தமாய் சத்திரியர்கள் கன்னிப்பசு ஒன்றிற்கு ஒரு கைப்பிடி அறுகம்புல் கொடுத்தால் போதுமானது என்பதுகூட அவர்கட்குத் தெரிந்திருக்கவில்லையே! பின் எப்படி அவர்களை அரச வம்சத்தவர் என்று ஏற்றுக்கொள்வது?

இரா– ஒரு வேளை, அரிச்சந்திரனைப் போன்று சத்தியம் காப்பதற்குத் தருமபுத்திரனும் தாகித்திருக்கக் கூடுமே!

துரி – அப்படி எண்ணியிருந்தால், குருக்ஷேத்திரத்தில் 15ம் நாட் போரில் அஸ்வத்தாமா இறந்ததாக ஆச்சாரியார் துரோணருக்கு எப்படிக் கூறலாம்? அரசுரிமையில் வைத்த அளவற்ற ஆசையால் அல்லவா பூசைக்குரிய அந்தணர், அர்ச்சுனன் கூற்றையும் நம்பாது கூற்றுவன் பிள்ளையிடம் கேட்டபோது அவரின் நம்பிக்கைக்குத் துரோகமாகப் பொய்யுரைத்து, அவர் மெய்விட்டு உயிர் பிரியச் செய்தான். விருகோதரன் அண்ணல் அதற்கு அத்தாட்சியாய்த் தரை பரவாத அவன் ரதம்கூட நிதமும் வதம் நடக்கும் நிலத்திற்கு இறங்கியதே!

இரா – நீ என்னதான் கூறினாலும் அஸ்தினாபுரி அரசின் விருந்தாளியாய் வந்து அபலையாய் மாறிய அந்த ஆரணங்கை, அதுவும் அவள் வீட்டுக்கு விலக்காக நின்ற வேளையில். துகில் களைய விழைந்தது பிழையான செயலே!

துரி – அதைச் சொல்வதற்கு உங்களுக்குத்தான் தகுதி கிடையாதே! மாற்றான் மனைவியை மனதால் மணந்து, அந்த மாயைக்குள் மயங்கிக் கிடந்த உங்கள் மதியின் மங்கல் இன்னமும் தெளிவடையவில்லைப் போலும்.

இரா – துரியோதனா! உனக்கும் உண்மை தெரியவில்லை என


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கிறேன். நான் எங்கே மாற்றான் மனைவியை மனதால் நினைத்தேன்? என் மனைவி மாண்டோதரியை வாலி வலிந்து என்னிடமிருந்து கவர்ந்து,வற்புறுத்தி மணந்துகொண்டாலும், கொண்டவள் மேல் கொண்ட காதலாலும் மீண்டும் அவளைப் பதிவிரதையாய், பட்டத்துராணியாய் ஆக்கிக்கொண்டவன் நான். பத்தினியைப் பறிகொடுத்தவனின் பரிதாப நிலையை, அந்தச் சோகங்களை அனுபவித்த நான் அப்படியொரு காரியத்தைச் செய்வேனா? வைகுந்தவாசன் மனம்கொண்ட வைதேகி மீது என் கைவிரல் நிழல்கூடத் தீண்டியதில்லை தெரியுமா?

துரி – ஓஹோ! அப்படியானால், மாயமான் வேடங்கொண்ட மாமன் மாரீசன் உதவியால் மைவிழியாள் மிதிலைச் செல்வியைக் களவாய்க் கவர்ந்து அசோகவனத்தில் சிறை வைத்ததற்குக் காரணம், அவளை உங்களுக்கு மனைவியாக்காமல் மற்றொருவனுக்கு மாலையிடச் செய்யவோ? மனதில் கொண்ட மயக்கத்தை மறைத்து, மழுப்பாதீர்கள்.

இரா – ஜானகியை மணப்பதற்கு நான் எண்ணியிருந்தேனா? பைத்தியகாரா! மைதிலி என் மகளடா! அவள் இராமனுடன் காட்டில் அலைந்து கஷ்டப்படுவதை என் தந்தையுள்ளம் தாங்காததால்தான் அவளை அசோகவனத்திற்கு அழைப்பித்தேன்.

துரி – அதற்கு, எதற்காய் தனித்திருந்த வேளையில் சீதையைச் சிறையெடுத்தீர்கள்?

இரா – இராமன் இருக்கும் இடமே தனக்கு அயோத்தி என்று கூறி மிதிலைக்குக்கூடச் செல்ல மறுத்தவள், மழலையாய் இருக்கும்போதே, இலங்கைக்கு ஆபத்து வரும் என்பதற்காய் அவளைப் பேழையில் வைத்துக் கடலில் சேர்த்துவிட்ட என்னுடன் வரச் சம்மதிப்பாளா?

துரி – அப்படியானால், இராகவன் போர் தொடுத்து வந்தபோதினிலே அவளை விடுவித்திருக்கலாமே!

இரா – என்னைப்போலவே, வாலியால் தன் வயிற்றில் உருவான தன் மகனைப் பார்க்க மாண்டோதரியும் ஆசைப்பட்டு இருக்கலாமல்லவா? சீதையைச் சிறை விடுக்க மறுத்தால்தானே இராமனின் தூதுவனாய் அங்கதன் என் சபை வரமுடிந்தது. மாண்டோதரியும் தன் மைந்தனை நயனங்களால் நனைக்க முடிந்தது.

துரி – அதன்பின்னாவது ஜானகியை விடுவித்திருக்கலாமே?

இரா – பரசுராமனையே புறமுதுகிடச்செய்த பரந்தாமன் அவதாரமான தசரதராமனைத் தன் மணாளனாய்க்கொண்ட சிற்றிடையாள் சீதையின் தந்தை போரைக் கண்டு அஞ்சிய பேடியென்று அவளைப் பிறர் பழிக்கக்கூடாதல்லவா! அதனால்தான் மருமகன் கையால் என் வாழ்வு முடிவுற நான் சம்மதித்தேன்.

துரி – உங்கள் கதையைக் கேட்டால், ஏதோ நீங்கள் விட்டுக்கொடுத்ததால்தான் இராமன் வெற்றி ஈட்டியதாகத் தெரிகிறதே?

இரா – நிச்சயமாய்! சீதையை அசோகவனத்தில் சிறைவைத்தபின்னர், அருமைத் தம்பி விபீடணனின் புத்திரியாம் திரிசடையை அவள் தோழியாக்கினேன். பின்பும் ஜானகி மணாளன் என்னை ஜெயிக்கவேண்டுமானால் என் மைந்தன் மேகநாதனின் மாயத் தாக்குதல்களிலிருந்து தப்பவேண்டும் என்பதற்காய் விபீடணனை கோசலை மைந்தனிடம் அனுப்பி எமது படை இரசியங்களை அவன் அறியச்செய்தேன். இறுதிநாள்ப் போருக்கு முன்னரும் ஆயுதமிழந்து நின்ற வேளையில் இராகவனை மல்யுத்தத்திற்கு அழைக்காது, *"இன்று போய் நாளை வா"* என அவன் வாயால் சொல்லக் கேட்டு, சீதாராமன் வீரத்தின் பெருமையை உலகம் வியக்கச்செய்தேன். கம்பர்கூட இந்த இடத்தில் தடுமாறவில்லையா? *மாமியார் முன் மருகன்* என்றார். ஆனால் அங்கே *மருகன் முன் மாமனாராய்* நான் நின்றிருந்தேன்.

துரி – கவிச்சக்கரவர்த்தி கம்பரின் உவமானத்தில் தப்புச் சொல்கின்றீர்களே! அவமானம்! உங்கள் உவமிப்பு அல்லவா உதைக்கிறது! மருமகன்முன் மாமனார் எதற்காய் மனச்சஞ்சலம் அடையவேண்டும்?

இரா – எம் தேசங்களின் இன்றைய நிலை உனக்குத் தெரியவில்லைப்போலும். மாப்பிள்ளைமாரின் வேதனமாய் மாறிவிட்ட சீதனத்தின் சீரழிவால் மாமனார் மனம் படும் வேதனை தெரியாதா? இக்காலத்தில் மருமகனின் முகத்தினை நேர்நோக்கிப் பார்க்கச் சஞ்சலப்படும் மாமனாரைச் சென்று கேட்டுப்பார். பாவம்! அவர்களின் நிலை என்னிலும் பரிதாபகரமானது!

துரி – அப்படியானால், சுயம்வரம் மூலம் மங்கையர் தம் மணாளனைத் தேர்ந்தெடுக்கும் எம் கால வழக்கம் எப்படித்தான் மாறியதோ?

இரா – காலமாற்றத்துடன்தான் எல்லாமே மாறிவிட்டதே! என் கவலைக்கு இதுகூட ஒரு காரணம்தான்.

துரி – வேதனை வேண்டாம் வேந்தே! உங்கள் தேசத்தில் சீதன அரக்கனையும் அடியோடு அழிக்க மண்ணின் மைந்தர்கள் நடவடிக்கை எடுக்கிறார்களாம் என்று காற்றுவாக்கில் செய்தியொன்று கசிந்து வந்ததே!

இரா – அப்படியா சங்கதி? அவர்கள் நினைத்தால் நிச்சயம் நிறைவேற்றுவார்கள். வாரும் அவர்கள் வெற்றிபெற நாமும் சென்று வாழ்த்துவோம்.

— — —

*(குறிப்பு – மாண்டோதரியை இராவணனிடமிருந்து வாலி அபகரிக்கிறான். வாலியின் சிசு மாண்டோதரியின் வயிற்றிலிருக்கும் வேளையில் குருவின் விருப்பத்திற்கு ஏற்ப மாண்டோதரியை இராவணனிடம் ஒப்படைக்கவேண்டிய நிர்ப்பந்தம். எனவே அங்கதன் மாண்டோதரியின் வயிற்றிலிருந்து வெட்டி எடுக்கப்படுகிறான். – இக்கதை பர்மிய இராமாயணத்தில் வருகிறது )*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால சதுரங்கம்

## விவாதத்திற்கு வழங்கப்பட்ட கருத்து:

காலம் மாறுகிறது. நாமும் மாறுகின்றோம். இந்த மாற்றம் அவசியமானது. அல்லாவிட்டால் புலம்பெயர்ந்த நாடுகளில் இன்றைய கால ஓட்டத்துடன் எமது வாழ்க்கையை வெற்றிகரமாகக் கொண்டு செல்ல முடியாது. ஆனால் இந்த மாற்றங்கள் அனைத்தும் எமக்குச் சாதகமாக அமைந்து விடுவனவல்ல. பல விடயங்களில் நாம் எம்மை, எம்மைச் சார்ந்த விடயங்களை விட்டுக் கொடுக்க வேண்டியவர்கள் ஆகின்றோம். இவற்றை நாம் விரும்பியோ, விரும்பாமலோ ஏற்றுக் கொள்கின்றோம். இன்று இங்கு நிகழும் பல பாதகமான விளைவுகளில் ஒன்று, அதிகரித்து வரும் விவாகரத்து. இது கணவன்-மனைவியை மட்டுமல்ல அவர்களது குழந்தைகளையும், பெற்றோர்களையும், சுற்றத்தினரையும் வெகுவாகப் பாதிக்கின்றது. தாயகத்தில் காணாத அளவிற்கு, புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழர்களிடையே விவாகரத்து அதிகரித்து வருவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இதற்குக் காரணங்கள் பல. இருப்பினும், அதிகரித்துவரும் விவாகரத்துகளுக்கு காரணம், எமது தமிழ்க் கலாச்சாரப் பண்பாடுகளை முறையாகப் பின்பற்றாத தன்மையினாலா? என்ற கேள்வியும் எழுகின்றது. இந்த விடயத்தைப் பற்றிய உங்கள் கருத்துக்களை அறிய விரும்பிய வேளையில் நீங்கள் அனுப்பிய கருத்துக்களை இங்கு தருகின்றோம்.

- ஆசிரியர்.

### கருத்து 1

புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழர்களிடையே விவாகரத்து அதிகரித்து வருவதற்கு தமிழ் கலாச்சார பண்பாடுகளை முறையாக பின்பற்றாத காரணமும் ஒன்றே ஒழிய அதுவே முழுமையான காரணமுமல்ல.

முன்னைய காலங்களிலும் எம் நாட்டில் விவாகரத்து இடம் பெற்றுள்ளது அதிக அளவில் அல்ல.அத்தி பூத்தாற் போல் ஒன்று இரண்டு. இவர்களை உற்றார் உறவினர் மட்டுமல்ல சமூகமுமே ஏற்றுக் கொள்ளவில்லை. அனுதாபப் பட்ட போதிலும் உரிய இடமோ மரியாதையோ அளிக்கப்படவில்லை.

எங்கள் கலாச்சாரம் ஒருவனுக்கு ஒருத்தி என்பதே. ஆனால் அந்த ஒருவனோ ஒருத்தியோ நெறி தவறி முறைமாறி தவறான வழியில் சென்று செய்யத்தகாத செயல்களை செய்தபோதிலும் விவாகரத்துக்கும் மறுமணத்திற்கும் அஞ்சி குடும்ப மானத்தை காப்பாற்ற வேண்டும் என்பதாலும் தினமும் மனம் வருந்தி ஊணின்றி உறக்கம் இன்றி தங்களை அழித்துக் கொண்டது மட்டுமல்ல பிள்ளைகளையுமே அழித்துக் கொண்டனர். சிலர் ஊர் விட்டு வெளியேறியதும் உண்டு.

கலாச்சாரம் எல்லா நாடுகளிலும் ஒரே மாதிரியானதன்று. பிற நாடுகளில் விவாகரத்து மறுமணம் எத்தனை முறையும் செய்து கொள்ளலாம். என் பிள்ளை உன் பிள்ளை எங்கள் பிள்ளை எனவும் கூறிக்கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக புலம் பெயர்ந்து வந்த எம் மக்கள் பல்லின மக்கள் மத்தியில் வாழ வேண்டிய நிலை. பணம் தேடுவதற்காக ஆணும் பெண்ணும் சரிசமமாக நேர கால மாற்றத்துடன் இரவு பகல் வேலை செய்கின்றார்கள். பிற மக்களுடன் பழகும் சந்தர்ப்பத்தில் அவர்களின் கலாச்சாரப் பண்பாடுகளினாலும் கவரப்பட்டு இருபாலாரும் அவற்றையும் பின்பற்றுகின்றார்கள்.

புலம் பெயர்ந்து வந்த சில பெற்றோரும் தங்கள் பிள்ளைகள் உயர் கல்வி பெற வேண்டும் நல்ல உத்தியோகம் வகுக்க வேண்டும் என்பதில் காட்டும் ஆர்வம் எங்கள் கலாச்சாரப் பண்பாடுகளை எடுத்துக் கூறி புரிய வைப்பதில்லை.

கணவன் மனைவிக்குள் இடம் பெறும் சிறு சிறு வாக்குவாதங்களைக் கூட சமாளித்து அனுசரித்து போகத் தெரிவதில்லை. கணவன் ஒன்று சொன்னால் மனைவி இரண்டு சொல்ல வேண்டும். பின்னர் இருவரும் அனேகம் சொல்லியே தீரவேண்டும். ஒருவருக்கு ஒருவர் மரியாதையோ அன்போ காட்டக்கூடாதென்பதில் கண்ணும் கருத்துமாகவே அருக்கிறார்கள். விஷயம் கொஞ்சம் முற்றிவிட்டால் விவாகரத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள். இவர்களின் தப்புக்கெல்லாம் இலகுவான சொல் 'strss'.

எங்கள் நாட்டில் கணவன் மனைவிக்கிடையே பிரச்சனை மனக்கசப்பு ஏற்பட்டால் பெற்றோர், உற்றார், உறவினர்கள் ஏன் ஊரிலுள்ள பெரியவர்கள் கூட துணை நின்று அறிவுரை கூறி நியாயங்கள் பலவற்றை எடுத்துக் கூறி அவர்கள் பிழைகளை சுட்டிக் காட்டி உணர வைத்து நல்வழி காட்டி வாழ வைப்பர்.

இங்கு சொந்த பந்தம் இருந்தாலும் அவரவர் வேலை இயந்திர வாழ்க்கை அடுத்து பிறநாட்டு நாகரீக மோகத்தின்படி அவரவர் பிரச்சனைகளை அவர் அவரே தீர்த்துக் கொள்ளட்டம் எனவும் விட்டுவிடுகின்றார்கள். "That is their problem".

பிறமக்களிடம் கேட்டால் அவர்கள் கலாசாரத்தின்படி, ஏன் கஷ்டப்படுகின்றாய் விருப்பம் இல்லாவிடின் விவாகரத்தை எடுத்தக்கொள் என்றும், ஒரு வருடம் பிரிந்திருந்தால் அதுவே விவாகரத்துப் பெற போதிய சான்றென அறிவுரை கூறுவர். கற்பத்தடை, குடும்பக் கட்டுப்பாடு இவையும் விவாகரத்திற்கு எரியும் நெருப்பிற்கு எண்ணெய் ஊற்றுவது போல் உதவுகின்றன. விவாகரத்துப் பெற்ற ஆணையும், பெண்ணையும் மறுமணம் செய்யவும் சிலர் உடன்படுகின்றார்கள். விவாகரத்துப் பெற்ற பெண்ணிற்கு – அவள் ஒரு தாயானால் – 'Single mother' என அரசாங்கம் பண உதவியும் செய்கின்றது.

சில பெற்றோருமே தங்களுக்குப் பிடிக்காத மருமகனோ, மருமகளோ அமைந்து விட்டால் விட்டுவிட்டு வரும்படி தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல அறிவுரை கூறுகிறார்கள் என்றால் யோசித்துப் பாருங்கள்.

வாழ்ககையில் தினசரி செய்யும் கடமைகளில் ஒன்று போல் விவாகரத்தையும் எடுத்துக் கொள்கிறார்கள். இறுதியில் பாதிக்கப்படுவது அவர்கள் பெற்ற பிள்ளைகளே.

புலம் பெயர்ந்து வந்த எம் மக்கள் எங்கள் கலாசாரப் பண்பாடுகளை முழமையாகக் கைவிடாமலும் பல்லினக் கலாசாரத்தில் உள்ள நல்லவற்றையும் எடுத்து நடந்திருந்தால் விவாகரத்தை ஓரளவு குறைக்கலாம் என்பதே என் கருத்து.

ராணி தங்கராசா

---

## கருத்து 2

### விவாகரத்து அதிகமாக ஏற்படுவதற்கான காரணம், நாம் தமிழராக வாழத்தவறியதா?

ஒருவன் தனி மனிதனாக வாழும் போது பல பிரச்சனைகளும், சவால்களும் ஏற்படுகின்றன. அவற்றுக்கு வழி, தீர்வு காண்பது ஒருபுறம். பின் சோடி சேர்ந்தபின் வேறு பிரச்சனைகளும், சவால்களும் ஏற்படுகின்றன. தெரிந்தோ தெரியாமலோ இந்த திருமணம் என்ற கடலில் விழுந்துவிட்டவர்கள் நாங்கள். எம்மில் பலருக்கும் பலவிதமான அனுபவங்கள் இருக்கலாம்.

தமிழராக வாழ்வதே இங்கு பலருக்கு பிரச்சனையாக இருக்கும்போது, தமிழராக வாழத் தவறியதால் தான் இப்படி நடக்கின்றன என்பது விவாதிப்பது கடினமே. இங்கு நாம் பிறப்பினால் தமிழர்கள் எல்லோரையும் 'தமிழர்கள்' என்று சொல்கின்றோமா? அப்படியானால் தமிழர் என்று சொல்ல விரும்பாத பல தமிழர்களையும் இதில் சேர்க்கவேண்டி ஏற்படுகின்றது. அந்தச் சனத்தொகையில் தான் விவாகரத்து வீதம் அதிகம் என்பது எனது தனிப்பட்ட அவதானிப்பு.

தமிழராக வாழ்வது எப்படி? அதற்கு என்ன பதில்? தமிழ் பேசிவிட்டால் நாம் எல்லோரும் தமிழர்களா? அல்லது எமது நடைமுறை பாவனைகளில் தமிழ் ஜொலித்தால் போதுமா? மொத்தத்தில் இனஅடையளத்திற்கு மொழி, பண்பாடு, கலாசாரம் என்று பல காரணிகள் உள்ளன.

பிரச்சனைகள் வரவது வழக்கம். இப்படி வந்துவிட்ட பிரச்சனைகளுக்கு நல்ல தீர்வு காண முடியாமல் போகுமிடத்து மனச்சஞ்சலம், கோபம், விரக்தி, என்று வேறு பல பிரச்சனைகளைத் தோற்றுவிக்கின்றன. பரஸ்பரம் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு "விட்டுக் கொடுத்தல்" மூலம் பல விடயங்களுக்கு இலகுவாக தீர்வு காணலாம்.
பிரச்சனைகளை வரமுன் உணர்ந்து, தடுக்க, அல்லது தவிர்க்கக்கூடியவர்கள் சிலர்.
பிரச்சனை வந்தபின் தீர்க்க முயலுபவர்கள் ஒரு வகை. பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்காமல் ஒதுங்கியிருப்பவர்களும் உண்டு. எந்தப் பிரச்சனை எந்த ரூபத்தில் வருகின்றதோ? அதற்கேட்ப உரிய சந்தர்ப்பத்தில் சரியான வகையில் தீர்வு காண முனைவது நல்ல தீர்வைக் கொடுக்கும்.

– சிவன், ஷர்த்பீல்ட் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


PARK VIEW
MEDICAL CENTRE
26/12-16 Toongabie Road
TOONGABIE

DR. JEY CHANDRAN DR. THAVA SEELAN

OPEN 7 DAYS
Monday - Friday 8am - 8 pm
Saturday - Sunday - Public Holidays 9am - 4pm

BULK BILLING
* Emergency
* Women's Health
* Antenatal Care
* Minor Surgery
* Pathology Blood tests
* Workers Compensation
* In House Physiotherapy
* X Ray Services Open 7 Days next door
* ECG
* Child Health
* Immunization
* Stress Management
* Allergy Tests

For Appointments Call
9636 7757
Car park spaces available at REAR




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org